egistered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 11 No. 5.

JUN 1938

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௧௧ | வெகுதான்ய ஆண்டு வைகாசித் திங்கள் 1938௵ மே௴ | இதழ் ரு |
|---|---|---|

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| சைவர்க்கு ஒரு நற்செய்தி | ... | ... ௨0௯ |
| திருப்புகழ் | ... | ... ௨௧௨ |
| சகுனம் | ... | ... ௨௨௨ |
| பாவம் | ... | ... ௨௨௯ |
| திருவருட் செல்வம் | ... | ... ௨௩௮ |
| திருவாரூரர் | ... | ... ௨௪௨ |
| தத்துவானுபோகக் கட்டளை | ... | ... ௨௪௮ |

பத்திராசிரியர் : திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1938 தனிப் பிரதி அணா 4.

சிவமயம்

# சமாஜ அறிக்கைகள்

1. சமாஜத்துக்குப் பணம் அனுப்புவோர் தங்கள் தபால் விலாசத்தைத் தெளிவான கையெழுத்தில் மணியார்டர் கூப்பனில் எழுதியனுப்ப வேண்டும். அவ்வாறு சிலர் செய்யாமையால் வேறு நண்பர் கட்கெழுதித் திருத்தமான விலாசத்தைப் பெற்ற பிறகு பத்திரிகையனுப்ப நேரிடுவதால் தாமதம் ஏற்படுகிறது.

2. கோடை விடுமுறைக்கு வெளியூர் சென்றிருப்போர் தங்கள் விடுமுறை விலாசத்தை உடனே தெரிவிக்கவும்.

3 நமது சமாஜ அங்கத்தவரும், கௌணியன் பிரஸ் அதிபரும், சிறந்த சைவப் பற்றுடையவருமாகிய அன்பர் - சைவத்திருவாளர் - காஞ்சிபுரம் - முருகேச செட்டியாரவர்கள் 30-4-1938 பகல் 11½ மணிக்குச் சிவபதம் அடைந்த செய்தியை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்; அவரது ஆன்மா ஆண்டவன் திருவடிப் பேற்றின்பந் துய்ப்பதாக.

4. கொழும்பு விவேகானந்த சபையின் ஆண்டுவிழா 29-5-1938 ல் நடைபெறும். தூத்துக்குடி சித்தாந்த ஆசிரியர் - சைவத்திருவாளர் - ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் தலைமை வகிப்பார்கள்.

---

## கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா

இவ்விழா மிகச் சிறப்பாகத் திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமையில் 15, 16, 17-4-38 ஆகிய மூன்று நாட்களில் நடைபெற்றது. முதல் நாட் காலையில் சங்கத்தலைவர் திரு. தா. வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்கட்குத் "தமிழ் வேள்" என்ற பட்டமும், திரு. வேங்கடாசலம் பிள்ளையவர்கட்குக் "கரந்தைக் கவியரசு" என்ற பட்டமும் வழங்கப்பட்டன. சுவாமிகளுடைய தலைமையுரையும், வரவேற்பு, அறிக்கை படித்தல் முதலியனவும் நிகழ்ந்தன. பிற்பகலில் மாணவர்கட்குப் பரிசு வழங்கப்பட்ட பிறகு வித்வான் - திரு. வெள்ளை வாரணனார் "திருமுறைப் பெருமை" என்பது பற்றியும், திரு. சோமசுந்தர பாரதியாரவர்கள் "தமிழர் ஒழுக்க அடிப்படையறங்கள்" என்பது பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். இரவு "திருநாளைப்போவார்" என்ற நாடகம் நடைபெற்றது. மறுநாட் காலையில் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் "கரந்தைத் தமிழ்க் கல்லூரி" ஒன்றைத் திறந்து வைத்தார்கள். பல பேரறிஞர்கள் வாழ்த்துரை கூறிப் பல

Reg. M. 2330.

OFFICE OF THE REGISTRAR ... JUN 1938 ... MADRAS

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.



| | | |
|---|---|---|
| மலர் கக | வேகுதான்யஆண்டு வைகாசித்திங்கள் 1938௵ மே௴ | இதழ் ரு |



## சைவர்க்கு ஒரு நற்செய்தி

[P. தியாகராஜன், B.A., L.T.]

19-ம் நூற்றாண்டில் பல தமிழ்ப் புலவர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்தனர் என்றாலும், சைவத்திற்காகத் தம் உடல் பொருள் ஆவியாகிய எல்லாவற்றையும் துறந்திட்ட பெரியார் யாழ்ப்பாணத்து நல்லூர் - ஆறுமுக நாவலர் ஒருவர் என்றே சொல்லலாம். அவர் பிறந்த நாளில் சைவம் மங்கிப்போகக் கிருத்தவம் முதலிய பிறநெறிகள் மிகப் பரபரப்புடன் தென்னாடு முழுவதும் பரவிக்கொண்டு வந்தன. கிருத்துவப் பாதிரிமார்கள் தங்கள் சமயத்தைப் பிற மக்களிடையே நுழைப்பதில் பெரியதோர் ஊக்கம் காட்டிவந்தனர். செல்வம் செல்வாக்கு என்ற பல துணைகளைக்கொண்டு ஏழை மக்களைத் தம் நெறியைச் சாரச் செய்தனர்.

2. சைவம் செய்த அறப்பயனாகத் தோன்றிய ஆறுமுக நாவலர் தமிழ் ஆங்கிலம் வடமொழியாகிய மூன்று மொழி

159919



களிலும் திறமைவாய்ந்து, சைவ நூல்கள் எல்லாவற்றையும் தாமே ஓதி உணர்ந்து, பிற நெறியாருடைய நூல்களின் திறத்தையும் அவைகளில் காணப்படும் இழுக்குகளையும் செவ்வையாகத் தெரிந்து, பிறர் தம்முடைய திருநெறியைத் தாக்கினால் தக்க விடையளிக்கும் ஆற்றல் வாய்ந்திருந்தார். கிருத்தவப் பாதிரிகளுடன் பழகி அவர்கள் கையாண்ட நெறிபரப்பும் வழிகளையும் கற்றிருந்தனர். தம்மைச் சார்ந்த சைவர்கள் பாழாகப் பிறநெறி புகக் காண்பதைப் பொறுதவராகிச் சைவத்தை எடுத்து மக்களுக்கு உரைத்திடத் தொடங்கினர்; சொற்பொழிவு, சைவப் பள்ளிக்கூடங்கள் ஆகியவைகளின் வழியாகச் சைவத்தில் மக்களுக்குப் பற்று உண்டாகச் செய்தனர்; பல சைவ நூல்களையும் தமிழ் நூல்களையும் அச்சிட்டனர்; சைவத்தைத் தாக்கியெழுதப்பட்ட சிறு சுவடிகளுக்குத் தக்க மறுப்புகள் எழுதி வெளியிட்டனர். ஆனால் இவைகளோடு அவர் நின்றிருந்தால் சோமசுந்தர நாயகரைச் சைவ மக்கள் மறந்துகொண்டு வருவதுபோல் அவரையும் மறந்துவிட்டிருப்பார்கள்.

ஆனால், நாவலர் சைவத்திற்கு நிலைத்த பணி செய்ய வேண்டி "வைப்பு" ஒன்று திரட்டி வைத்தனர். அவருடைய பெருநோக்கம் கிருத்தவப் பாதிரிமார்போல் சமயத்தைப் பரப்புவதற்காக ஒரு நிலையத்தை ஏற்படுத்தி, அதில் தக்க இளைஞர்களைச் சைவ நூலைக் கற்கச் செய்து, சொற்பொழிவு செய்வதில் அவர்களைப் பழக்கிவைத்து, ஊர் தோறும் சென்று மக்களுக்குச் சைவத்தைக் கற்பிக்கச்செய்ய வேண்டும் என்பது. அதற்காகப் பலரிடத்திலும் சென்று பொருள் தேடினர்; அச்சுக்கூடம் வைத்தனர். தாமும் தமது மாணவரும் எழுதிய நூல்களை விற்றுப் பெற்ற தொகையையும் அதற்கே ஒதுக்கி வைத்தனர். தாம் இல்லற வாழ்வை

R623 21, N28
N38 11-5-6



மேற்கொள்ளாது நின்றனர். பிறதுறையில் கொஞ்சமும் ஊதியம் கருதி எட்டிஅடி வையாதிருந்தனர். இவ்வாறு தந்நலம் விடுத்துத் திரட்டிய பொருளைக் கொண்டு யாழ்ப்பாணத்திலும் தமக்கு உயிர் என நினைந்திருந்த திருத்தில்லையிலும் சைவவிடுதி, பள்ளிக்கூடங்கள் அமைத்து சைவ இளைஞர்களுக்குச் சமயக் கல்வி வழங்கினர். பொருளும் வளர்ந்து வந்தது.

நாவலர் தம்வாணாள் முழுதும் சைவத்திற்கு உழைத்துச் சிவனடிசார, அவர் மாணவர்கள் அப்பொருளைப் பாதுகாத்து அவர்கருத்துக் கிசைந்த வழிகளில் தொண்டு செய்தனர். ஆனால் பின்னாளில் வந்த சிலர் நாவலர் வருந்திச் சேர்த்த பொருள் வைப்பைத் தகாத முறையில் செலவிடவும், அறங்காக்க விரும்பிய சிலர் பெருவழக்கு மன்றத்தில் (High Court) முறையிட்டுக் கொண்டனர். நீண்டநாள் வழக்காடப்பட்டுக் கடைசியாக வழக்குரைப்போர் நாவலர் கோட்பாட்டைப் பின்பற்றிய சைவமக்கள் சிலர் கூடிய அடக்கியாள் குழாம் (Board of Control) ஒன்றை உண்டாக்கி, அக்குழாத்தின்கீழ் ஒரு நம்பிக்கையோனை (Trustee) ஏற்படுத்தி, நாவலர் தாம் என்ன என்ன திருப்பணிகளைச் செய்யவேண்டும் என்று தமது விருப்போலை (Will)யில் எழுதிவைத்தனரோ அவ்விதமே செய்யும்படி தீர்ப்பு செய்திருக்கின்றனர்.

இஃது சைவ மக்களுக்கு ஒரு நற்செய்தியன்றோ! சைவச் செல்வர்கள் சைவநெறியை வளர்ப்பதற்குப் பெரும் பொருள் தர முன்வராத் தாழ்க்கும் இந்நாளில் நாவலர் ஏற்படுத்திய தமிழ்க் கல்லூரியையும் ஒழித்துவிட்டு, அவர் திரட்டிவைத்த பொருளையும் தீநெறியில் செலவிடத்துணிந்ததைத் தடுத்து, சைவத்தை வளர்க்க உதவிய சென்னைப்

பெருவழக்கு மன்றத்தார்க்குச் சைவர் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார். திரண்ட பொருளுடைய நாவலர் வைப்பினைப் பாதுகாப்பது சைவர்களுடைய கடமையாகும். நெறி பிறழாத சைவர்களை அந்த அடக்க ஆள் குழாத்தில் உறுப்பினராக்க முயலவேண்டும்.

# திருப்புகழ்

[S. A. அமிர்தகடேசுவரன் பிள்ளை, வேளாங்கண்ணி.]

உலகத்தின் கண்ணே அண்டசம், சுவேதசம், உற்பிசம் சராயுசத்தோடு எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களைக் கடந்து மானுடத் துதித்தல், கடலைக் கையால் நீந்திக் கரையேறுதலை நிகர்க்கும் எனப்படுவதால், மானுட ஆக்கை பெறல் மிக அரிதெனக் கண்டாம். அதிலும் பூமியில் உற்பவித்தாலும் நான்குவித தெய்வ மறையினை மேற் கொள்ளாத நாட்டில் பிறவாது, சைவசமயத்திற் பிறத்தல் அரிதினு மரிது. அங்ஙனம் சைவசமயத்தினிடம் பிறந்தோர் தெய்வத் தன்மை பொருந்திய தமிழ் மொழியில் இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபறப் பயின்று சிவபிரானை யாப்புறப் பாடி அக்கல்வியாலுறும் பயனை அடைவதே தலையாயகடனும்.

ஒருவருக்குறும் வெறும் பசிப்பிணியினைப் போக்கல் புண்ணியமாகும் ; கல்வி பயிற்றுவித்தல் மிக்க புண்ணியம்; அதனினும் சிவஞானக் கல்வியை உபதேசித்தல் தலையாய புண்ணியமாம். மானிடப் பிறவி வகுத்தது ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக்கெனக் கொண்டொழுகலே சால்புடைத்தாம். மனத்தால் இறைவனை நினைக்கவும், வாக்கால் அவனைத் துதிக்கவும், காயத்தால் அவனை அருச்சிக்கவும் பழகி



வரின் ஆன்மாவின் ஆணவாதி மாசு தம் வலியடங்கி வீடுபேறடைவிக்கும்.

மேற் குறித்த மன மொழி மெய் வழிபாட்டில் மொழியால் வழிபடுவதைப் பற்றி ஒரு சிறிது ஆராயப்புகுவாம்.

நமது சமய குரவர், சந்தான குரவர், ஸ்ரீ அருணகிரிநாதப் பெருமான், குமரகுருபரர் முதலிய சிவஞானிகள் தாம் ஓதியும் ஓதாதுமுணர்ந்த தமிழில் யாப்புறப் பத்திச் சுவை நனிசொட்டச் சொட்டவும் பேரின்ப வீடுபேற்றை உலகோரும் அடைய வழிகாட்டவுமே பாமாலை தொடுப்பாராயினர். அன்றியும் சில தமிழ்ப் பாவலர்கள் தங்கள் அரிய தமிழ் மொழியைக் கொண்டு சிவபிரான்மீது பாடினார்கள். பலர் சிவபிரான் திருவடியைப் புகழாது தம்மைப் போன்றே பிறந்து அற்ப அறிவும் சிறுதொழிலும் சிறுவாணாளுமுள்ள அவத்தர்களைப் புகழ்ந்து பாடி வயிறு வளர்த்தனர். இக் கடையரைக் குறித்து,

"அறிவிலாப் பித்தர் உன்தன் அடிதொழாக் கெட்ட வஞ்சர்
அசடர்பேய்க் கத்தர்நன்றி அறியாத
அவலர்மேற் சொற்கள் கொண்டு கவிகளாக் கிப்புகழ்ந்து
அவரைவாழ்த் தித்திரிந்து பொருள்தேடி"

எனச் சாற்றினர் அருணகிரிநாதப் பெருமான். முற்காலத்தில் வள்ளல்கள் இருபத்தொருவர் நம் நாட்டில் நிலவினர். வரும் பாவாணர்கட்கு அன்னார் குறிப்பறிந்து கொடுப்பவர் முதலெழுவர்; கேட்டதைத் தருவோர் இடை எழுவர். பலமுறைப் பாவாணரை அலையவைத்துக் கொடுப்பர் கடையெழுவர். இப்புலவர்கள் இம்மைப் பயனை மட்டும் அனுபவித்துக் கொண்டு மடிந்தனர். சிவபிரான் திருவடியைப் புகழ்வதால் இம்மைமட்டுமா கிட்டும்! அம்மைச்சிவலோகமுஞ் சித்திக்குமே!

நமது ஆரூரர்:—

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும் சார்கினும் தொண்டர் தருகிலா
பொய்மை யாளரைப் பாடாதே எந்தைபுகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும் எத்தலாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகமாள்வதற் கியாது மையுற வில்லையே"

எனவும் பிறவும் கூறுகின்றனர்.

புலவர்க் கௌடதமான நைடதத்தினை அதிவீரர் பாடி வருகையில், பிறப்பிறப்பிலா குணங்குறியிலா காலமுங் கணக்கு நீத்த கைலை நாயகனைப் புகழாது நம் போன்ற ஒரு நரனை ஏன் பாடவேண்டும் எனப் புறக்கணித்த வரதுங்க மன்னரின் மனோநிலையும் எத்தகைத்து? குழறிக்குழறியும் குமரனைப்பாடு, குப்பாச வாழ்க்கையிற் கூத்தாடும் வீணர்களைப் புகழாதே என்பன சான்றோர் அமுதமொழியன்றோ!

"செப்பரிய கலைகளெலா மறியயனே
முதலான தேவர்க் கோதி
ஒப்புவிக்க அறியாமல் அரனிடத்தே
வளைத்துவளைத் துரையா னின்றேன்
மைப்பரவை தருவிடமும் ஆடரவும்
நீறும் என்பும் அன்பாய்க் கொண்டார்
இப்பெருமை யுடையவரென் புன்கவியும்
பொறுப்பரென வறிந்து தானே"

சிவபிரானைப் புகழ்ந்து அவன்பால் அன்பு பதிந்து உள்ளம் நெகிழ்ந்து என்புருகவே சற்று அழுதுதொழுது பாடாதவர் எடுத்த யாக்கையால் என்ன பயன்! மற்ற நமது சைவ சமயத்திலிருக்கும் தனிச் சிறப்புள்ள சைவஇலக்கியப் பாடலை நாம் பாராயணம் செய்துவிட்டால் அஃது எப்போதும் நமது மனதில் குடிகொண்டிருந்து நாம் நினைக்காவிடினும் நமது நாவிற் பொலிந்து மிளிர்கிறது. நாம் மறப்பினும் நமது நாமறப்பதில்லை. இதுவே நமது தமிழ் மறையின் சில



மாம் தேவாரம் திருப்புகழ் முதலியன நம்மைச் சிவ புண்ணியத்தில் சதா ஈடுபடச் செய்யவந்த சிறந்த வழிகாட்டியாம் என்பதை யாவரும் ஒப்பாதிரார்.

திருப்புகழ் பாடியவரான அருணகிரிப் பெரியார் தாம் இளமையிற் சிவபிரானைப் பாடாது பிறந்து, இருந்து, இறந்துபோம் பொய்யரைப் பாடி மிடி யுண்டதைத் தாம் உன்னுந் தோறும் தம் அறியாமைக்கு இரங்குவார். முருகப்பிரானை விளித்து அப்பாதகத்தை நீக்கியருளக் கெஞ்சுவார்; அழுவார்; தொழுவார்; பல இனிய சொற்களால் பாமாலை தொடுப்பார்.

"ஆசைகூர் பத்தனேன் மனோபத்ம மானபூவைத்து நடுவேயன்
பான நூலிட்டு நாவிலே சித்ரமாகவேகட்டி ஒருஞான
வாசம் வீசிப்ரகாசியா நிற்ப மாசிலோர் புத்தி அளிபாட
மாத்ருகா புஷ்பமாலை கோலப்ரவாள பாதத்தில் அணிவேனோ"

"கோடாத வேதனுக்கு யான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் தண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாதகையும்
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே"

"கொடாதவனை யேபுகழ்ந்து, குபேரனென வேமொழிந்து
குலாவியவ மேதிரிந்து புவிமீதே
எடாதசுமை யேசுமந்து, எணாதகலி யால்மெலிந்து
எலாவறுமை தீரஅன்று னருள்பேணேன்"

"ஓலமிட் டிரைத்தெழுந்த வேலைவட்ட மிட்டயிந்த
ஊர்முகிற் றருக்களென்றும் அவராரென்
றாமரைப் பிரசித்த ரென்று மூடரைச் சமர்த்த ரென்று
மூனரைப் பிரபுக்களென்று மறியாமல்
கோலமுத் தமிழ்ப்பிரபந்த மாலருக் குரைத்தனந்த
கோடியிச்சை செப்பிவம்பில் உழல்நாயேன்
கோபமற்று மற்றுமந்த மோகமற் றுனைப்பணிந்து
கூடுதற்கு முத்தியென்று அருள்வாயே"

எனவும்,

"வஞ்சக லோபமூடர் தன்பொரு ளூர்கள்தேடி
மஞ்சரி கோவைதூது பலபாவின்
பண்புகழ் பாரிகாரி என்றிசை வாதுகூறி
வந்தியர் போலவீணில் அழியாதே"

எனவும்,

அறியாதாரை அறிந்தாரெனவும் கொடாதாரைப் பாரியெனவும் சிவஞானம் சற்றுமிலாரைச் சிவஞான தேசிகரெனவும் புகழ்ந்து அவரடிபணிந்து ஒதுங்கி என்ன விடையிறுப்பாரோ என ஏங்கியும் இச்சை பல சொல்லியும் பொருளீட்டல் எத்துணை கீழ்மையாகும் என்பதைப் புலவர்கள் அறியார்களா ?

"வாழ்வெனு மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பித்
தாழ்வெனுந் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறலரிது சால வுயர்சிவ ஞானத்தாலே
போழிள மதியினானைப் போற்றுவார் அருள்பெற் றாரே"

என வருவதும் காண்க. வறுமை வரினும் சிவத்தைப் பேணில் அவத்தை நீக்கானோ என்னும் அறிவும், எதுவரினும் அவனே கதியென இடைவிடா அன்புபற்றி யொழுகலுமே சைவரிடம் காணப்படும் சீலமாம்.

"தோரண கனக வாசலின்...............
.............................அரசாகி வாழினும்
வறுமை கூறினும் உனதுவார் கழலொழிய மறவேனே"

என்னும் திருப்புகழானு மறிக.

நமக்கேதேனு மிக்க இடுக்கண் வந்துழி, அத்தகைய இடுக்கண் தங்கட்கு வரக் கூடிய அமையங்களில் அவற்றை நீக்க வழிகாணாது நம்மிலும் நனிவிழிக்கும் நம் போன்ற ஒரு மாசுற்ற ஆன்மாவை நாடாது எல்லாம் வல்ல பரமனடிகளே அக்கவலைக் கடலைக் கடக்குவிக்கும் அரும்



புணை எனவோர்ந்து பரசிவத்தைப் பாடல்களால் பாடுவதே சைவ சமயத்தின் தலையாய கொள்கையாம். நமது அருணகிரியார் திருப்புகழில்,

"வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்ட வெறாதுதவு                பெருமாளே."

எனவும்,

"வரதா மணிநீ எனவோரில்
வருகா தெது தான் ?"

எனவும், சுந்தரர் தேவாரத்தில்,

"பாடுவார் பசிதீர்ப்பார் பரவுவார் பிணி களைவார்."

என வருவனவும் உணரற்பாலன. எனினும், சிவானுபூதியே மெய்மையாம் செல்வம் என இடைவிடாது சிவத்தியானத்தி லாழ்ந்துநிற்கும் சிவஞானிகளைப் புகழ்வதிலும் அவர்கள்மேல் பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்கள் பாடுவதிலும் புலவர்கள் ஈடுபடின் நன்மையே. ஏனெனின், சிவத்தின் வணக்கத்திற்கும் சிவனடியார் வணக்கத்திற்கும் வேற்றுமை யின்றாம்.

"சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே
யிரும்பேவல் செய்து நாளும்
அவனடியார் திறத்தொழுகா வாக்கையே
மறஞ்செவிகண் ணாதி யைந்தும்
பவனடியா ரிடைச்செலுத்தாப் படிவமே
பாவைமறை பரவுஞ் சைவ
தவநெறியல் லாநெறியே பவநெறியென்
றளியளாய்த் தளர்வாள் பின்னும்."

எனப் பரஞ்சோதியாரும் கூறுகின்றனர். அன்றியும்,

"தேசிகர் தம்மையும் சிவநேசர் தம்மையும்
ஈசனெனவே உளத்துள்ளெண்."

என்பது சைவசமய நெறி. நமது நம்பியாரூரரும் 'தில்லைவா

மூந்தணர்தம் அடியார்க்கு மடியேன்' என அடியவரைப் புகழ்ந்துள்ளார்.

முற்காலத்தில் சமயாசிரியர்களை யல்லாமல் தெய்வத் தன்மை பொருந்திய பல புலவர் பெருமான்கள் மிளிர்ந்தார்கள். அவர்கள் வாய்விட்டுப் பாடும் ஒவ்வொரு பாவிலும் பாட்டுடைத் தலைவனின் அரிய குணங்கள் முதலியவற்றைச் சற்றும் மாறுபாடின்றி உள்ளது உள்ளவாறே கூறிப் போந்தார்கள்.

அருணகிரி நாதர் முதலிய சைவப் பெரியார்கள் கூறிய பிரபந்தங்களில் காணப்பெறும் ஒவ்வொரு பாவும் சிவமணங் கமழ்வதாகவே யாக்கப்பட்டனவாம். மானிடம் பாடுவதை நமது சைவமட்டும் கண்டிக்கிற தென்னலாகாது. சைவத் தோடு பலவகையிலும் ஒத்த வைணவ சமய ஆழ்வார்களும் பலமாகக் கண்டனம் செய்கின்றார்கள். கம்ப நாட்டாழ்வார், இராமன் திருச்சரிதையினைப் பாடுங்கால், பாட்டின் இடை இடையே தன்னை வளர்த்த தாதையைப் போன்றவரான வெண்ணெயூர் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து கூறியிருத்த லால் இராமாயணத்தை வைணவ சமயிகள் தம் திவ்வியப் பிரபந்தங்களோடு சேர்த்துக் கொள்ளவில்லையாம். இன்னும் ஆழ்வாராதிகள் வாக்குகளும் தக்கசான்றுகளாம் என்பதைக் காணலாம்:—

“சொன்னவில் வாழ்புலவீர் சோறுகூ றைக்காக
மன்னாத மானிடரை வாழ்த்துதலான்—என்னாகும்
என்னுடனே மாதவனை ஏத்தும் எனும்குருகூர்
மன்னருளால் மாறும் சன்மம்.”

“ஆனாத கீர்த்தித் திருவேங் கடத்துறை அச்சுதநீ
தானா தரிக்கத் துதித்தே னல்லேனித் தாரணியில்
மேனாளின் மானிடம் பாடிய நாச்சுத்த மேறுதற்கு
நானாசை யாற்றுதித் தேன்உன் புண்ணிய நாமத்தையே.”



“வண்ணங் கலிவஞ்சி வெண்பா வகவல் வகைதொடுத்தோர்
வண்ணங் கலிகெட வேண்டுமென் றேமக்கண் மாட்டுரையேன்
வண்ணங் கலிகடல் போல்வா னரங்கன் வருளச்செல்வன்
வண்ணங் கலியன் புகழ்தா னெனக்கென் று மாநிதியே.”

“பிறைமாலை யாலொரு பேதைநைந் தாளப் பேதைக்குநின்
நறைமாலை தாவென்று மானிடம் பாடிய நாவலர்காள்
நிறைமாலை யற்றுக் கவிமாலை யாணினை யீர்திருவெள்
ளறைமாலை வேங்கடத் தேயுறை மாலை யரங்கனையே”

“வேங்கட மாலை யவியா மதிவிளக் கேற்றியங்கம்
ஆங்கட மாலைய மாக்கிவைத் தோமவன் சேவடிக்கே
தீங்கட மாலைக் கவிபுனைந் தோமினிற் சீரியதே
யாங்கட மாலை யிராவத மேறி யிருக்கு மதே”

“ஆசு கவிக்கு நிகரெனக் கில்லையென் றற்பரைப்பூ
ஆசு கவிக்குவில் வேள்வடி வாயறி வாலகத்திய
ஆசு கவிக்கு வலயமன் றாவென் றாற்றியிரந்
ஆசு கவிக்கும் புலவீர்! புகழ்மின் அரங்கனையே,”

என வருவதாலும் தெற்றென விளங்கும். வெறும் மனிதரை நாடிக் கவிபாடி வயிறு வளர்த்தல் மிகத்தீதெனவும் அன்னதால் பிறவித்துன்பம் பெருக்கமாமெனவும் கொள்ளக்கிடக்கிறது. ஒரு புலவர் ஒருவனைக் கொடையாளன் என உயர்வு படுத்திக்கொண்டு புகழ அதற்கு அவன் மறுமொழி மாறு பாடாகக்கூறும் செய்யுள் பின் வருமாறு:—

“வாருநீர் யாரென்ன வித்துவா னென்னவும்
மதிமோசம் வந்த தென்றே
வாய்குளறி மெய்யெலா மிகநடுக் குற்றுநீர்
வந்தகா ரியமேதெனச்
சீருலா வியகாம தேனுவே தாருவே
சிந்தாமணிக்கு நிகரே!
செப்பு வசனத்தரிச் சந்திரனே எனலும்
சினந்திருக னுஞ்சிவந்தே

யாரைநீ மாடேல் மரமென்று சொன்னதும
லாலரிச் சந்திர னென்றே
யடாதசொற் சொன்னேயே யார்க்கடிமை யாகினேன்
யார்கையில் பெண்டுவிற்றேன்
தீருமே இந்தவசை என்றுரைசெய் வெகுகொடிய
தீயரைப் பாடி னொந்தேன்
திருமன்றுள் நடுநின்று நடமொன்று புரிகின்ற
தென்தில்லை நடராசனே"

என வருவதால் புல்லியர் புலவர் பெருமையை யறியார் ஆத லால் சிவபரமாகவே பாடல் செய்ய வேண்டும். அருட்பிர காசர் தெய்வமணி மாலையில், 'எந்தைநினை வாழ்த்தாத பேயர் வாய் கூழுக்கும் ஏக்கற்றிருக்கும் வெறும்வாய்' எனவும், 'ஐயநின் சீர்பேசும் செல்வர்வாய் நல்லதெள் ளமுதுண்டு வந்த திருவாய்' எனவும் கூறிப்போந்தமையை அறிவோமாக. புலவர்கட்கு எய்ப்பில் வைப்பாகக் கொள்ளக் கிடக்கும் திருவருளைப் பாமாலையால் புனைந்து பெறுது வேறுபட்ட வகையில் கொள்ள எத்தனித்தல் என்னே! 'பாடலுக்கே பரமனிரங்குவான்' என்பதை மறத்தலாகாது.

ஒருகால் இரட்டைப் புலவர் காடுமலையும் சுரம்பும் அலைந்து பசியால் மெலிந்து வருந்திய ஞான்று, ஒருவர் பாதி வெண்பா பாட மற்றொருவர் மறு பாதியும் பாடி முடித்த னர்; அது வருமாறு:—

"குன்றும் வனமும் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றும் தீராதோ—வொன்றும்
கொடாதாரைச் சங்கென்றும் கோவென்றுஞ் சொன்னால்
இடாதோ அதுவே யிது."

இறைவனைப் பாடவேண்டியே புலமையை ஊழ்வினை கூட்டி வைத்தது என்பதே பொருத்தமுடையதாம். கவி பாடுபவர் இரு தன்மையாளராகவே முற்காலத்தும் நிகழ்ந்தனர் என்



பதை நமது அருணகிரி யண்ணல் மிக அழகாகத் தமது திருப்புகழில் கூறியுள்ளார்:—

"குருவி எனப்பல...................."எனவும்.

"நிகமமெனி லொன்று மற்று நாடோறும்"

எனவும் தொடங்குவன. ஒரு தன்மையாளர், நான்மறை யின் பொருளையும் ஆன்மா தன் இன்ப நிலையடையக் கூடிய வகையையும் விளக்குவர். மற்றவர் கல்வி நிரம்பாது பரி, கரி, கனகச் சிவிகை, தண்டுவெண் குடையாய விருதுகளைத் தாங்கி வீண் புகழ்மாலையியற்றி நாளவம் போக்குவர்.

ஆகையால் தற்காலத்திலும் மிகச் சீரும் சிறப்புடனும் விளங்கும் தமிழ்ப்புலவர்கள் செய்யத்தக்க பணிகள் பலவுள. பாடசாலைகளில் சமயக் கல்வியைக் கற்பிக்கலாம். இறைவனது திருவிளையாடல்களைத் தாம் அறிதிறக்கற்ற தமிழ் மணி களில் கோத்து இறைவனது திருவடியிற் சாத்தலாம். இன் னும் எவ்வளவோ சைவ இலக்கியங்கள் உரைகாண்டற் கியலாதிருக்கின்றன. சித்தாந்த உண்மைகள் தெரியாது மயங் கிக் கிடப்போர் பலர். அவற்றை யாராய்ந்து திருந்திய முறை யில் செப்பம் செய்யலாம். தற்காலத்தில் சைவ சமய உணர்ச்சியற்ற சிலரின் குருட்டுக் கடாக்களுக்கு விடை தெளிந்த முறையில் எழுதி அச்சிட்டு விடுக்கலாம். பொரு ளுடையோர் இச்செயலில் ஈடுபடின் மிகு புண்ணியமாம். அப்போதுதான் நமது சமய உண்மை புறச்சமயத்தாருக்கும் விளங்கும். நம்மை எள்ளார். நம்மவர்களும் கண்விழிப்பார் கள், சைவமும் ஓங்கும். ஆகையால் புலவர்கள் நம் சைவ சாத்திரங்களை யொட்டி இனிய பாடல்கள் பாடுவார்களாக. இதுவே திருப்புகழாகும்.

"படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே."

# சகுனம்

[அ. மு. பரமசிவானந்தம்]

'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது தொல்காப்பியரது மொழி. எனவே, உலகத்தில் வழங்கும் வழக்கெல்லாம் உயர்ந்தோர் வழக்காகவே கொள்ளப்படும். கற்றறிந்த நல்லறிவாளர் பலர் உலகில் வாழில் உலகம் உயர்நிலை எய்தும் என்பதே இதன் கருத்தாகும். உலகில் எத்துணை எண்ணிக்கையற்ற மக்கள் வாழ்ந்திருந்தாலுங்கூட உயர்ந்தோர் இன்றேல் ஒரு வழிப்படாது - உருக்குலைந்து - ஒழுங்ககன்று - இவ்வுலக நிலையும், கலையும், பிறவும் குன்றும் என்பது துணிபு.

இவ்வாறு பெரியோர் வயப்பட்ட உலகில், அப்பெரியோர் கூறிய மொழிப்படி - வள்ளுவர் முதலிய தெள்ளிய அறிஞர்களது அறிவுரைப்படி - மக்கள் வாழ முயல வேண்டும். அவ்வாறு வாழ்வார் ஒரு சிலர். ஆயினும் பல்லோர் மேலோர் சொல்லறிந்தும் அறியாமை வயப்பட்டு முகத்தில் கண்கொண்டு நோக்கி - அகக்கண் அற்றவராகி மாயை வயப்பட்டு மயங்குகின்றனர். அவ்வாறு மயங்கும் நிலையிலே தான் மக்கள் உண்மை வழி உணராதவர்களாய் வழியில் சகுனம் பார்த்தல் முதலிய செய்து மனம் வழி சென்றனர். பல சகுனங்கள் ஏற்படுத்திய நிலையில், அறிவற்ற மக்கள் பல்லோர் அவ்வழி மயங்குகின்றனர். படித்த மக்கள் பலர் நிறைந்துள்ள அமெரிக்கா முதலிய மேல்நாடுகளிலும் சகுனம் என்னும் பேய் வாய்ப்பட்டு, மக்கள் தம் காலத்தைக் கழிக்கின்றனர். பண்டைத் தமிழர் நாட்டிலும் 'குடைநாட்கோள்' 'வாள்நாட்கோள்' என்று நாட்கோள் நிலையம் நடைபெற்று வந்தன. அரசன் பிற நாட்



டானோடு போர்க்குச் செல்லும்பொழுது நாளும் கோளும் அறிந்து அந்நன்னாளிலே, குடையையும், வாளையும் புறவீடு விட்டுப் பிறகுதான் போர்க்குக் குறித்த நாளில் புறப்படுவான். இவைகளை,

"நெல்லணிய செவ்வே னெடுந்தேர் நிலைபுகக
கொய்யுளைமா நெல்களிறு பண்விடுக வையகத்து
முற்றக் கடியரணம் எல்லா முரணணிந்த
கொற்றைக் குடைநாட் கொள."

"வாணாட் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடும் பேமதிற்—பூணா
ரணிகொள் வனமுலையா ராடரங்க மேறிப்
பிணிகொள் பேயோடும் பெயர்த்து."
—(புறப் - வெ. மா. 96, 9)

என்று ஐயன் ஆரிதனார் கூறியுள்ளார். இதன் கருத்தென்னை? உழிஞை வேந்தன் தன் வெற்றிக்குடையைப் புறவீடுவிட்டவனாக, பகைவர் குருதியாடிச் சிவந்த வேல்களும், தேர்களும், குதிரையும், யானையும் நிலை கெட்டுப்போக, பகை அரண்கையாயிற்றென்பது மற்றும் வாளினைப் புறவீடுவிடப் பகைவர் நாட்டு மதிலில் பேய்கள் தமக்கு உணவு கிடைத்தனவென்று பேராரவாரம் செய்தன என்பதும் பெறப்படுகின்றது. பிற்காலத்து வந்த புலவர்களிற் சிலரும் இக்கொள்கையை வலியுறுத்துகின்றனர். அரப்பளீச்சுர சதகம் என்னும் நூலிலே சகுன வரிசை காணப்படுவது விநோதமானதாகும்.

"சொல்லரிய கருடன் வானர மரவ மூஞ்சூறு
சூகரங் கீரி கலைமான்
தூய பாரத்வாஜ மட்டஎலி புள்கோகை
சொற்பெருகு மரவு மாந்தை

வெல்லரிய காடி காட்டான் பூனை புலிமேல்
விளங்குமிகு நாயுடும்பு
மிகவுரைசெய் இவையெலாம் வலமிருந் திடமாகில்
வெற்றி யுண்டு அதிக நயமாம்.
ஒல்லையில் வழிப்பயண மாகுமவர் தலைதாழ்த்தல்
ஒருதுடை யிருத்தல் பற்றல்
ஒருதும்மல் ஆணையிடல் இருமல் போகே லென்னல்
உபசுருதி சொல்லிவை யெலாம்
அல்லறவு நல்லவல் லென்பர் முதியோர் பரவு
மழகனெம தருமை மதவேள்
தலைவிதிர்த் தெதிர்வருக ஒற்றைப் பிராமணன்
தவசி சந்நியாசி தட்டான்
தனமிலா வெறுமார்பி மூர்க்கரை புன்விரகுதலை
தட்டைமுடி மொட்டைத் தலை.

கலன் கழிமடந்தையர், குசலவன் செக்கான்
கதிதகிக தைல மிவைகள்
காண எதிர்வரலொணு நீர்க்குட மோர்க்கூடை
கனிபுலா னுபய மறையோர்
நலமிகு சுமங்கலை, கிழங்கு, சூதகமர்
நாளும் வண்ணான் அழுக்கும்
நலைபெறுகு பாற்கலச மணிவளையல் மலணல
நாடி யெதிர்வர நன்மையாம்."

என்பனபோன்ற செய்யுட்கள் பலபல இடைக்காலத்தில் புகுந்துகொண்டன.

இவ்வாறுய சகுன பாகுபாடுகள் நாளேறவேறப் பலபல வகையாகப் பகுக்கப்பட்டன. முற்காலத்தே இத்தகைய பாகுபாடு தமிழ்நாட்டில் மிகவாகக் காணப்படவில்லை. தனித் தமிழர், அரசு செலுத்திவந்த ஆதிகாலத்தில் இத்தகைய சகுனங்கள் இருந்தனவாகக் காணப்படவில்லை. ஆயினும் நாளேறவேற இவை வளர்ச்சியுற்றன. இவைகட்குக் காரணமும்



ஒருசிலவுள. 'கந்தழி' என்னும் ஒரே ஒப்பற்ற கடவுளை வழிபட்ட பழந்தமிழர் மனதில் இச்சிறு அற்பச் செயல்கள் புலப்படவில்லை. ஒப்பற்ற இறைவன் முந்நிலையில் செத்துச் செத்துப் பிறக்கும் தெய்வங்களின் செயலும் பிற சகுனங் களும் பயன்பட மாட்டா என்று அவர்கள் கொண்டார்கள். ஆனால் பிறகு நீரையும் நெருப்பையும் ஞாயிற்றையும் பிற வற்றையுமாகப் பல தெய்வங்களை வணங்கி வந்தவர் நம் தமிழகத்தில் தலைகாட்டலாயினர். அதுமுதல் அவர்கள் நாகரிகமும் உடன்பரவலாயிற்று. அதிலிருந்து இன்னும் சிறுதெய்வங்களும், சகுனங்களும் புறப்பட்டு, ஒன்றான இறைவனது இறைமைத் தன்மைக்குப் பங்கம் விளைப்பனவாயின. நம் தமிழ் நாட்டில்தான் இவ்வாறெனில், மேனாடுகளில் இவைபுகுந்த விதமும் வரலாறும் விளக்க மாகத் தெரியவில்லை. ஏழைமக்களை - ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் - என்று வழிபட்டு ஒத்துவாழ்ந்த மக்களைச் சிறுதெய்வங்களாலும் சகுனங்களாலும், பிறவற்றா லும், பிரித்துப் பிரித்து நம் நாட்டை ஒன்றுமில்லாதாக்கின மக்களின் மதியை என்னென்றுரைப்பது ?

இனி இச்சகுனம் என்னென்பதையும், இதனால் பய னுண்டா என்பதையும் ஒரு சிறிது நோக்குவாம். நற்செயல் கருதிபுறப்படும் ஒருவன் மேலே கூறியபடி தனக்கு முன், ஒரு பொருள் எதிர்ப்படின் அதை அபசகுனமென்று ஒதுக்கி வைக்கின்றான். அவ்வாறு சகுனம் எதிர்ப்படின், அவன் சென்ற காரியம் சித்திக்காது என்று சித்தம் செய்கின்றான். இச்சகுனத்தோடு 'இராகுகாலம்' என்பதொன்றையும், சேர்த்து இடர்ப்படுத்துகின்றனர். அந்தோ! என்ன மதியீனம்! இறைமைத் தன்மையோடு எப்பொருளாயும் இயங்கும் இறை வனை இழுக்குப்படுத்துகின்றனர். மற்றொன்று நோக்கற்பாலது. தமிழ்நாட்டு அரசனொருவன் மாற்றான்மேற்படை யெடுத்துச்

செல்லும்போது வாளையும் குடையையும் புற வீடு விடுவான் என்று கண்டோம். அப்படிப் போர் தொடுக்கும் அரசர்களும், நாளும் கோளும் கொண்டு நல்ல வேளையில் தம்தம் வாளையும் குடையையும் புற வீடு விடுவார்களாயின் இருவருமன்றோ வெற்றி பெறவேண்டும். இருவரும் வெற்றி பெறுதல், உலகொவ்வா ஒரு செயலன்றோ! அவ்வாறு ஒருவர் தோற்று, ஒருவர் வெற்றி பெறுதலாம் செயலிலே நாட்கோள் இருவருக்கும் என்ன பயனுடைத்தாம். இறைவன் செயற்படி வெற்றி பெறுவான் வெற்றியும், மற்றவன் தோல்வியும் பெறுவானென்பதும் துணியப்படும்.

வள்ளுவர் தமது வளமைச்சான்ற குறளில் 'ஊழையும் உப்பக்கங்காண்பர் உலைவின்றித் தாழாதுஞற்று பவர்' என்று கூறியதன் கருத்தென்ன? பண்டை வினைப்பயன் என்று, கொண்ட உறுதி தொலைந்து சகுனத்தடையாலும், பிறவற்றாலும், மயங்கிக்கிடக்கும் மகன் முன்னேறமாட்டான். இச்சகுனம் மனிதனது மாண்புறுசெயலை மங்கச்செய்யுமே ஒழிய வளரச்செய்யாது என்பது ஒருதலை. இத்தகைய சகுனத்தை மீறி இறைவனும் பரம்பொருள் அருள் வழி நின்ற அடியார்கள் தம் அனுபவத்திலேயே கண்டு மகிழ்ந்து பாடிய பாடல்கள் சில குறிக்கத்தக்கனவாகும்.

ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் வேதாரண்யத்தில் மறைகளால் பூட்டப்பட்ட கதவுகளைத் திறக்கவும் மூடவும் பாடிய பின்பு சின்னாள் அங்குதங்கி இருந்தனர். அதுபோது பாண்டிய நாட்டிலே சைவம் நிலைகெட்டு, சமணமதம் பரவி அரசனும் அம்மத மேற்கொண்டான். கோப்பெருந் தேவியாரும் மந்திரி குலச்சிறையாரும் தவிர மற்றவர்கள் யாவரும் அம்மதவழி ஒழுகினர். ஆனால் அவ்விருவரும் சிவனடி பணியும் சைவ மதத்தைக் கைவிடாதிருந்ததோடு பாண்டிய நாட்டிலே மறுபடியும் திருநீற்றொளி பரப்ப வேண்டுமென்று எண்ணி



னர். எண்ணி ஒற்றர்களை இப்பெரியார் இருந்த இடத்திற்கு அனுப்பினர். நாவுக்கரசர் சமணரது செயல்களை அறிந்தவர். சம்பந்தரோ இளையர். ஒற்றர் வந்து உரைத்ததைக் கேட்ட பிள்ளையார் உடனே செல்வேன் என எழுந்தார். பக்கத்துள்ள நாவரசர் 'நாளும் கோளும் நன்னிலையிலில்லை; ஆகவே செல்லற்க' என்று தடுத்தார். எனினும் நற்றமிழ் விரகர் அதற்கிசைந்தாரில்லை; ஒன்றான இறைவன் அருள் நிலைக்கும்போது இக்கோள்களும், சகுனமும், நாளும் என் செய்யும் என்று கூறிப் புறப்பட்டார். அப்போது பிள்ளையார் கூறிய மொழி நோக்கற்பாலது.

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
ஆசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே!"

இதன் கருத்தென்னை? நிலைபேறுள்ள இறைவன் அடியவர் மனத்திடை மன்னினான் ஆதலின் அவ்வடியார்க்கு நாளும், சகுனமும், கோளும் ஒன்றுஞ் செய்யாதென்பதாகும். தற்காலத்துச் சிறந்து விளங்கும் கவியாகிய அருணகிரியாரும்,

நாளென்செயும் வினைதான் என்செயும் எனைநாடி வந்த
கோளென்செயும் கொடுங் கூற்றென்செயும் குமரேசரிரு
தாளும் சிலம்பும் தண்டையும் சதங்கையும் சண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே!

என்று கூறியுள்ளார்.

இவ்வாறெல்லாம் ஆண்டவன் அருள்பெற்ற ஆன்றோர், நாள், சகுனம், கோள் இவைகளை வெறுத்துக் கூறுவதோடு அவைகளது தீச்செயலும் நற்செயலும் எவ்வளவு தூரம் உண்மை என்று எண்ணற்கிடமில்லை என்பதையும் நன்றாக விளக்கிக் காட்டி யுள்ளார்கள். இருபதாம் நூற்றாண்டின் இன்தமிழ்க் கவியாம் பாரதியார்,

நெஞ்சு பொருக்குதில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்
அஞ்சி அஞ்சிச் சாவார்—அவர்
அஞ்சாத பொருளில்லை—அவனியிலே
வஞ்சனை பேய்க ளென்பார்—சொல்அந்த
மாத்தி லென்பர் இந்தக் குளத்தி லென்பார்
துஞ்சுவது முகட்டி லென்பார்—சொல்லி
துயர்ப்படுவோர் எண்ணிப் பயப்படுவார்.''

என்று இந்நாட்டு மக்களது அறியாமையை எண்ணியெண்ணி வாடுகின்றார். ஆகவே சகுனம் என்பது ஒரு விரும்பத்தகாத- ஆன்றோரால் வெறுக்கப்பட்ட ஒரு செயலென்று தெரிகின்றது. சகுனம் பார்த்துப் பார்த்து ஒருவன் ஒருகாரியம் செய்ய எண்ணுவானாயின் அவன் அக்காரியத்தை என்றும் செய்து முடிக்கமாட்டானென்பது திண்ணம். எவ்வாறாயினும் சகுனம் அவனுக்கு இடர்ப்படுதலையே விளைவிக்கும். தவிர நல்ல சகுனம் பார்த்துச் சென்ற சிலர் தாம் சென்ற காரியத்தில் வெற்றி பெறாது, வீணே வருந்துவதையும் சகுனம் பாராது சென்றவர்கள் தம் செயலில் தேர்ச்சி பெறுவதையும் உலகிடை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆகவே இந்த அறியாமைத்தனமான அருவருக்கத்தக்கதான சகுனம் மக்களுக்கு எவ்வாறு கெடுதல் விளைவிக்கும் என்பதுணரலாம்.



சகுனம் பார்த்தலென்னும் பாழ்வழக்கம் என்று நாட்டிடை நீங்குமோ அன்றுதான் நாடு நலம்பெறும். கந்தழி வணக்கத்தாராகிய தமிழர்மரபில் தோன்றிய ஒவ்வொருவரும் இவ்வற்பச் செயல்களை நீக்க முன்வாராது நிற்பாராயின், இச்சகுனத் தீச் செயல் மேன்மேல் வளர்ந்து நம் நாட்டை இன்னும் அடிமைநிலையிலாழ்த்தும் என்பது உண்மை. ஆகவே, உண்மைத் தமிழர்களே! வீறுகொண்டெழுங்கள். இச்சகுனச் செயல்களை நீக்குங்கள். நாடும் நாமும் சுகமடைவோம்.

# பாவம்

[ஜி. சுந்தரமய்யர்]

ஒவ்வொருவனும் சாகும் சமயத்தில் பயப்படுவதாக நூல்களில் படித்து அறிகிறோம். சாவது நிச்சயம் என்பது ஒவ்வொருவனுக்கும் தெரிந்திருந்தும் அச்சம் கொள்வது என்ன காரணத்தால் என்று யோசிக்கவேண்டும். உலக பாசத்தினால் அந்தப் பயம் ஏற்படக் கூடுமோ என்று யோசித்தால் அது சரியான காரணம் என்று தோற்றவில்லை. ஏனென்றால் உயிருடனிருக்கும்போது ஒவ்வொருவனும் உலக விஷயங்களில் அகப்பட்டுக் கொண்டு அவஸ்தைப்படும் பல சமயங்களில் ''தெரியாத்தனமாய் இந்தச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டேன்'' என்று பெருமூச்சுவிட்டுப் புலம்புகிறான். ஆகவே உலக பாசத்திலிருந்து விடுபடும் சமயத்தில் பயத்திற்குக் காரணம் பாசமாயிருக்க நியாயமில்லை. ஆனால் அச்சமயத்தில் ஒவ்வொருவனும் செய்த பாவம் அவனுக்கு ஞாபகத்திற்கு வருவதால் தருமராஜனுடைய நியாயஸ்தலத்தில்

அடையவேண்டிய தண்டனைகளை உத்தேசித்துப் பயம் உண்டாகிறது என்று சொல்வது சரியான காரணம் என்று ஒப்புக் கொள்ளலாம். சாகும் தருவாயில் தைரியமாயிருக்க வேண்டுமானால் பாவம் செய்யாமலிருந்திருக்க வேண்டும். இவ்வுலகத்தை விட்டுப் பிரயாணம் செய்யும் காலத்தில் மனம் அசையாமலிருக்க வேண்டாமா? பாவம் செய்தவர்கள் நரகக் குழியில் தள்ளப்பட்டுத் தண்டனைகள் விதிக்கப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறது.

“கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடிக் காரர் வலிகயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தில்
மல்லாக் கத்தள்ளி மறித்து வைப்பாரே.”

—திருமூலர் 198, 199

பாவம் என்றால் என்ன? பாவம் செய்யாதிருத்தல் நலம் என்று அறிந்தாலும் ஒவ்வொருவனும் அதைச் செய்து கொண்டேயிருக்கிறானே! ஒருவனுக்கும் பாவம் செய்ய வேண்டும் என்கிற இச்சையில்லை. இன்பத்தை அடைய வேண்டும் என்பதே அவன் நோக்கம். அப்படியிருந்தாலும் ஒவ்வொருவனும் செய்யும் காரியங்கள் பலவும் பாவமாகவே ஆகிறது. இதற்கு என்ன காரணம்? இந்த விஷயங்களை ஆராய்வது வீண் காலம் என்று தள்ளிவிடலாம் என்று உத்தேசித்தாலோ அதுவும் திருப்திகரமாய் இருப்பதில்லை. இது ஆச்சரியத்தை விளைவிப்பதோடு தர்ம சங்கடமாயுமிருக்கிறது.



பாவம் புண்ணியத்திற்கு விரோதமானது. பாவம் கெடுதலைச் செய்கிறது. பாவம் தருமத்திற்கு மாறுபட்டது. ஒவ்வொருவனுக்கும் பாவம் என்பது இன்னதுதான் என்று நன்றாய்த் தெரிகிறது. மனசாட்சி என்பது ஒவ்வொருவனிடத்திலும் இருக்கிறது. எதை அது பாவம் என்று தெரிவிக்கிறதோ அதுதான் பாவம். சுபாவத்தில் மனசாட்சிக்கு விரோதமாய்த் தோன்றுவதுதான்; அதாவது மனம்வேண்டாமென்று மறுப்பதுதான் பாவம். மனச் சங்கடம் இல்லாமல் ஒன்றைச் செய்வது பாவமில்லை. ஒன்றையும் செய்யாமலிருப்பதோ சாத்தியமான காரியம் இல்லை. “செய்வன திருந்தச் செய்; நுண்ணிய கருமமும் எண்ணித் துணி” என்கிற நீதிவாக்கியங்கள் இவ்விஷயத்திலுள்ள மர்மத்தைப் போக்கக்கூடியனவாயில்லை. செய்வதையோ அல்லதுசெய்ய வேண்டியதையோ ஆசையில்லாமல் ஒருவன் செய்தால் தோஷமேற்பட நியாயமில்லை. பாவம் என்பது ஏற்படாது. இதற்காக அல்லவோ கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கு நிஷ்காம கர்மத்தை உபதேசம் செய்தார். கருமத்தை ஆசைப்பட்டு செய்யக்கூடாது. கருமத்தின் பலனையும் ஈசனுக் கர்ப்பணம் செய்ய வேண்டும். இது தான் பாவம் செய்யா திருப்பதற்கு வழி. பாவத்திற்கு முக்கிய காரணம் ஆசை. காமம் என்று சொல்வதும் இதைத்தான்.

காமம் என்பவன் ஒரு விரோதி. அவன் விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஒன்றை உத்தேசித்து ஒரு கருமத்தைச் செய்யும்போது நியாயவழியில் கிடைக்காவிட்டால் நியாயமில்லாத வழியில் உத்தேசித்ததை அடையப் பிரயத்தனம் செய்வதுதான் பாவம். அப்போதுதான் காமன் கையில் சிக்கிக்கொள்கிறோம். அப்போதும் கிடைக்காவிட்டால் கோபம் வருகிறது. இதுதான் குரோதம். இப்பேர்வழியினால் தூண்டப்பட்டு உத்தேசித்த

தற்குத் தடையாயிருந்தவனுக்கோ அல்லது தடைசெய்த வஸ்துவிற்கோ தீங்கு செய்யும் எண்ணம் தோன்றுகிறது. காமம் கோபமாய் முடிகிறது. காமத்தின் விளைவு குரோதம். இரண்டும் ஒருவகையில் ஒன்றேயாகும். காமம் திரும்பிக் குதித்துப் பாய்வதே குரோதமாகும். இவைகள் இரண்டும் மனிதனுக்குக் கொடிய விரோதிகள். இவைகளை அனுகாமலிருக்கவே மனிதனுக்குப் புத்தியை ஈசன் அளித்திருக்கிறார்.

நல்லதைச் செய்ய முடியாமற் போயினும் கெடுதலை செய்யாமலிருக்க வேண்டும். "ஈதல் அறம்; ஈவது விலக்கேல்." கொடுக்காவிட்டாலும் ஒருவன் கொடுப்பதைத் தடுக்காமலிருக்கத்தான் கூடாதா? இப்பாவத்தையாவது செய்யாமலிருக்கக் கூடாதா? கொடையாளி நமக்கு நெருங்கிய நண்பனாயிருப்பான். தக்காருக்குத் தான் தருமம் செய்யவேண்டுமென்ற இதோபதேசத்தை நம்மையறியாமலே சொல்ல வேண்டிவந்து விடுகிறது. என்ன செய்கிறது? எல்லாம் சங்கடமாயிருக்கிறது.

ஏன் பாவத்தைச் செய்கிறோம்? காமம் முக்கியகாரணம் என்று காட்டியாய்விட்டது. பழைய வாசனையால் அதாவது பழக்கத்தால் பாவத்தைச் செய்யத் தூண்டப்படுகிறோம். தீமைகளைச் செய்வதில் இரண்டு கெடுதல்கள் ஏற்படுகின்றன. கெட்ட பழக்கமும் கெட்டவர்கள் சங்கமும் கூடாது. பொய் சொல்லுதல் தவறு என்று யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. சொன்ன பொய் ஒன்று; பிறகு அதை மெய்யாக்கப் பல பொய்கள். அவைகளும் தவறுகள் தானே. வேடிக்கைக்குக் கூடப்பொய்யுரைத்தல் கெடுதல். பாதகங்கள் யாவையென்பதைத் திருமூலர் தெளிவாய்க் காட்டியிருக்கிறார்.



"கொலையே களவு கட்காமம் பொய்கூறல்
மலைவான பாதக மாமவை நீக்கித்
தலையாய சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்கு
இலையாம் இவை ஞானானந்தத் திருத்தலே"

எதைக் கொண்டு பாவம் செய்கிறோம்? மனம், வாக்கு, காயம் இவைகள் மனிதனுக்கு முக்கியமான உறுப்புகள். பணம் என்பது மற்றொரு அனுகூலமான சாதனம். யோசித்துப் பார்த்தால் இந்த நான்கினாலும் தான் பாவம் செய்கிறோம் என்ற முடிவிற்கு வரலாமெனத் தோற்றுகிறது. மனதால் கெடுதலை எண்ணியும், வாக்கால் கெட்டவார்த்தைகளைச் சொல்லியும், தேகத்தால் கெட்ட காரியத்தைச் செய்தும் காலத்தைப் போக்குகிறோமே என்ற உணர்வு ஏற்படவேண்டும். செல்வத்தை நல்வழியில் உபயோகப்படுத்தாமல் பாவகருமங்களில் செலவு செய்கிறோம். கெட்ட பழக்கத்தை விட்டுவிட்டு நல்ல பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். மேற்சொன்ன நான்கையும் நல்ல வழியில் திருப்பவேண்டும்.

நல்ல வழி யாது? ஆன்ம லாபத்தைத் தரக்கூடிய கருமங்கள் தான் நல்ல வழி. இதுவே தருமம். இவ்வுலகத்திலும் மற்ற எல்லாவிடங்களிலும் மதிக்கப்பட்டதும் மதிக்கக் கூடியதுமான பொருள் தருமம்தான். இறந்த பிறகு கூட வருவது ஒருவனுடைய நல்வினையும் தீவினையும்தான். தேகத்தை இவ்விடமே விட்டுப்போகிறோம். பணமும் கூட வருவதில்லை. கூடுவிட்டு ஆவிபோகும் இடத்தில் பணத்தைக் கொண்டு தப்புவதற்கு யாதொரு உபாயமும் செய்ய முடியாது.

பாவத்தைச் செய்யாதிருந்தால் இறக்கும் சமயத்திலும் கவலையில்லை. போனவிடத்திலும் பயமில்லை. நல்ல

வழியில் வாழ்நாளை செலவழித்திருந்தால் சவுகரியங்களும் கிடைக்கும். இதற்குச் செய்யவேண்டியது என்ன ?

மேலே சொன்ன நான்கையும் கொண்டு தருமத்தைச் செய்யவேண்டும். அதர்மத்திற்கு விரோதமானது தருமம். ஒவ்வொருவனுக்கும் அவனுக்குரிய தருமங்கள் சாத்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. தருமங்கள் அநாதிகாலமாய் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை அனுசரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஒருவன் தருமத்தை ஏற்படுத்துவதோ அல்லது உண்டு பண்ணுவதோ சாத்தியமான காரியம் என்று தோற்றவில்லை. மகான்களாகிய சமயகுரவர்களும் தருமத்தின் வழி நின்று உலகுக்குக் காட்டினார்களே யொழிய தருமத்தை ஏற்படுத்தியதாக அவர்கள் சொல்லவே யில்லை. தருமத்தை நிலை நிறுத்தினார்கள். தருமம் யாதெனத் தெளிவுபடுத்தினார்கள். இக்காலத்தில் எல்லாவற்றையும் தலைகீழாக்கி இது தான் தருமம் என்று இறுமாந்து கிடக்கும் பேரறிவாளர்களை ஒதுக்கி வைத்துவிடல் நலமெனத் தோன்றுகிறது.

எந்த இடத்திலும் எந்த சமயத்திலும் யாவருக்கும் உதவக் கூடியது ஈஸ்வர நாமம்தான். கீதையில் நாராயணன் நரனுக்குச் சொல்லி யிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. "பாபம் செய்து விட்டதாகக் கிலேசப்படாதே; என்னை அடைக்கலம் புகுந்தால் நீ பயப்பட வேண்டியதில்லை" என்ற அருள் வாக்கை மறவாமலிருப்பது கடமையாகும்.

தைரியத்தைக் கைவிடாமல் வாக்கால் ஈசன் நாமத்தைச் சொல்லவேண்டும். நாணமில்லாமல் பலமாய்ச் சொல்லலாம். மெதுவாய்ச் சொல்லலாம். "சொல்லும்நா நமச்சிவாயவே" என்ற பழக்கத்தை வளர்க்க வேண்டும். தன்னை யறியாமல் தானே ஒருவன் விருத்தியாய்க்கொண்டிருப்பதை உணரலாம்.



மனதால் ஈசனைத் தியானம் செய்யலாம். மனது நிம்மதி அடையும். அசைவற்று மனமானது நல்வழியிற் செல்லும்.

தேகத்தை ஈஸ்வர சன்னிதானத்தில் கட்டை போல் நிற்கப் பழக்க வேண்டும். தேவ சன்னிதியில் பணியும் வழக்கம் நன்மையைச் செய்யும். இதற்கு சங்கோஜப்பட்டால் அகம்பாவம் விடவில்லை என்பதைத்தான் நிரூபிக்கிறது. இறுமாப்பு ஒழிய வேண்டுமானால் தண்டம் சமர்ப்பிப்பதை முதல் காரியமாக்கிக் கொள்ள வேண்டும்.

பணத்தாலும் தருமம் செய்ய எத்தனிக்க வேண்டும். எளியவனும் தருமம் செய்யலாம். ஒரு பைசாகூட கொடுப்பது முடியாத காரியம் என்று ஒருவன் சொன்னால் அதை நம்பமுடியுமா ? பைசாகூட இல்லாமல் தவிக்கும் காலம் ஒருவனுக்கேற்படலாம். உள்ளபோது பைசாகூட கொடுக்க இஷ்டமில்லாமலிருக்கும் புத்திசாலிகளையும் நாம் காண்கிறோமல்லவா ! கொடுத்தல் ஒரு நல்ல காரியம், இளமையிலே இப்பழக்கம் பயின்று இவ்வழியில் செல்ல முயலவேண்டும். இப்பழக்க மேற்பட்டு விட்டால் அதனாலாகும் நன்மைகள் பல.

இம்மாதிரி மேலே காட்டியபடி நான்கையும் நல்ல வழியில் பழக்கிவிடின் பெறும் பேறுகள் பலவாம். பயம் என்பது ஓடி ஒளியும். பாபத்தைச் செய்ய மனம் எத்தனிக்காது. பிறகு கவலையே யில்லை. தரும வழியில் செல்லப் பயிற்சி ஏற்படும். தருமத்தை மறவாமல் சித்தம் நாடும். இயற்றும் கருமங்களெல்லாம் நன்மையையே தரும். பேர், புகழ், கீர்த்தி இவைகள் எல்லாம் அவனிடத்தில் குடிகொள்ளும். பிறகு அவனைவிட பாக்கியவானை வேறு யாரைச் சொல்லுவது ?

அவனே உலகத்தாருக்கு விளக்கைப் போலாகிறான். பாவமில்லாதவன், தோஷமில்லாதவன், களங்கமற்றவன் உலக உபகாரியல்லவா? அவனே நல்லவன், "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்கிற சத்திய மொழியின் உன்னதத்தை உணராமலிருக்க முடியுமா? பாப மற்றவன் புண்ணிய வானல்லவோ? பாபத்தைக் கனவிலும் செய்ய எண்ணப்படாது. ஆசையில்லாமல் கருமத்தைச் செய்யவேண்டும். எல்லாம் இறைவன் செயல் என்று நம்பிச் சும்மாயிருத்தல் நலம். அவனன்றி அணுவும் அசையாது. கடமைகளைச் செய்யப் பிரயத்தனம் செய்யவேண்டியதைத் தவிர பலனை எதிர்பார்த்தபடி காண முடியவே முடியாது. மனுஷ்யதருமம் இன்னதென்று தெரிந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டியதே யொழிய மற்று என்ன செய்யப் பிரயத்தனப்படுவது?

பாவத்தின் பலன் கஷ்டம். கஷ்டப்பட ஒருவனும் விரும்ப மாட்டான். பாவத்தைச் செய்யத் தூண்டுவது காமம். காமத்தை வெல்வது கடினம் தான். நல்லவழியில் திரிகரணத்தையும் பணத்தையும் திருப்பிவிட்டால் காமன் என்கிற கொடியசத்துரு இருக்கயிடமின்றி அலறி ஓடிவிடுவான். நெருப்பில் கட்டைகளைப் போடப்போடப் பரவுமே யொழிய அணையாது. நெருப்பைப் போன்றது காமம். ஆசைக்கு அளவே கிடையாது; முடிவுமில்லை. ஆசையைத் திருப்திபடச் செய்யமுடியாது. ஆசையை முற்றிலும் ஒழிக்கவும் முடியாது. ஆகவே ஆசையை நல்லதனமாய் நல்ல வழியில் திருப்ப வேண்டும். உலகத்தையே அடைந்து விட்டாலும் மற்றொன்றை அடைய ஆசை தூண்டும். ஆகையால் ஆசையை விடயங்களில் விடுவது தவறானமார்க்கம். ஹிருதயம் பகவானுக்குரிய இடம்; அந்த இடத்தைப் பரிசுத்தமாய் வைக்கவேண்டும். ஆத்மாவில் பகவான் உறைகின்றார்.



அவரைக் காண ஆசையை வளர்க்க வேண்டும். அவரை அடைய ஆசையைத் தூண்டவேண்டும். இந்த ருசியைக் கண்டு விட்டால் ஆசைவேறொன்றிலும் நாடாது. மனம் பூரித்து நிலையிலமரும். இந்த ருசி தெவிட்டாது. கரையாதகற் கண்டுபோல் அழியாத நற்சுவையைக்கொடுக்கும். காமனுக்கு இதைவிட்டு வேறிடம் நகரவும் தோன்றாது. ஆத்ம சுகத்தில் மனம் லயித்துவிட்டால் மனிதன் அடைய வேண்டிய பேற்றை அடைந்தவனாவான். பட்டினத்துப் பிள்ளையார் பாடல் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

"மாயப் படலம் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றனன் பெற்றலும்
என்னையுங் கண்டேன் உன்னையுங் கண்டேன்
நின்னிலை அனைத்தும் கண்டேன் என்னை
நின்னைக் காணா மாந்தர்
தன்னைக் காணாத் தன்மை யோரே."

இதுவே "பரிசுத்த ஆவி"யைப் பெறுதலாகும். ஆன்ம தரிசனம் செய்த பின்னரே சிவ தரிசனம் சித்திக்கும். பாவம் எங்கே? பறந்தோடிப் போய்விட்டது. "அன்னைபோல் அருள்மிகுத்து மன்னுஞான வரதனே, என்னையே எனக்களித்த நின்னையானும் நினைவனே" என்கிற மெய்ம்மொழி வாழ்வில் கைகூடும். பாவம் கிட்டேயும் என்றும் அணுகாது. சௌக்கியமாய் வாழலாம். சுகமாயிருக்கலாம். பவரோக வைத்தியநாதனே முதற்பொருளே வாழி வாழி. சுபம்.!

# திருவருட் செல்வம்

[சைவப்புலவர் - மணிவாசகம்]

அறிவுக் காட்சியால் உணர்ந்தோரால் விரும்பப்படும் பேரின்பத்தை யளிக்கும் நற்பொருள் என்பது: திரு, அருள், செல்வம் என்னும் மும்மொழியாலாய இச்சொற்றொடரின் பொருள்.

சக்திகள் பல வேறு வகைப்படினும் மூன்று சக்திகளே சிறந்தனவாதல் போல செல்வம் பலவகைப்படினும் மூவகைச் செல்வங்களை தலை சிறந்தனவாக அறிஞரால் கருதப்படும். அவை கல்விச் செல்வம், பொருட் செல்வம், அருட் செல்வம் என்பன.

## கல்விச் செல்வம்

கல் என்பது பகுதி, வி, தொழிற் பெயர் விகுதி. கல் என்றால் தோண்டு என்று பொருள். எதைத் தோண்டுவது? அறிவை. அறியாமையால் கட்டுண்ட நாம் மாயா காரியமாகிய இவ்வுலகில் அறிவைத் தோண்டுவதே கல்வியாம். பள்ளியில் ஓரளவு கற்று முடிப்பன கல்வியாகா. வாழ்நாள் முழுவதும் கற்பது பிறவி முழுவதும் கற்பது. ஒரு பிறவியில் கற்றதிலிருந்து அடுத்த பிறவியில் தொடர்ந்து கற்பது. இதனாலன்றோ திருவள்ளுவப் பெருந்தகையார்,

“ஒருமைக்கட் டான் கற்றகல்வி
எழுமையும் ஏமாப்புடைத்து”

என்று அருளுகிறார்.

எதுவரை கற்பது? ஞானம் பெறும்வரை; ஞானமே அகக்கண் எனப்படும். கண் என்று சிறப்பித்துக் கூறப்படுவதும் அது. இதனை,



“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்”

என்னுந் தமிழ்மறை வற்புறுத்தும். கற்றோர் தேவரோடொப்பர். ‘தேவரே கற்றோர்’ என்னும் சிறுபஞ்சமூலம். தேவரைப் ‘புலவர்’ என்னும் வழக்கு நோக்கத் தக்கது. ஞானம் தோன்ற அற உணர்வு மிகும். அற உணர்வு நம்மை அறவோனுக்கும். அறவோனுக்குத் தொண்டனுக்கும். கல்வியின் பயன் கடவுளை வணங்குதலன்றோ?

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின். (குறள்)

## பொருட் செல்வம்

பொருள், அகம் புறமென இருவகைப்படும். அகமாவது, மன உணர்வால், எல்லா வகையானும் ஒத்த தலைவனும தலைவியும் காதலாற் கலந்து எய்தும் இன்பம். புறத்தில் ஈட்டும் பொருளும் இவ்வின்பத்தின் ஆக்கத்தின் பொருட்டே. இந்த இன்பச் சுனையுள் அன்பு மலரும், அன்பே அருளை ஈனும்.

புறமாவது செல்வச் சிறப்பைத் தெரிவிப்பதேயாம், அச்செல்வம் கற்பன கற்றுச் சிறக்கச் செய்த தவத்தால் ஆவது. தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம் என்பர் மேலோர். இதன் பெருமையைப் ‘பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்’ என்ற முதுமொழி நன்கு விளக்கும். இச்செல்வம் இல்லையேல் இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாயும் வேண்டாள். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பர் செந்நாப் போதார். ஆகவே இதனை முயன்று திரட்ட வேண்டும். எங்ஙனம் திரட்ட வேண்டும்? பழியஞ்சித் திரட்ட வேண்டும். தீவினை விட்டீட்டல் பொருள் என்பர் ஔவையார். தொகுத்ததைப் போற்ற வேண்டும். பொருளாட்சி போற்றாதார்க்கில்லை என்பர் நாயனார். பொருள்

கல்விக்கும் அருளுக்கும் ஊன்றுகோல் போல்வது. பொருளால் 'ஈத்துவக்கும் இன்பமாம்' ஒப்பிலின்பத்தை எய்தலாம். இசைபட வாழலாம். அருள் பொருளால் செம்மை பெறும். பொருளை அருளின் செவிலித்தாய் என்பர் ஆன்றோர்.

> அன்பென்னும் அன்பீன் குழவி பொருளென்னும் பொதுமறை
> செல்வச் செவிலியால் உண்டு.

## அருட்செல்வம்

எல்லாச் செல்வங்களுள்ளும் சிறந்தது இதுவே 'அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்' என்பது உணர்க. அருள் என்பது தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்களிடத்தும் செலுத்தப்படும் உள்ள நெகிழ்ச்சி. ஏதேனும் ஒருயிர் வருந்துமிடத்து தன்னுயிர் வருந்துவதுபோல எண்ணும் ஈரமுடைமை. உலகில் இன்பமும் துன்பமும் நிறைந்திருக்கிறது. உயிர்களாகிய நாம் துன்பத்தை வெறுக்கிறோம். இன்பத்தைவிரும்புகிறோம். எந்நாளும் இன்புற்றிருக்கத் துணையாவது யாது? என ஆராய்கிறோம். உடனே, துன்பத்தைச் செய்தவன் துன்பமடைகிறான். இன்பத்தைச்செய்தவன் இன்புறுகிறான். வினை விளைவித்தவன் வினையறுக்கிறான். தினை விளைத்தவன் தினையறுக்கிறான் என்னும் முதுமொழிகள் தோன்றி 'அருளாள்க, அருளே துணை' என்று அறிவுறுத்துகிறது. 'அல்லல் அருளாள்வார்க்கில்லை' என்று முப்பானூல் முழங்குகிறது. தன்னுயிர் இன்புற மன்னுயிர் ஓம்பல் வேண்டும். அதுவே தலைசிறந்த நல்லறமாம். நாம் பிற உயிரைத்துன்புறுத்தப் போமிடத்து, நம்மினும் வல்லமையுடையோன் நம்மைத்துன்புறுத்த வருங்கால் நாம் அஞ்சுமாற்றை எண்ண உடனே அருள் தோன்றும். அருளுடையார் போற்றத்தகுந்த சிறந்த அறங்கள் இரண்டு. அவை புலாலுண்ணாமையும் கொல்லாமையுமாம். 'அருளாட்சி ஆங்கில்லை ஊன்றின்பவர்க்கு' என்பர் தெய்வப்புலவர். கொல்லாமை மேற்கொண்டால் வாழ்நாள் நீடிக்கும். அதனால் மெய்ஞ்ஞானம்பெறலாம், வீடடையலாம்.



> கொல்லா விரதம் குவலய மெலாம் ஓங்க
> எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சைபராபரமே. (தாயுமானார்)

## திருவருட் செல்வம்

ஒருவன் கற்பன கற்று, பொருள் பெருக்கி, நலந்துய்த்து, அன்பு வளர்த்து, அருளுடையனாய் இசைபட வாழ்வதே இவ்வுலக இன்பமாம்.

இனி இந்தக் கல்வியும், பொருளும், புகழும் கொடுப்பது எது? பரமன் திருவருளன்றோ? ஆன்றோர் இதனையன்றோ திருவருட் செல்வம் என்றார். ரோதயித்திரி, வைஷ்ணவி, கலையித்திரி என்னும் மூன்று சக்திக்கும் தாயகமாய் விளங்கும் பராசக்தியே போல, கல்வி, செல்வம், அருள் என்பனவற்றிற்குத் தாயகம் திருவருளேயாம். திருவருள் என்பதற்குப் பேரின்பத் திருவையுடையானது அருள் என்று பொருள். இதனைச் 'சென்றடையாத திருவுடையான்' என்னும் தேவார அடி இனிது விளக்கும். அருள் என்பது இறைவன் நம்மாட்டுக் கொண்ட பெருங் கருணையேயாம். நாம் எல்லோரும் பந்தத்தினின்று நீங்கி வீடுபெற்றுப் பேரின்பம் துய்க்கவேண்டுமென்பதே திருவருட் குறிப்பு. இவ்வருளாலன்றோ உலகம் வாழ்கிறது. இதனைக் காரைக்கா லம்மையாரும் அருளே உலகெல்லாம் ஆள்விப்பது என்று விளக்கியருளினர். இறைவன் 'கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி'யன்றோ? 'செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலத்தா'னன்றோ? அருளுருவன்றோ? அருளாய செல்வ'னன்றோ? அவ்வருளை இன்றி வாழமுடியுங்கொல்? தேக்கிய செந்தேன் துளிக்கும் வாக்காளராய அருணகிரியார் 'அருள்தாராய்', அருள் பெறுவ தெந்நாளோ?' என்று

வேண்டுவதும், புகலிவரு பிள்ளையார் 'அழை யாமே அருள் நல்குமே' என்று வேண்டுவதும் திருவருள் பெற்றாலன்றி உய்வில்லை என்று விளக்குகிறது. வேண்டினால், 'வேண்டுவார் வேண்டுவதே' ஈவோனாய இறைவன் அருள்புரிவன். அவ்வருளை எப்படி வேண்டுவது? அழுது அழுது பாடிப் பரவி வேண்டுவது. ஞானசம்பந்தர் அழுதல்லவா பெற்றார்? நாமும் அழுவோம். பாடுவோம். பரவுவோம். அருள் பெறுவோம். செல்வராய்த் திகழ்வோம். வாழ்க திருவருள்.

'செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே'

# திருவாரூரர்

[P. தியாகராஜன், B.A., L.T.]

## VIII

### சுந்தரரும் புறச்சமயங்களும்

*மதியணி செஞ்சடைக் கனியை மன்றுள் நடம்புரி மருந்தைத்*
*துதியணி செஞ்சுவைப் பொருளிற் சொன்மாலை தொடுத்தருளி*
*விதியணி மாமறை நெறியு மெய்ந்நிலை யாகம நெறியும்*
*வதியணிந்து விளங்க வைத்த வன்றொண்டப் பெருந்தகையே.*

**—சிதம்பரம் - இராமலிங்க அடிகள்**

ஆறு சமயம்:— சுந்தரர் நாளில் புறநெறிகள் பல இருந்தனவேனும், எதுவும் தமிழ் நாட்டில் செழித்து இருந்ததாகத் தெரியவில்லை. அப்பர் சம்பந்தர் நாளில் எங்கும் சமண் கூட்டங்களை நிறைந்து சைவத்தைத் தூற்றி வந்தன. அவர்களைச் சம்பந்தப் பெருமான் தலையெடுக்கவொட்டாமல் செய்தார். அதனால் சுந்தரர் காலத்தில் சமண சாக்கியர்கள் பல ஊர்களில் அருகி வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது.



சமண் சாக்கியர்களைத் தவிர்த்து சுந்தரர் ஓரிடத்தில் ஆறு சமயங்களைக் குறிக்கின்றார். திருப்புன்கூர்ப் பத்தில் (55) "அறிவினால் மிக்க அறுவகைச் சமயம் அவ்வவர்க்கங்கே யாரருள் புரிந்து * * கேட்டு * * கொடுத்த - செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன் செழும்பொழிற் றிருப்புன்கூ ருளானே" என்று பாடியுள்ளார். இதில் 'அறிவினால் மிக்க அறுவகைச் சமயம்' என்ற தொடர் எந்தெந்த சமயத்தைக் குறிக்கின்றது என்பது ஆராயத்தக்கது. சைவர்கள் பொதுவாக உட்சமயங்களாகிய (1) பாடாணவாத சைவம் (2) பேதவாத சைவம் (3) சிவசமவாத சைவம் (4) சிவசங்கிராந்தவாத சைவம் (5) ஈசுவர வவிகாரவாத சைவம் (6) சிவாத்துவித சைவம் எனும் ஆறையும் குறித்ததாகக் கொள்கிறார். (வேறெந்த விடத்திலும் சுந்தரர் அறுசமயத்தினைக் குறித்ததாகக் காணப்படவில்லை). சட்தரிசனம் என்று வடமொழியாளர் கூறும் அறிவு நூல்களாகிய (1) தருக்கம் (2) மீமாம்சை (3) ஏகான்மவாதம் (4) பாஞ்சராத்திரம் (5) சாக்கியமதம் (6) யோகமதம் ஆறையும் குறித்ததாகவும் கொள்ளலாம். ஆனால் அவைகள் அறிவினால் மிக்கவையாகிலும் கடவுள் இல்லையென்று அவைகளில் சில பேசுதலினாலும், சுந்தரர் ஆறுமதங்களில் உள்ளவர்க்கும் சிவபிரான் ஆரருள் புரிகின்றனர் என்று கூறுதலினாலும் உட்சமயம் ஆறினையே குறித்ததாகக் கொள்வதே பொருத்தமெனத் தோன்றுகிறது.

2. அகப்புறச் சமயம்:—அகப்புறச் சமயத்தைச் சேர்ந்தவரும் சிலர் தமிழ் நாட்டில் உறைந்து வந்தனர் என்று தெரிகிறது. திருக்கடவூர் மயானம் (53) எனும் தேவாரத்தில் "பணிமேலிட்ட பாசுபதர்" 'பஞ்சவடிமார்பினர்' என்று சிவபெருமானைக் குறித்தல் பாசுபதரும் மாவிரதியரும் சிவபெருமானை இக்கோலத்துடன் வணங்கி வந்ததனால் போலும்.

3. புறப்புறச் சமயங்கள்:—பௌத்தம் சமணம் ஆகிய இரண்டையும் சேர்த்துச் சேர்த்துப் பல விடங்களில் குறிக்கின்றார். சமண் சாக்கியர் சோழநாட்டில் பல ஊர்களில் உறைந்து வந்தனர். ஆனால் அவர்கள் வலிகுன்றி யிருந்தனர். அப்பரும் சம்பந்தரும் இச்சமயங்களோடு போராடி அவைகளை அழித்துவிட்டபடியால் சுந்தரர்க்கு அவர்களுடன் சொற்போர் புரியும் வேலையில்லாமல் போயிற்று. அதனால் தான் அவர் வரலாற்றில் சமணர் பௌத்தர் முதலியோருடன் வழக்கிட்ட நிகழ்ச்சி ஒன்றும் காணப்படவில்லை.

4. சமண் சாக்கியர் அந்நாளில் தீய ஒழுக்கமுடையவராக இருந்தனர் என்பது அவர் பாடல்கள் தெரிவிக்கின்றன. நாட்டியத்தான் குடிப் பதிகத்தில் (15) "குண்டாடிச் சமண் சாக்கியப் பேய்கள், கொண்டாராகிலும் கொள்ளக் கண்டாலும், கருதேன் எருதேறுங் கண்ணா நின்னலது அறியேன்" என்னும் திருநாகேச்சுரத் தேவாரத்தில் (99) "குண்டரைக் கூறையின்றித் திரியும் சமண் சாக்கியப் பேய், மிண்டரைக் கண்ட தன்மை விரவாகியதென்னை கொலோ" என்றும் பாடினார். இங்கு சமண் சாக்கியரைக் குண்டர் பேய் என்று பேசுவதனால் அவர்கள் ஒழுக்கம் குன்றியவராக இருந்திருத்தல் வேண்டும். அவர்கள் நடக்கை வெறுக்கக் கூடியவைகளாக இருந்தனால் அவர்கள் நல்ல நெறியைக் கைக்கொண்டாலும் அவர்களைப் பொருளாகக் கருதமாட்டார் என்று நம்பிகள் கூறுவதிலிருந்து அவர்கள் எவ்வளவு தாழ்ந்த நிலையடைந்து விட்டனர் என்பது அறியலாகும். அவர்கள் கொள்கையைப் பின் பற்றலாகாதென்பதைத் திருமறைக் காட்டுப் பதிகத்தில் (71) 9-ம் பாடலில் "குண்டாடியும் சமணாடியும் குற்றுடுக்கையர் தாமும், கண்டார் கண்ட காரணம் அவைகருதாது கைதொழுமின்" என அறிவுச் சுடர் கொளுத்தினார். மேற்குறித்த பாட்டில் 'குற்றுடுக்கையர்' எனக் கூறப்படுபவர் எவரோ? பொதுவாகப் பௌத்தர் நீண்ட உடை பூண்டவர் என்றும் சமணர் உடையில்லாதவர் என்றும் பேசப்படுவர். இங்குச் சமணரைக் குற்றுடுக்கையர் என்று கூறினதால் இவர்கள் சிறு கூறை உடுத்து இல்வாழ்ந்தவராக இருக்க வேண்டும். சமணத் துறவிகளே கூறையின்றித் திரிந்தவர்.



இத்துறவிகளைப் பற்றித் திருமண்ணிப் படிக்கரைத் தேவாரத்தில் (22) "வெற்றரைக் கற்றமணும் விரையாது விண்டால முண்ணும் துற்றரைத் துற்றறுப்பான் முன்னவாடைத் தொழிலுடையீர்" எனும் பாடலில் 'வெற்றரைக் கற்றமண்' என அழைக்கின்றார். இவர்கள் ஆடையின்றித் திரிந்துகொண்டு இருந்தனர் என்பதும் ஆனால் கல்வியில் தேர்ந்தவர் என்பதும் அறியக் கிடக்கின்றன.

5. சிவபிரானைப் பழித்தல் :—சமணர்கள் சிவபிரானைப் பழித்துப் பேசும் வழக்கமுடையவராக இருந்தார்கள் என்பது சில பாடல்கள் வழியாகத் தெரிந்துகொள்ளலாம். 33-ம் பதிகத்தில்,

"நமண நந்தியும் கருமவீரனும் தருமசேனனு மென்றிவர்
குமண மாமலைக் குன்றுபோல் நின்று தங்கள்கூறையொன் றின்றியே
ஞமண ஞாஞண ஞாணஞோணமென் றோதி யாரையும் நாணிலா
அமணராற் பழிப்புடையரோநமக் கடிகளாகிய வடிகளே."

என்ற பாடலில் இதனைக் குறித்தார். சமணர்கள் பெரும்பாலும் வைத்துக்கொள்ளும் பெயர்கள் நந்தி, வீரன், சேனன் எனும் முடிவை உடையன போலும். மேலும் நமணநந்தி, கருமவீரன், தருமசேனன் என்பன பதவிப்பெயர் அல்லது பட்டப் பெயராக இருக்குமோ என்னவோ தெரியவில்லை. ஏனெனில் அப்பருக்கு அவர் சமணத்தில் தலைமை பூண்டபோது தருமசேனன் எனும் பட்டம் சூட்டினதாக அவர் வரலாற்றில் காணப்படுகிறது. இப்பாடலில் அவர்கள் நாணமின்றி உடையணியாமல் திரிந்ததையும் நின்றுகொண்டு ஞமண ஞாஞண

ஞோணவென மறைச்சொற்களை உருவிடுவதையும் குறித்தனர். ஞகர வகையெழுத்தில் பல பயனற்றவை என நினைக்கும் சிலர் அவ்வெழுத்துக்கள் மறைமொழியில் எவ்வாறு கையாளப்படுகின்ற தென்பதையறியவும். இன்னும் 'முடிப்பது கங்கை' என்னும் பதிகத்தில் (44) "கரிய மனச்சமண் காடியாடு கழுக்களால் எரிய வசவுணுந்தன்மையோ" என்ற பாடலில் அறியாமையோடு கூடிய சமணர் எனும் காடியாடு கழுக்கள் சிவபிரானை வைதனர் என்று சொல்கிறார். சமணரைக்கழுக்கள் என்று அழைப்பது நோக்கத்தக்கது. சிலர் கழுகு இறகுகளைக் கையில்கொண்டதால் கழுக்கள் எனப்பட்டார் என்பர். ஆனால் சுந்தரர் அவர்களைப் பேய்கள் என்றும் கழுக்கள் என்றும் குண்டர், மிண்டர் என்றும் கூறுவதிலிருந்து சிவபிரானை மனங்கொண்டபடி வைதுகொண்டு அவர்கள் தெய்வம் இகழ்தல் என்னும் தீய பண்புடையவராய் இருந்தனர் என்பது வெளிப்படை. இத்தீய குணமே அவர்கள் அழிந்தொழிந்து போவதற்குக் காரணமாகவும் இருந்தது எனலாம். இன்னும் திருவாழ்கொளிப்புத்தூரில் (57) "இருந்துண் தேரரும் நின்றுண் சமணரும் ஏசநின்றவா" என்றனர். இங்கேயும் சமணரும் பௌத்தரும் சிவபிரானைப் பழித்தனர் என்பது தெரிகிறது. இப்பாட்டிலிருந்து தெரிந்துகொள்ளும் மற்றொன்று சமணர்கள் நின்றுகொண்டும், பௌத்தர் இருந்துகொண்டும் உணவுகொண்டனர் என்பது.

6. சமணத்தைச் சுந்தரர் பொய்ச்சமயம் என்றே கருதினர். 'நம்பி' என்ற திருப்பதிகத்தில் (63) 'பொய்ச்சமண் பொருளாகி' என்றனர். சமணமும் பௌத்தமும் பயனற்ற நெறிகள் என்பதைத் திருத்தினைநகர் தேவாரத்தில் (64) "நமையெலாம் பலர் இகழ்ந்துரைப்பதன் முன் நன்மையொன்றிலாத் தேரர்புன் சமணஞ் சமயமாகிய தவத்தினார் அவத்தைத் தன்மை விட்டொழி மனனே" என்று தமது நெஞ்சிற்கு அறிவுறுத்தும் முகத்தான் பௌத்தம் நன்மையொன்றையும் தாராதென்பதையும் சமணம் புன்னெறி என்பதையும் தாம் கண்டு அதைப் பிறர் தெரிய இப்பொய்ச் சமயங்களை விட்டொழிக்க வேண்டும் என்று பாடலில் குறித்தார்.



7. சமணர் வீண்வழக்குப் பேசுபவர்கள் என்பதையும் ஒருசில பாடல்களில் குறிக்கின்றனர். திருச்சுழியல் (82) தேவாரத்தில் "குண்டாடிய சமணாதர்கள் குடைச்சாக்கியரறியா, மிண்டாடிய வதுசெய்தது வானால்வரு விதியே" எனும் பாடலில் சமணர் அறிவிலிகள் என்பதும் பௌத்தர் மதச் செருக்கால் பீடிக்கப்பட்டவர் என்பதும் தெரிகிறது. மேலும் கோயிற்பத்தில் (90) "மோடுடைய சமணர்க்கும் முடைபுடைய சாக்கியர்க்கும் மூடம்வைத்த, பீடுடைய புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே" என்றனர். இதில் சமணர்கள் அறிவிலிகள் என்பதையும் சிவபிரான் பௌத்த சமணங்களை அறிவு மயக்கமுடையவராக இருக்கும்படி செய்திட்டனர் என்பதையும் பௌத்தர் உடல் நாற்றம் உடையவர்கள் என்பதையும் எடுத்துச் சொன்னார்.

8. சமணர் ஊன் உண்ணாதவர் என்பது பின்வரும் பாடலால் அறியலாம். திருவலம்புரத் தேவாரத்தில் (72) "குண்டிகைப் படப்பினில் விடக்கினை யொழித்தவர் கண்டவர் கண்டடி வீழ்ந்தவர்" என்ற தொடர் சமணர் புலால் ஒழித்தவர் என்பதைக் காட்டும். ஆனால் அன்பர் சிலர் இங்கு ஊன் உண்ணாதவர் என்று குறிக்கப்பட்டவர் சிவபிரான் கழலை வணங்கினார் என்றும் கூறப்படுவதால் ஒருகால் சமணரல்லாத மற்றவர் எவரையாவது குறிக்குமோ என்ற ஐயமும் எழுகிறது. இது ஆராய்ந்து தெளியத்தக்கது.

# தத்துவானுபோகக் கட்டளை

(மலர் கக - இதழ் ச - உ0அ-ம் பக்கத் தொடர்ச்சி)

## கன்மேந்திரியங்கள்

இனிக் கன்மேந்திரியங்களாவன-வாக்கு, பாதம், பாணி பாயுரு, உபத்தம் ஆக ரு.

### க. வாக்கு

இதில் வாக்கென்கிற தெது ? வசனிக்கிறது. வசனிக்கிறது இந்த வாயல்லவா ? இந்த வாய் வசனிக்குமாகில் ஊமையானவன் வசனிக்க வேண்டாவோ? அப்பொழுதும் வசனிக்குங் காணும் ஆத்துமாதான் வந்து வசனியாதபடியாலே ஆத்துமாத்தான் வந்து கைக்கோறணி காட்டுகிறான். ஆன படியினாலே ஆத்துமாவுமல்ல, அந்தத்தானமுமல்ல, வசனிக்கிறது வேறே. அதெது ? ஆகாச மிடமாக நின்று வசனிக்கிறது மாத்திரத்தைச் செலுத்துகிறது வாக்கு. க

### உ. பாதம்

பாத மென்கிற தெது? நடக்கிறது. நடக்கிறது இந்தக் காலல்லவா ? இந்தக் கால் நடக்குமாகில், இருக்கிற முடவன் நடக்க வேண்டாவோ? அப்பொழுதும் நடக்குங் காணும் ஆத்துமாதான் வந்து நடவாதபடியினாலே ஆத்துமாத்தானல்லவா என் கால் நடக்க வொண்ணா தென்கின்றான். ஆன படியினாலே ஆத்துமாவுமல்ல, அந்தத்தானமு மல்ல, நடக்கிறது வேறே. அதெது ? வாயுவினிடமாக நின்று கமனத்தைப் பண்ணுகிறது ப்ாதம். உ

### ங. பாணி

பாணியாகிற தெது ? இடுதல் ஏற்குதல் செய்கிறது. இடுதல் ஏற்குதல் செய்கிறது இந்தக் கையல்லவா ? இந்தக் கை இடுதல் ஏற்குதல் செய்யுமாகில், சூகையாய்ப் போன



கையும் இடுதல் ஏற்குதல் செய்ய வேண்டாவோ ? அப்பொ
ழுதும் இடுதல் ஏற்குதல் செய்யுங் காணும் ; ஆத்துமாதான்
வந்து இடுதல் ஏற்குதல் செய்யாதபடியினாலே ஆத்துமாத்
தானல்லவா என்கை சூகையாய்ப் போச்சுதென்கிறான். ஆன
படியினாலே அந்த ஆத்துமாவுமல்ல, அந்தத் தானமுமல்ல,
இடுவதாவதும் ஏற்பதாவதும் வேறே. அதெது ? அக்கினியி
னிடமாக நின்றுந் தானமாத்திரத்தைச் செய்கிறது பாணி. ங

### ச. பாயு

பாயு வாகிறதெது? மலத்தைக் கழிப்பிக்கிறது. மலத்
தைக் கழிப்பிக்கிறது இந்த அபானமல்லவா? அபானம் மலத்
தைக் கழிப்பிக்குமாகில், சில பொழுது கழிப்பித்தும் சில
பொழுது கழிப்பியாதுமிருப்பானேன்? எப்பொழுதுங் கழிப்
பிக்குங்காணும் ஆத்துமாதான் வந்து கழிப்பியாதபடியினாலே
அந்த ஆத்துமாத்தானல்லவா எனக்கு மலங்கழிகிறதில்லை
யென்றான். ஆனபடியினாலே ஆத்துமாவுமல்ல, அந்தத்
தானமுமல்ல, மலத்தைக் கழிப்பிக்கிறதுவேறே. அதெது ?
அப்புவினிடமாக நின்று விசர்க்க மாத்திரத்தைச் செய்கிறது ச
பாயு.

### ரு. உபத்தம்

உபத்தமாகிறதெது ? போகாதிகளை விளைவிக்கிறது.
போகாதிகளை விளைவிக்கிறது இந்தத் தானமல்லவா ? இந்தத்
தானம் போகாதிகளை விளைவிக்குமாகில்,எப்பொழுதும் விளை
விக்க வேண்டாவோ ? விளைவிக்குங்காணும் ஆத்துமா தான்
வந்து விளைவியாதபடியாலே ஆத்துமாத் தானல்லவா எனக்கு
லேபனம் விளைகிறதில்லை யென்றான். ஆனபடியினாலே
ஆத்துமாவுமல்ல, அந்தத்தானமுமல்ல, விளைவிக்கிறது
வேறே. அதெது ? பிருதிவியினிடமாக நின்று ஆனந் ரு
தத்தை விடுகிறது உபஸ்தம்.

## அந்தக்கரணங்கள்

இனி அந்தக்கரணமாவது மனம் - புத்தி - அங்காரம் - சித்தம் ஆக ச.

## க. மனம்

இதில் மனமென்கிறதெது? பற்றுகிறது. என்னத்தைப் பற்றுகிறது? கண்டதையும் கேட்டதையும் பற்றுகிறது. கண்டதையும் கேட்டதையும் பற்றுகிறது மனமல்லவா? மனமாகில் கண்டதையும் கேட்டதையும் பற்றுகிறது ஆத்துமா வென்று சொல்லுவானேன்? அப்படியல்ல காண். கண்டதையும் கேட்டதையும் மனம் பற்ற அத்துடனே கூடி நின்று பற்றுகிறதுகாண் ஆத்துமா. அசேதனமாயிருக்கிற மனது தானு யொன்றைப் பற்றவற்றோ? அது தானகப் பற்றாது கர்த்தாவினுடைய உபகாரத்தாலே பற்றும். அதெங்ஙனே? மனதைச் சுத்தமாயையில் தோற்றப்பட்ட சூக்கும பஞ்சாக்கரத்தில் மகாரம் செலுத்தும். அந்த மகாரத்தை ஆத்துமாக்களை இரட்சிக்கை காரணமாகப் பேர்பெற்ற பஞ்ச மூர்த்திகளில் உருத்திரன் செலுத்தும். இப்படி உபகாரப்படி நின்று கண்ணுக்குத் தோன்றின அளவை இன்னதென்று அறியாமல் பற்றுகிறது மாத்திரமே மனது. க

## உ. புத்தி

புத்தி யென்கிறதெது? நிச்சயிக்கிறது. என்னத்தை நிச்சயிக்கிறது? மனத்தாலே பற்றுவிக்கிறதை நிச்சயிக்கிறது. மனத்தாலே பற்றுவிக்கிறதை நிச்சயிக்கிறது புத்தியாகில், மனம் பற்றினதை ஆத்துமா நிச்சயிக்குமென்று சொல்ல வேண்டுவானேன்? அப்படியல்லகாண், மனம் பற்றினதைப் புத்தி நிச்சயிக்கப் புத்தியுடனே கூடிநின்று நிச்சயிக்கிறதுகாண் ஆத்துமா. அசேதனமா யிருக்கிற புத்தி தானுய் நிச்சயிக்கவற்றோ? தானுய் நிச்சயிக்கமாட்டாது; கர்த்தாவினுடைய உபகாரத்தாலே நிச்சயிக்கும். அதெங்ஙனே? புத்தியைச் சுத்த மாயையிற்றோற்றப்பட்ட சூக்குமப் பஞ்சாக்கரத்தில் உகார மென்கிற அக்கரம் செலுத்தும். உகாரத்தை ஆத்துமாக்களை இரட்சிக்கை காரணமாகப் பேர்பெற்ற பஞ்ச மூர்த்திகளில் விஷ்ணு செலுத்தும். இப்படி யுபகாரப்படியே மனது பற்றினதை நிச்சயிக்கிறது மாத்திரம் புத்தி. உ



## ௩. ஆங்காரம்

ஆங்கார மென்கிற தெது? எழுந்திருக்கிறது. என்னத்தை எழுந்திருக்கிறது? ஒரு பதார்த்தத்தை மனது பற்றப் புத்தி நிச்சயிக்கிறதது மேலே எழுந்திருக்கிறது. ஆங்காரம் எழுந்திருக்குமாகில், ஆத்துமா வெழுந்திருக்கு மென்று சொல்ல வேண்டுவானேன்? அப்படியல்லகாண். மனது பற்றி புத்தி நிச்சயித்து மேலே ஆங்காரம் எழுந்திருக்க அத்துடனே கூடி எழுந்திருக்கிறது காண் ஆத்துமா. அசேதனமான ஆங்காரம் தானே எழுந்திருக்கவற்றோ? அது தானக எழுந்திராதுகாண்; கர்த்தாவினுடைய உபகாரத்தாலே எழுந்திருக்கும். அதெங்ஙனே? ஆங்காரத்தைச் சுத்தமாயையிற் றோற்றப்பட்ட சூக்கும பஞ்சாக்கரத்தில் அகாரம் செலுத்தும். அந்த அகாரத்தை ஆத்துமாக்களை இரட்சிக்கை காரணமாகவந்த பஞ்சமூர்த்திகளில் பிரமன் செலுத்தும். இப்படி யுபகாரப்படியே நின்று மனம் பற்றிப் புத்தி நிச்சயித்ததனுலே ஆங்காரம்எழுந்திருக்கும். ௩

## ௪. சித்தம்

சித்தமென்கிறதெது? சிந்திக்கிறது. என்னத்தைச் சிந்திக்கிறது? ஒரு பதார்த்தத்தை மனது பற்ற புத்தி நிச்சயிக்க ஆங்காரம் எழுந்திருக்கிறதைச் சிந்திக்கிறது சித்தம். சித்தம் சிந்திக்குமாகில் ஆத்துமா சிந்திக்குமென்று சொல்ல வேண்டுவானேன்? அப்படியல்லகாண். மனதுபற்றி புத்தி நிச்சயிக்க ஆங்காரம் எழுந்திருக்க சித்தம் சிந்திக்க இத்துடனேகூடி நின்று சிந்திக்கிறதுகாண் ஆத்துமா. அசேதனமாயிருக்கிற சித்தம் தானகச் சிந்திக்கவற்றோ? அது தானுய்ச் சிந்தியாது காண்; கர்த்தாவினுடைய உபகாரத்தாலே நின்று சிந்திக்கும். அதெங்ஙனே யெனில் சித்தத்தைச் சுத்த மாயையிற் றோற்றப்பட்ட சூக்கும பஞ்சாக்கரத்தில விந்து செலுத்தும். அந்த விந்து ஆத்துமாவை இரட்சிக்கை காரணமாக வந்த தம்பிரானுர் கொண்டருளின ஈசுவரம் செலுத்தும். இப்படியே நின்று மனதுபற்றி புத்தி நிச்சயிக்க ஆங்காரம் எழுந்திருக்கிறதைச் சிந்திக்கிறது சித்தம். ௪

ஆக அந்தக் கரணம் வரை ஆத்தும தத்துவம் ௨௪

## வித்தியா தத்துவம்

இனி வித்தியா தத்துவங்களாவன-காலம்-நியதி-கலை-வித்தை-அராகம்-புருடன்-மாயை ஆக ஏழு.

### க. காலம்

இதில் காலமாவன. நிகழ்காலம் - கழிகாலம் - எதிர் காலம் என்று மூன்று விதமா யிருக்கும்.

இதில் நிகழ்காலமாவது - எடுத்த தேகத்துக்குள்ள கன்மத்தைப் புசிக்கிற காலம்.

கழிகாலமாவது - புசித்துவிட்ட காலம்.

எதிர்காலமாவது மேலொன்றைப் புசிக்க வருகிறகாலம்.

இப்படி இந்தக் காலத்தின் எல்லைகளைத் தோற்றுவிக்கிறது காண் காலம். இது தானாய்த் தோற்றுவிக்க மாட்டாமல் கர்த்தாவாலே தோற்றுவிக்கப்பட்ட முறைமை கால தத்துவத்தைச் சுத்த தத்துவத்தில் சத்தி தத்துவம் செலுத்த, அந்தச் சத்தி தத்துவத்தைப் பஞ்ச சத்திகளில் கிரியாசத்தி செலுத்தும், இப்படி நின்று செலுத்துகிற தொழிந்து தானாய்க் காலங் கூட்ட மாட்டாதபடியினால் கர்த்தாவாலே கூட்டப்பட்டதென்று சொல்லியது. க

### உ. நியதி

நியதி யென்கிறதெது? வரைந்து நிற்கிறது. என்னத்தை வரைந்துநிற்கிறது? கன்மத்தை வரைந்துநிற்கிறது.

கன்மத்தை வரைந்து நிற்கிறது நியதியாகில் ஆத்துமாக்கள் செய்த கன்மத்தை அளவுகளிலே வரைந்து புசிப்பிப்பான் கர்த்தாவென்று சொல்லுகிறதென்ன? கர்த்தாவினுடைய சக்திகூட நின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே நின்று கன்மத்தை வரைகிறது நியதியென்று ஒன்றுண்டு காண். இது நியதி தத்துவத்துக்கு ரூபம்.

இனி இந்த நியதிக்குத் தெரிசனமாவது இராசாவானவன் தன்னுடைய ஆக்கினை வழியிலே நிற்கிறவர்களை அவ்வவர் செயல்களுக்கிடான செய்திகளை முறைமையிலே



நிறுத்துகிறதுபோல ஆத்துமாக்கள் செய்த கன்மத்தை அளவுகளிலே நிறுத்தும்.

நிறுத்துகிறதெப்படி? நீ யுனக்கென்றிருந்தாயே ஆக்கி வந்த சோறுங்கறியும் நீயுண்டெழுந்திருக்கிற கருத்துண்டே? உண்டு. இப்படி இருக்கையிலே ஒரு கறியிட்டு இரண்டு பிடியுண்ட அளவிலே அது விக்கி உன்கையிற் சோற்றுப் பிடியும் வாயிற் சோறும் போட்டாயே ஆகையாலே இப்படிக்கு வரைந்து நிற்கிறது நியதி.

இது தானாய் வரைந்து நிற்கமாட்டாமல் கர்த்தாவாலே வரைந்து நிற்கிற முறைமை நியதி தத்துவத்தைச் சுத்த தத்துவங்களிற் சத்தி தத்துவஞ் செலுத்தும். அந்த சத்தி தத்துவத்தைப் பஞ்ச சத்திகளில் கிரியா சத்தி செலுத்தும்.

### ங. கலை

இனிக் கலையென்கிறதெது? நீக்குகிறது. என்னத்தை நீக்குகிறது? ஆணவமலத்தை நீக்குகிறது.

ஆணவ மலத்தை நீக்குகிறது கலையாகில், ஆணவ மலம் ஆசாரியனாலல்லது நீங்காதென்கிறதென்ன? அப்படியல்ல காண்; கன்மவொப்பிலே சத்திநிபாதம் பதிந்து தீட்சையாலே சஞ்சித கன்மமும் போய்த் தேகாதி பிரபஞ்சங்களைப் பொய்யென்றறிந்து ஆத்மாவையும் சிவனையும் அருளையும் அருளாலே யறிந்து அந்த அருளில் நின்று சிவனுடனே இரண்டறக் கூடுகைக்கு ஆணவ மலத்தை நீக்குகிறது காண் ஆசாரியனாலே நீக்கப்பட்டது. ஆனால் அதெங்ஙனே? ஆத்துமா இந்திரியங்களுடனே கூடி விஷயங்களைப் புசிக்கிற முறைமை குலைந்து கிடக்கிற அவதரத்திலே இந்திரியங்களுடனே கூடி விஷயங்களைப் புசிக்கும்படிக் கீடாகச் சற்றே ஆணவ மலத்தை நீக்கிக் கிரியையை எழுப்பும்.

இது எதுபோல்? செம்புக்குக் காளிதம் அனாதியே வெட்டுவாய்கள் தோறும் நிற்கிறது; அந்தக் களிம்பறக் குளிகை வாய்த்து கனங் குலையாமல் அந்தக் காளிதமற்று அந்தச் செம்பு பத்தேமுக்கால் மாற்றுத் தங்கமானாற்போல் அன்றியே செம்பென்கிற தன்மையை மறைத்து மேற் காளி

த்தைக் காரியப்படுகை காரணமாகப் புளியைக் கொண்டு விளக்கிக் காரியப்படுத்திக் கொண்டாற்போல்.

செம்புக்குத் திருஷ்டாந்தம் ஆத்மா; வெட்டுவாய்கள் தோறும் நிறைகிற காளிதத்திற்குத் திருஷ்டாந்தம் மலம்; செம்பினிடத்தில் காளிதத்தின் மிகுதியாலே பிரகாசியாமலிருக்கிற சொர்ணத்திற்குத் திருஷ்டாந்தம் அருள்; செம்பென்கிற தன்மையைக் குலைத்து மேல் விசினமாக்கிறதுக்குத் திட்டாந்தம் ஆத்மா வென்கிற தன்மை தெரியாமலும் இந்திரியங்கள் சீவியாதபடியாலும் நேராக மறைக்கிறது; மேற் காளிதமாகிய மாசைப் போக்குகிற புளிக்குத் திட்டாந்தம் ஆசாரியன் ஆத்மாவினுடைய கன்மத்துக் கிடாக ஆணவ மலத்தை நீக்குகிறது கலை. ௬

## ௪. வித்தை

வித்தை யென்கிற தெது? எழுப்புகிறது. என்னத்தை எழுப்புகிறது? ஆத்தும போதத்தை யெழுப்புகிறது.

ஆத்தும போதத்தை யெழுப்புகிறது வித்தையாகில், ஆத்தும போதம் சிவனுடைய போதத்தா லல்லது சீவியாதென்கிற தென்ன? ஆங்காண்; கர்த்தாவினுடைய சத்தி கூடிநின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே நின்றும் ஆத்தும போதத்தை யெழுப்புகிறது வித்தை யென்றொன்றுண்டு காண். இது வித்தையென்கிற தத்துவத்துக்கு ரூபம்.

தெரிசனமாவது இந்திரியங்களுடனே கூடிச் சீவியாமல் ஆணவ மலம் தானேயாய்க் கிடக்கிற அவதாரத்தில் கலையாலே ஆணவ மலம் சிறிது நீங்கிக் கிரியை எழுந்திருக்கிற அவதாரத்திலே ஒரு விஷயங்களை யறிகைக்கு ஆத்துமாவினுடைய ஞானத்தை யெழுப்புகிறது வித்தை.

இந்த வித்தை தானே யெழுப்பமாட்டாது கர்த்தாவினுடைய கைப்பட்டு நின்று எழுப்புகிற முறைமை வித்தியா தத்துவத்தைச் சுத்த தத்துவங்களிற் சுத்த வித்தை நின்று செலுத்தும். சுத்த வித்தையைப் பஞ்ச சத்திகளில் ஞான சத்தி நின்று செலுத்தும். ௪



## ௫. அராகம்

இனி அராக மென்கிறதெது? எழுப்புகிறது. என்னத்தை எழுப்புகிறது? ஆத்துமாவினுடைய இச்சையை எழுப்புகிறது.

ஆத்துமாவினுடைய இச்சையை எழுப்புகிறது சேதனமாயிருக்கிற ஆத்துமாவினுடைய இச்சையை அசேதனமாயிருக்கிற அராகதத்துவம் எழுப்பவற்றோ? அது தானாய் எழுப்ப மாட்டாது; கர்த்தாவினுடைய சத்தி கூட நின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே ஆத்மாவினுடைய கன்மத்துக்கிடாக இச்சையை யெழுப்புகிறது அராக தத்துவமென்றொன்றுண்டு காண். இது அராகதத்துவத்துக்கு ரூபம்.

இனி தெரிசனமாவது, இவன் ஆணவ மலத்துடனே கூடி இந்திரியங்களுடனே சீவியாமல் கிடக்கும் அவதாரத்தில் கலையாலே ஆணவ மலம் சிந்திக்கப்பட்டு, வித்தையாலே அறிந்து விஷயத்திலுண்டான இச்சையை யெழுப்புகிறது அராகதத்துவம்.

இது தானாக எழுப்பவற்றோ? எழுப்பமாட்டாது. கர்த்தாவாலே நின்று சீவிக்கிற முறைமை அராகதத்துவத்தைச் சுத்த தத்துவத்திலே ஈசுவர தத்துவம் நின்று செலுத்தும். ஈசுவர தத்துவத்தைப் பஞ்ச சத்திகளில் இச்சாசத்தி செலுத்தும். ௫

## ௬. புருடன்

இனிப் புருடனென்கிறதெது? அழுத்துகிறது. என்னத்தை அழுத்துகிறது? ஆத்தும போதத்தை விஷயங்களிலே அழுத்துகிறது.

அசேதனமாயிருக்கிற புருடதத்துவம் சேதனமாயிருக்கிற ஆத்ம போதத்தை அழுத்தவற்றோ? அதுதானா யழுத்தாது; கர்த்தாவினுடைய சத்தி கூடி நின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே நின்றும் ஆத்தும போதத்தைக் கன்மத்துக் கிடாக விஷயங்களிலே யழுத்துகிறது புருட தத்துவ மென்று ஒன்றுண்டு காண். இது புருடதத்துவத்துக்கு ரூபம்.

தெரிசனமாவது ஆத்துமா ஆணவமலத்தாலே மறைப்புண்டு இந்திரியங்களுடன் கூடாமல் கிடக்கிற அவதாரத்திலே ஆணவமலம் கலையாலே சிறிது நீக்கப்பட்டு, கிரியை எழுந்திருந்து வித்தையாலே ஒரு விஷயத்தை யறிந்தும் அராகத்தாலே ஆசைப்பட்ட விஷயத்திலே அழுந்துகிறது புருடதத்துவம்.

அதுவுந் தானாய் அழுந்த மாட்டாமல் கர்த்தாவாலே அழுத்துகிறபடி. எப்படி? புருட தத்துவத்தைச் சுத்த தத்துவங்களில் சாதாக்கிய தத்துவம் செலுத்தும். சாதாக்கியத்தைப் பஞ்சசத்திகளில் கிரியாசத்தி செலுத்தும். ௬

### ௭. மாயை

மாயை யென்கிறதேது? மயக்குகிறது. என்னத்தை மயக்குகிறது? ஆத்தும போதத்தை மயக்குகிறது.

அசேதனமாயிருக்கிற மாயை சேதனமாயிருக்கிற ஆத்தும போதத்தை மயக்கவற்றோ? அது தானாய் மயக்கமாட்டாதுகாண்; கர்த்தாவினுடைய சத்திகூடி நின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே நின்று கன்மத்துக்கீடாக ஆத்தும போதத்தை மயக்குகிறது மாயா தத்துவமென்று ஒன்றுண்டு காண். இது மாயையென்கிற தத்துவத்துக்கு ரூபம்.

தெரிசனமாவது ஆத்மாவானது ஆணவமலத்திலே மறைப்புண்டு இந்திரியங்களுடனே கூடாமல் கிடக்கிற அவதாரத்திலே கலையாலே ஆணவமலம் சிறிதே நீங்கி ஒரு விஷயத்தை வித்தையாலே யறிந்து அராகத்தாலே யாசைப்பட்டும் ஆசைப்பட்ட விஷயத்திலே புருட தத்துவத்தாலே யழுந்தி அழுந்தின விஷயத்திலே மாயையாலே மயங்கும்.

இது தானாக மயக்கமாட்டாமல் கர்த்தாவாலே மயக்குகிற முறைமை மாயா தத்துவத்தைச் சுத்த தத்துவங்களிற் சிவதத்துவம் செலுத்தும். சிவதத்துவத்தைப் பஞ்ச சத்திகளில் ஞானசத்தி செலுத்தும். ௭

ஆக வித்தியா தத்துவம் ஏழு.

(தொடரும்)

ஆயிர ரூபா நன்கொடை வழங்கினார்கள். பிற்பகலில் திருமதி ஆழ்வார் இராமாநுஜ நாயகியம்மையார் "திருநாவீறுடையபிரானும் தெய்வத் தமிழ் மறையும்" என்பது பற்றியும், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் "சுந்தரர் செந்தமிழ்" என்பது பற்றியும், திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் "சிலப்பதிகாரச் சுவை நலம்" என்பது பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். இரவு திருவனந்தபுரம் - இசைப்பேரறிஞர் - திரு. இலக்குமணப் பிள்ளையவர்களும் இரு மாணவிகளும் தமிழிசையரங்கு நடத்தினார்கள். மூன்றாம் நாள் காலையில் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்களியற்றிய "தமிழரசி குறவஞ்சி" என்ற நூல் அரங்கேற்றப் பெற்றது. பிள்ளையவர்கட்குக் "கவியரசு" என்ற பட்டம் வழங்கப் பட்டது. பல புலவர்கள் பாராட்டுரைகளும் சாற்றுக் கவிகளுந் தந்தனர். பிறகு திரு. அடிசைக்கிழார் - சிதம்பரனார் "திருக்குறள்-பரிதியுரை" என்பதுபற்றி விரித்துரைத்தார்கள். பிற்பகலில் திருவாளர்கள் - C. K. சுப்பிரமணிய முதலியார், R. P. சேதுப் பிள்ளை, அ. மு. சரவண முதலியார் ஆகிய அன்பர்கள் முறையே 'மூர்த்தி நாயனார்", "வல்லரசும் நல்லமைச்சும்", "சேக்கிழார் உவமைக் கவின்" என்பன பற்றி விரித்துரைத்தார்கள். இரவில் "கரிகாலன்" என்ற நாடகம் நடந்தது. நன்றியுரைகளோடு விழா இனிது முற்றிற்று.

---

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை
## தமிழ்க் கல்லூரிக்குரிய மாணவர்கள்

இச்சங்கத்தில் தனித் தமிழ்க் கல்லூரியின் தொடக்கம் அண்மையில் நடந்த வெள்ளி விழாவில் ஏற்பட்டது தமிழன்பர்கள் அறிவார்கள். இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்திற்குரிய வித்துவான் பயிற்சியின் புகுமுக வகுப்பாகிய Entrance வகுப்பு தொடங்கப் பெற்றுளது. இவ்வகுப்பிற்கு இவ்வாண்டில் முப்பது மாணவர்கட்கு உணவு உதவி ஏற்பட்டுளது. மாணவர்கள் S. S. L. C. அல்லது அதற்கொப்பான ஆங்கில அறிவுடையர்களாக இருத்தல் வேண்டும். தமிழில் சிறந்த பயிற்சியுளதேல் ஆங்கில அறிவு சற்றுக் குறைந்திருப்பினும் ஏற்றுக் கொள்ளப்படும். மே மாத இறுதிக்குள் விண்ணப்பங்களைச் சங்க அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். ஒப்புக்கொள்ளப் பெற்ற மாணவர்கட்கு விபரம் உடன் அறிவிக்கப்படும். அவர்கள் ஜூன் முதல் வாரத்தில் வந்து சேரல் வேண்டும்.

**தா. வே. உமாமகேசுவரன், தலைவர்.**

காமக்கூர் தமிழ்ப்போாசிரியர் மகாவித்வான்

கா. மு. சுந்தர முதலியார் அவர்கள்

பாராட்டுச் சிறப்புவிழா

# வேண்டுகோள்

நம் நாட்டிற் பண்டைக் காலத்திற் புலவர்களை ஆதரித்துப்போற்றும் நல்ல வழக்கம் இருந்தது. அதனால் மொழிப் பற்றும், மொழி வளர்ச்சியும், நாகரிகமும் பெருகின. இத் தமிழ்நாட்டில் தாய்மொழி வளர்ச்சிக்கெனத் தம் வாழ்நாள் முழுதும் உழைக்கின்றவர் ஒரு சிலரேயாவர். அவர்களுள் பேராசிரியர் கா. மு. சுந்தர முதலியார் அவர்களும் ஒருவராவார்கள். தொண்டை நன்னாட்டு மக்கள் செய்த பெருந் தவப் பயனாகக் காமக்கூரில் தமிழ்த்தாயின் நன்மகனாய்த் தோன்றி நூற்றுக்கணக்கான மாணவர்கட்குப் பண்டைக் குருகுல முறையில் தமிழ்க் கல்வியைக் கற்பித்துத் தமிழ் மொழியை வளர்த்துவருபவர் இப்பெரியார் என்பது யாவரும் அறிந்ததொன்றே. ஆதலால் இவரிடத்திற் கல்விகற்ற மாணவர்களும், மொழிப் பற்றுடையவர்களும் ஒருங்கு சேர்ந்து இப்பெரியாருடைய சிறப்பு விழாவைக் கொண்டாடுதல் இன்றியமையாத முதற்கடனாகுமென்றுணர்ந்து யாங்கள் இத்தமிழ்ப் பணியில் ஈடுபட்டுள்ளோம். தமிழ்ப் புலவர்களைச் சிறப்பித்துப் பாராட்டுதல் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கந் தருதலும் தமிழ்த்தாயைப் போற்றுதலுமாகும் எனவுணர்ந்த அன்பர்கள் அனைவரும் இப்பணியைத் தங்கள் சொந்தப் பணியாகக்கொண்டு இயன்ற பேருதவிகளைச் செய்து உடனிருந்து நிறைவேற்றுவிக்க வேண்டுகின்றோம்.

இங்ஙனம்: கா. மு. சு. சிறப்புவிழாத் தலைவர்கள்,

கா. ப. இராமசாமி முதலியார், ஜில்லாபோர்டு மெம்பர், காமக்கூர்.
ந. கு. குப்புசாமி உடையார், மிராசுதார், நடுக்குப்பம் [னல்லூர்.
ச. ர. மாணிக்க முதலியார், கூட்டுறவு யூனியன் தலைவர், சம்புவராய
எஸ். ஏ. சோமசுந்தர முதலியார், பேங்கர், ஆரணி, (சைதாப்பேட்டை)
செயலாளர் : கீ. வேணுகோபால நாயகர்,
தமிழாசிரியர், ஊர்ஹீஸ் கல்லூரி, வேலூர்.

Reg. M. 2330.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.


| | | |
|---|---|---|
| மலர் ௧௧ | வெகுதான்யஆண்டு ஆனித்திங்கள் 1938வரு ஜூன்மீ | இதழ் ௬ |


## மரணமும் மரண பயம் நீங்கும் வழியும்

[ஜி. சுந்தரமய்யர்]

*" தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு*
*காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கை நாற்றிநரம்*
*பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த வகம்பிரிந்தால்*
*வேலாற் கிரிதுளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே."*

**ம**ரணம் என்பது உலகத்தில் நடைபெறும் ஒரு சம்பவம். மரணம் நாம் அடிக்கடிகாணும் ஒரு காட்சி. பல உறுப்புகள் அடங்கிய இந்தச் சரீரத்தில் உள்ளும் புறமும் சஞ்சரிக்கும் மூச்சானது நின்றுவிட்டால் மனிதன் இறந்ததாகச் சொல்லப்படுகிறது. மூச்சு நின்றுவிட்டால் பல வேலைகள் செய்யத் திறமைவாய்ந்த இந்தச் சரீரம் கட்டைபோல் கீழே சாய்ந்துவிடுகிறது. நமது சரீரம் அசைவற்றுக் குளிர்ந்து

போய் நாற்றமேலிட்டு வீட்டிலிருக்க யோக்கியதை யில்லாததாய் விடுகிறது. புலையனும் விரும்பாத புன்புலால் யாக்கையாய்விடுகிறது. இடுகாட்டுப்பயணத்திற்குத் தயாராகிப் பிறகு கொளுத்தப்பட்டுச் சாம்பராய்ப்போய்விடுகிறது. இத்தோற்றமாகிய புதுமையே சாவு என்பது. உயிரற்ற தேகத்தையே பிணம் என்று சொல்லுகிறார்கள். பிறந்தவுடன் சிசுவென்று கொண்டாடப்பெற்று இறந்தவுடன் பிணமென்று இகழப்பெற்றுத் திண்டாடும் நாம், மத்தியகாலத்தில் பல பெயர்களைக் கொண்டும், பல வித்தியாசங்களை உண்டுபண்ணிக்கொண்டும், உண்டு, உறங்கி, களித்துக் கூத்தாடிக் கழிக்கும் வாழ்நாளும் ஒரு விந்தைத் தோற்றமெனலாம். தேகத்தின் முடிவுகாலம் மரணம் என்று ஏற்படுகிறது. ஜீவனும் மடிந்ததாக எண்ணிக்கொள்ளுகிறோம்.

2. மரணம் என்பதை மிருத்யூ, காலன், எமன், நமன், என்று சொல்வதுமுண்டு. ஒரு மனிதனுடைய அந்திய காலத்தில் அவன் கருமத்திற்குத் தக்கபடி சுவர்க்கத்திற்கோ அல்லது நரகத்திற்கோ செல்வதற்காகப் பகவானுடைய நியாய ஸ்தலத்தின் தீர்ப்பைப்பெற எமதூதர்கள் அந்த மனிதனை இவ்வுலகத்திலிருந்து தூக்கிச் செல்ல வருகிறார்கள்; அச்சமயத்தில் அந்த மனிதன் மரணமடைகிறான். ஆகவே, மரணம் தரும ஸ்தலம் பார்க்கப்போகும் கட்டாயப் பயணம் என்றாகிறது. இது மதநூல் கொள்கை என்று நவீனக் கல்விமான்கள் கேலிசெய்வதுமுண்டு!

3. "குடம்பைத் தனித்தொழிய புட்பறந்தற்றே" என்றபடி ஒரு பட்சியானது தன்கூட்டை விட்டுப் பறந்து வேறிடம் செல்வது போலும், நாம் நமது சட்டையை மாற்றி வேறு சட்டை அணிந்து கொள்ளுவது போலும், கிழிந்த துணியைக் களைந்து புதுத்துணி யுடுப்பது போலும், ஜீவன் குறித்த நேரத்தில் இறைவன் சங்கற்பத்திற்குத்



தக்கவாறு இந்த சரீரத்தை விட்டுவிடுகிறான் என்றும், ஜீவனுக்கு நாசமில்லை யென்றும், ஜீவனை சிக்ஷிக்கவோ அல்லது கௌரவப்படுத்தவோ யமதூதர்கள் அழைத்துச் செல்லுகிறார்களென்பது வெறும் கதை யென்றும், ஜீவனுடைய முன்னேற்றத்திற்காக மரணம் என்ற அனுகூல நிகழ்ச்சி ஏற்பட்டுத்தான் தீரும் என்றும் சொல்லப்பட்டு வருகின்றன. மண்ணைக் குடமென நாம் சொல்லி வரும் வழக்கம்போல தேகம் நாசமடைந்தபோது ஜீவன் இறந்ததாகப் பிரமிக்கிறோம் என்பார் சிலர்.

ஆகவே மரணம் என்பது பல்வகையான அபிப்பிராயங்களை எழுப்புவதாயிருக்கிறது. பிறப்பு இல்லையேல் தேகம் இல்லை. தேகம் இல்லையேல் மரணம் இல்லை. இது தெளிவு. பிறப்பு யாது என்று தீர்மானம் செய்தகாலத்தில் மரணம் யாது என்று நிரூபிக்கப்படும் என்று கொள்ளலாம் என்று தோன்றுகிறது. சரீர ஜீவசம்பந்தம் ஓர் உலக விநோதம். அற்புதம் அதிசயமென்று தான் முடிவுகட்ட வேண்டியதாயிருக்கிறது. ஈசன் திருவிளையாடல்; அவன் ஆணைக்குளடங்கியதே தோன்றலும், மறைதலும்.

4. அறிவு நூல்களைச் சற்று பார்த்தால் பிறவி ஒருபெருவியாதியென்றும், வியாதியில் கிடப்பவன் ஒருநாள் இறப்பதுபோல் பிறந்தவன் இறந்தே தீரவேண்டுமென்றும், இறவாமலிருக்க முயற்சிப்பதைக்காட்டிலும் பிறவாமலிருக்க வழி தேடவேண்டுமென்றும் காண்கிறோம். பல விஷயங்களை விசாரம் செய்ய நமது புத்தியை உபயோகப் படுத்துகிறோமே யொழிய பிறவித்துன்பத்தை ஒழிக்க நாம் ஒருவரும் சிந்திப்பதாயில்லை. இதுவும் ஒருவிந்தை தான். ஏதோ ஒரு மரணத்தைப் பிறவிப்பிணிக்கு முடிவென்று சாதித்துவிட்டாலும் அல்லது செய்து கொண்டாலும் பிறகு பிறப்பில்லாமல்

தப்பலாம். பிறகு சுயேச்சை உண்டாகிறது. இது நமக்கு என்று கிட்டும்?

"மாவேழ் ஜனனம் கெட மாயைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ"

என்ற அருணகிரியார் புலம்பலை நோக்குக.

5. மரணம் நேர்வது விரோதமாயிருக்கிறது; வைத்தியநூல் நிபுணர்களையும் ஏமாற்றி விடுகிறது. வரும் வேளை தெரிகிறதில்லை. எப்படி எந்த சமயத்தில் சம்பவிக்கும் என்று அறிய முடியாத விஷயமாயிருக்கிறது. நேற்றிருந்தவனை இன்று காண்பது அரிதாயிருக்கிறது. இன்றிருந்தவன் நாளையிருப்பான் என்பதும் நிச்சயமில்லை. காலன் வெகு இரகசியமாய்க் கொண்டு போய் விடுகிறான். காரணத்தைக் கண்டவர்களோ வேளையை யறிந்தவர்களோ கிடையாது. பல காரணங்கள் புலப்படுகின்றன. ஆனால் மனதிற்குச் சமாதானம் வருவதில்லை. இறந்தே விட்டான் என்பவன் பிழைத்து வருகிறான்; கல் போலிருக்கிறான் சாகவேமாட்டான் என்பவன் திடீரென்று இறந்து விடுகிறான். என்ன காரணம்? காலம் முடிந்துபோய் விட்டது, போய் விட்டான் என்பது உலக வழக்கு; விதி முடிந்தது, இறந்தானென ஒப்புக்கொள்ள வேண்டியதா யிருக்கிறது. பிறந்த காலத்தைச் சரியாய்க் குறிப்பது தப்புவதுபோல் மரண நேரமும் சரியாய்க் குறிக்க முடியாமலிருக்கிறது. மரணக்காலன் பெரிய கைதேர்ந்த திருடனாயிருக்கிறான்.

6. மரணம் எதையோ ஒரு சாக்கை முன்னிட்டுக் கொண்டுதான் நேரிடுகிறது. வியாதியி லிறந்தானென்றும், கல் தடுக்கி யிறந்தானென்றும், சாப்பிடும்போது புரையேறி யிறந்தானென்றும், மனோவிசாரத்தா லிறந்தானென்றும், புத்திர சோகத்தினா லிறந்தானென்றும் பல காரணங்களைச் சொல்லத் துணிகிறோம். சற்று யோசித்தால் நமக்கே



இவைகளெல்லாம் வாஸ்தவமான காரணமாவதில்லை. இருந்தபோதிலும் சாக்குப் போக்கில்லாமல் எமதூதர்கள் ஒருவனைக்கொண்டு போவதில்லை. ஏன் அப்படி அவர்கள் செய்யவேண்டுமென்பது எனக்கு நன்றாய் விளங்கவில்லை. ஒரு வேளை காரணமில்லாமல் கொண்டு போனால் அவர்களைக் கொலையென்னும் குற்றத்திற்காகத் தர்மராஜன் தூக்கிலிட்டு விடுவான் என்று நினைந்து பயப்படுகிறார்களோ? என் கருத்தை விளக்க ஒரு சிறு கதை இவ்விடத்திற்குப் பொருந்தும். அது பாண்டியன் தரும நீதியை விளக்கவும் சொல்வதுண்டு. அது சோமசுந்தரக் கடவுள் லீலாவிபூதியுமாகும். பாண்டியன் எல்லைக்குள் ஒரு பிராமணன் தன் மனைவியோடு போய்க் கொண்டிருந்தான். தன் மனைவியின் தாகத்தைத் தீர்க்கும் பொருட்டு அவளை ஒரு மரத்தடியில் படுக்கச் சொல்லிவிட்டுத் தீர்த்தம் கொண்டுவரச் சென்றான். திரும்பி வந்தபோது அவள் மார்பில் அம்பு பாய்ந்து இறந்து கிடக்கக் கண்டான். அடித்துக்கொண்டு அழுதான். சற்று தூரத்தில் ஒரு வேடன் தன் வில்லில் அம்பு கோத்திழுத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். உடனே தன் மனைவியைக் கொன்றவன் இவ்வேடனே என்று நிச்சயித்து, அவனை யிழுத்துக் கொண்டு போய்த் தன் மனைவியின் சவத்தையுங் காட்டி இந்த அநியாயம் உன்செங்கோலுக்கழகோ என்று அரசனிடம்முறையிட்டான். வேடன், தான் கொல்லவில்லை என்று உறுதியாய்க் கூறினான். அரசன் யாது செய்வதென்று தெரியாமல் தவித்துச்சோர்வடைந்து மதுரைமூர்த்தியை வேண்டிப் பிரார்த்தித்தான். அன்றிரவு ஈசன் கனவில் வந்து "நாளை செட்டி வீட்டில் கல்யாணம் நடக்கும்; அங்கே பிராமணனைக் கூட்டிக் கொண்டு நீயும் சென்றால் இந்தச் சம்பவத்தின் மர்மம் புலப்படும்" என்று வாக்களித்தார். அப்படியே அங்குச் சென்றார்கள். அவர்கள்புலன்களுக்கு அறியமுடியாத விஷயங்களை அறி

யும் திறமை அருளால் பெற்றார்கள். கல்யாண வீட்டில் எமதூதர்கள் சஞ்சாரம்செய்வதைக் கண்டார்கள்; ஆச்சரியப்பட்டார்கள்; அவர்கள் பேசுவதைக் கவனித்தார்கள். 'நேற்று அந்தணன் மனைவியை அம்மரத்தில் வெகுநாளைக்குமுன் சிக்கிக்கொண்ட அம்பை விழும்படிச் செய்து அவளை இறக்கச் செய்தோம்; இன்றைக்கு எப்படி இந்தக் கல்யாண மாப்பிள்ளையைக் கொண்டு செல்வது? மாட்டுக் கொட்டத்திலிருக்கும் எருமையை அவிழ்த்து வீட்டிற்குள் விட்டு அதன் கால்பட்டுக் கீழேவிழும்படிச் செய்து சாகச் செய்வோம்' என்று பேசிக்கொள்வது இவர்களுக்குக் கேட்டது. உடனே சம்பவம் அம்மாதிரி முடிந்ததையும் கண்டார்கள். பிறகு சந்தேகம்தீர்ந்து அந்தணனும் வேடனும் தங்கள் வேலையை நோக்கிச் சென்றார்கள். வேந்தனும் அகமகிழ்ந்தான். சாக்கில்லாமல் ஏன் மரணம் மனிதனைக் கொல்லாது?

7. உலகத்தில் காண்பவைகள் நமக்கு ஆறுதலைத் தருவதில்லை. நல்லவர்கள் கஷ்டப்படுகிறார்கள்; தீயோர்கள் சுகத்திலிருந்து உல்லாசமாயிருக்கிறார்கள். புராணங்கள் அதை நினைப்பூட்டுகின்றன. தர்மபுத்திராதிகள் பட்ட கஷ்டங்கள் பல; துரியோதனாதிகள் போகத்திலிருந்தார்கள். பிரஹலாதன் பலவிதமாய் வருத்தப்பட்டான்; ஹிரணியன் எல்லாராலும் சேவிக்கப்பெற்று வாழ்ந்தான். ஒன்றும் புரியவில்லை. உலகத்தில் இது சகஜமாயிருக்கிறது. இதைக்காணும் நாம் சில வேளைகளில் ஏன் அப்பா இவ்வுலகில் பிறந்தோம்; இறந்தொழிவோம் என்று நினைக்கிறோம், நினைத்தபடி செய்ய முடிவதில்லை; வெகு சங்கடமாயிருக்கிறது கஷ்டங்களைத் தாங்கமுடியாதவன் இறக்கப் பிரியப்படுகிறான். போகத்தையே இடைவிடாமல் பெற்றவன் தன் வாழ்நாள்கள் நீடித்திருக்கவேண்டுமென்று ஆவல்கொள்ளுகிறான். இருவரையும் எமன் ஏமாற்றி விடுகிறான்.



8. மரணத்தைப்பற்றிச் சிந்திப்பவர்களே கிடையாது. இறந்து கொண்டிருக்கும் மனிதன்கூட அதைப்பற்றி நினைக்கிறானோ என்பது சந்தேகம். பக்கத்திலிருப்பவர்களும் உயிரிருக்கும்வரை பிழைப்பான் என்று நினைக்கிறார்கள். இவர்களைப்போல்தான் அவனும் நினைத்திருப்பான் என்று தோன்றுகிறது. ஞாபகமிருக்கும் வரை "பிழைத்து விடுவேன்" என்று தானிருக்கிறான். ஞாபகமில்லாமல் போன பிறகு என்ன சிந்தித்தான் என்று சொல்ல முடியவில்லை. 'இப்படி நினைத்திருப்பான்; அப்படி நினைத்திருப்பான்; இதைச் சொல்ல எண்ணினான்; அதைச்சொல்லப் பிரயத்தனப்பட்டான்; சமிக்கை இப்படி காட்டினான்; அவன் வரும்வரை உயிரிருந்தது' என்று பல விதமாய் அவன் பந்துக்கள் சொல்லிக் கொள்கிறார்கள். அவற்றின் உண்மையை நிர்ணயிக்க முடியாமல் போய்விடுகிறது. யாவருமிருக்கும் போதே ஒருவரும் அறியாவண்ணம் ஜகஜ்ஜாலக்கள்வனாகிய காலன் உயிரை அபகரித்துப்போய் விடுகிறான். தப்பமுடியாது; வாஸ்தவம்தான். ஆனால் ஒரு சாவித்திரி, ஒரு மார்க்கண்டேயன், எமனை வென்றுவிட்டார்களே. இக்கதைகள் பொய்யோ; பொய்யுமல்ல. மரணத்தை வெல்வது கஷ்டம்தான்; கஷ்டமென்று விடவுமுடியவில்லையே; முயற்சியால் அவன் அருளைப்பெற வேண்டும். மனிதப் பிறப்பு வாய்த்ததும் அதற்கே. "பாலனை இன்றே பாடுங்கள், காலனை வென்றே யாடுங்கள்" என்னும் சீரிய மொழிகளை நேயர்களுக்கு ஞாபக மூட்டுகிறேன்.

9. ஜகதீசன் உலகத்திலுள்ள மன்னுயிர்களை யெல்லாம் இரட்சித்துப் பாரபட்சமில்லாமல் தனது அரசாட்சியை நடத்தி வருகிறான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். அறிவு நூல்களின் முடிவுமதுவே. இருந்தாலும் பல சமயங்களில் பல வினாக்களும் பல சந்தேகங்களும் ஏற்பட்டு விடுகின்றன.

ஒரு பக்தன் பாடுகிறான். பக்தர்கள் வாக்கைப் பழுது என்று தள்ளல் நியாயமில்லை.

“ நின்பக்க லன்பிலாப் பாவியர் படுந்துயரம்
 நின்னடியர் தாமுறுவதும்
நினையென்று மறவாத புண்ணியர் பெறுஞ் செல்வம்
 நின்மூடர் தான் பெறுவதும்
அன்புடன் நல்லறஞ் செய்தரும சாலிக
 ளல்லலான் மன நோவதும்
அறந்தனை மறந்திடும் அசத்தியப் பேயர்கள்
 அகமகிழ்ந்தே வாழ்வதும்
உன்மகிமை யோவலது கலியுகப் பெருமையோ
 வுனையன்றி யணு வசையுமோ
உலகினில் கண்கண்ட மெய்யான தெய்வமே
 உயர்பரங் குன்றிலுறைவாய்
வன்பகை சூர்வேர் களைந்ததுபோ லென்பகையை
 மாற்றிடும் வடிவேலவா
வண்ணமயில் வாகனா பொன்னேரகப் பதியில்
 வளர்சாமி நாத குருவே.”

ஆனால் காலன் விஷயத்தில் இச் சந்தேகங்கள் ஏற்பட நியாயமில்லை. மண்ணிலிருந்து உண்டான எல்லா உயிரையும் மண்ணிற்கே சேர்த்து விடுகிறான். வியாதிக்காரன் அயர்ந்து தூங்கும்போது ஒரு வேளை இறந்து விட்டானோ என்று சந்தேகப்பட்டு அடிக்கடிபோய் பார்க்கிறோம். இறந்த பிற்பாடு ஒருவேளை தூங்குகிறானோ என்று சந்தேகப்படுகிறோம். நமக்கு வேண்டியவர்கள் இறப்பதில் நமக்குச் சம்மதமே கிடையாது. எப்படி அழுது வேண்டினாலும் விடுவதில்லை. ரூபவான், சீமான், தீரன், வீரன், வேந்தன், உயர்குலத்தான், தாழ்ந்த வகுப்பான், நிபுணன், அசடன், பணக்காரன், ஏழை எல்லோரையும் மரணம் பிடித்தே விடுகிறது; எல்லாரையும் சமப்படுத்தி விடுகிறது. பாரபட்சம் என்பது கிடையாது. கடமையைப் பூர்த்தி செய்வதில் நிகரற்றவன்; தண்டனை விதிப்பதில் நிஷ்கண்டகன். உலகில் தருமம் நடைபெறுமோ என்ற சந்தேகம் யமனுள்ளவரை கிடையாது என்று நினைக்க வேண்டியதா யிருக்கிறது.



10. மரணம் என்றால் யாவரும் “ஆ, அப்பா” என்கிறார்கள்; பயப்படுகிறார்கள். ஓடி ஒளிந்து தப்ப முடியுமோ? நேர் நின்று சண்டை செய்து வெல்ல முடியுமோ? தந்திரமுண்டோ? வாழ்நாளை வீணில் கழித்த நடைபிணங்கள் அடையும் பீதிக்கு அளவேயில்லை. அறத்தில் நின்றவர்கள் “ மரண ப்ரமாதம் நமக்கில்லையாம் ” என்றிருப்பார்கள். போகமே ஜன்ம சார்த்தகம் என்று நினைத்து ஆயுளை வீண் செய்தவன் மரணத் தருவாயிலும் சுயநன்மையே கருதுகிறான். தன் யோக்கியதைக்குமீறி தனக்கு எல்லாம்கிடைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். எவ்வளவு பிறரிடத்திலிருந்து சுரண்டமுடியுமோ அவ்வளவும் வெகு சாமர்த்தியமாய்ச் சுரண்டிவிடுகிறான். சுரண்டிப் புரண்டிப் பணக்குவியல் சேர்த்துவிட்டு வியாதியால் அவஸ்தைப் படும்போது பல வீண்மனோராஜ்ஜியங்கள் செய்கிறான். வியாபாரத்தில்மோசம் செய்வதும் ஏமாற்றுவதும் உலக வழக்கமாய்த்தா னிருக்கிறது. பலபேர்கள் நடந்தபடிதானே நடந்தேன். தன்னைத் தான் பேணுதலும், காத்துக்கொள்ளுதலும், மைந்தர்களுக்குத் தேடிவைத்தலும் தவறோ? தருமத்திற்கு இவ்வளவு வைக்கலாமென்றிருக்கிறேன். எப்படி ஏற்பாடு செய்யலாமென்று யோசிக்கிறான். பக்கத்து வீட்டுக்காரன் பரம ஏழை; கொஞ்சம் அவருக்குக் கொடுஎன்றால் ஏன் அவ்விதம் செய்யவேண்டுமென்கிறான். போகாத வியாதியை நீக்கப் பேர்மிக்க வைத்தியருக்கு ஏராளமாய்த் தடையின்றிக் கொடுக்கிறான். “ஒரு ஏழையின் கடனைக் கேளாமல் விட்டுவிடு, வியாதி போய்விடு”மென்றால் நம்பமாட்டேன் என்கிறான்.

"தாய் தகப்பனில்லாத இந்தச் சிறுவனுக்கு ஒருபத்துரூபாய் கொடு" என்றால் கொடுக்கத் தயங்குகிறான். இந்தவிதமாய் ஜனங்கள் சுவாசமிருக்கும்வரை பிழைப்போம் என்று நம்பி வீண் எண்ணங் கொண்டு மண்ணில் போய்ச் சேருகிறார்கள்.

11. அநாயாச மரணத்தை மனிதன் வேண்டுகிறான். இப்படி விரும்புவதும் சுயநலத்தை உத்தேசித்தே. ஒரு வியாதிக்காரனை அருகிலிருப்பவர்கள் கட்டிக் காத்தாலும் தன்னைக் கவனிப்பவர்கள் ஒருவருமில்லையே என்று ஓலமிடுகிறான். எதைச் செய்தாலும் திருப்தி அடைவதில்லை; தலையைப் பிடி, காலைப் பிடி, கையைப் பிடி என்று கத்துகிறான். வியாதி சௌக்கியமாய் விட்டால் கை, கால், தலையைப் பிடித்தவர்களை மறந்து விடுகிறான். 'என்ன செய்து விட்டீர்கள்; என் தலைவிதி நன்றாயிருந்தது; பிழைத்தேன்' என்கிறான். நம்மில் பல பேர்கள் அப்படித்தான். மனித சுபாவம் இப்படியிருக்க, அநாயாச மரணத்தை விரும்புகிறவன் தன்னைச் சேர்ந்தவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்று எண்ணியும் நிச்சயித்தும் இப்படி வேண்டுகிறான் என்று உறுதியாய்ச் சொல்ல முடியாமலிருக்கிறது. வேண்டினாலும் விரும்பினாலும் கிடைத்துவிடுமோ? பாக்கியம் செய்திருக்க வேண்டும்; பூசைசெய்து ஈசனருளைச் சம்பாதித்திருக்க வேண்டும்.

12. மரணவேதனையென்பது ஒருவனுக்கு ஒருமாதிரி, மற்றொருவனுக்கு வேறுமாதிரி என்று உறுதியாய்ச் சொல்ல முடியாது. மரண வேதனை ஒரே மாதிரி என்று கொள்ளல் தவறாகாது. விளக்கு அணைவதைக் கவனித்தவர்கள் இதை ஒப்புக்கொள்ளலாம். பட், பட் என்று துரிதமாய் அடித்துவிட்டு அணைகிறது. அதுபோல் உள்ளும் புறமும் சுவாசம் வேகமாய்ச் சென்று நின்று விடுகிறது. விளக்கு எண்ணெயில்லாமலோ போதாமலோ மங்குவதை எப்படி அணைதல்



என்று ஒப்புக்கொள்ள முடியாதோ அதுபோல் வியாதிக்காரன் படும் அவஸ்தையெல்லாம் மரணவேதனை என்று சொல்ல முடியாது. நின்ற நிலையில் ஒவ்வொரு தழையாய் உதிரப்பெற்று உலர்ந்து போய்க் கடைசியாகக் கீழே சாய்கிறது ஒரு மரம். பெரும் காற்றினால் மோதப்பெற்று மற்றொரு மரம் சாய்ந்துவிடுகிறது. பிறகு இலைகள் உதிரப்பெற்றுக் காய்ந்துபோகிறது. கீழே விழுதல் மரத்திற்குச் சாதல் என்று ஒப்புக்கொண்டால் வேதனை சமம் என்றே சொல்வது தப்பிதமில்லை.

13. "பிறந்ததுண்டானலன்றோ பிறகு சாவதுதானுண்டாம்." பிறத்தலும் பொய்; இறத்தலும் பொய்; போலித் தோற்றம் என்று சாதிப்பதுமுண்டு. இது ஒருவேளை அநுபவத்திலறியவேண்டிய விஷயம் போலும்! பிறந்தவன் இறந்தே தீரவேண்டும்; இறந்தவன் பிறந்தேயாக வேண்டும். இவ்விஷயங்களை ரூபித்து அடையும்பலன் என்னவோ; நன்றாய் விளங்கவில்லை. பிறந்தாய்விட்டது; இறவாமலிருக்க முயலலாமோ, இறந்து விட்டால் பிறவாமலிருக்க முயலலாமோ என்பது விளங்கவில்லை. அத்தானத்தில் சுயேச்சை நமக்கிருப்பதாக ரூபிக்க வொண்ணாது. இறந்தபிறகு எங்கே செல்கிறோம்? என்னமாய் முடிகிறது? ஜீவனால் செய்யக்கூடியதென்ன என்ற விஷயங்களெல்லாம் பெரும்பான்மையோருக்குந் தெளிவாய்த் தெரியாததாயிருக்கின்றன. இம்மாநிலத்தில் பிறந்தேதான் முத்தியடைய வேண்டுமென்பது நூல்களின் துணிவு. ஆகவே சாவாமருந்தைத் தேடவேண்டும். பிறவாமலிருக்கவேண்டும். "மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும்", "பிறவிப் பெருங் கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார்," இவ்வாக்குகளைத்தான் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

14. சாத்திரங்களில் நமக்கு இருநிலை விதிக்கப்பட்டிருக்கிறது. பந்தத்திற்குக் காரணமான மனை, மக்கள், தனம்

முதலானவைகளை விட்டுத் துறவுபூணல் அல்லது பந்தத்திற்கிடையே தளராமல் நின்று தியாகத்தைப் பூஷணமாகக் கொண்டு ஒன்றிலும் ஒட்டாமல் இல்லறம் நடாத்தல். இவ்விரண்டில் எது பெரிது என்ற வாதத்தில் நுழையவேண்டிய அவசியமில்லை; இரண்டும் சமமே. கடமைகளைச் சாத்திரத்தில் விதித்தபடிப் பேணிநடப்பவனே பெரியவனாவான். தருமங்களைச் சொல்வதோ அறிவதோ சுலபம். அனுஷ்டிப்பது கடினம்தான். "கற்கக் கசடறக் கற்றபின், நிற்க அதற்குத் தக". என்று மார்தட்டுகிறோம். நம் நிலையைக் கவனிப்பதில்லை. நளனை நாம் அறிவோம். அவன் சதுர்த்தச (14) வித்தைகள் கற்றவன். இவன் இப்பதினான்கு வித்தைகளும் தெரிந்துகொள்வதற்காக நான்கு தசைகளைக் கொடுத்தான் என்று சொல்வதுண்டு. அவைகள் "படிப்பது படித்ததை அறிந்து கொள்வது, படித்ததின்படி நடப்பது, மற்றவர்களை நடக்கச்செய்வது."

நமக்குப் பெரும் நோய் வந்துவிட்டால் கசப்பான மருந்து, விலை உயர்ந்த மருந்து வாங்கிக் கொள்ளுகிறோம். கண்டிப்பான கட்டுப்பாடுகளிலிருக்கச் சம்மதிக்கிறோம். வியாதி தீராது, மருந்து உபயோகமில்லையென்று அறிந்தாலும் சாப்பிட்டுப் பார்க்கிறோமல்லவா?

பிறப்பும் இறப்பும் வியாதிகள்; வைத்தியநாதன் ஜகதீசன்; சாவை வென்றவன் மார்க்கண்டன்; ஈசனை மருந்தாக அடைந்தான்; கூத்தன் உதவியால் கூற்றைவென்றான். நமக்கும் எவ்வுயிர்க்கும் அவரே மருந்து. நாமும் நமனைவென்று கர்ச்சிக்கலாம்.

15. மரணம் என்ற வியாதிக்குப் பக்தியே மருந்து. அதுவே உணவுமாகும். அகந்தையையொழித்துச் சரணம் புகுதல் வேண்டும். ஆரோக்கியமும், ஆயுள் விருத்தியும் கொடுக்க வல்ல ஔடதம் இதுவே. பக்தனுக்கு மரணபயமில்லை. ஆயுள் வலியிருந்து காலனணுகாமல் காக்கும் பலத்தையும் அடைகிறான். நாமெல்லாரும் மார்க்கண்டனாகி மார்க்கண்டனாயிருக்கவேண்டும். நீலகண்டம், நீலகண்டம், நீலகண்டம் என்று பன்முறை சொல்லவேண்டும். ஞானசம்பந்தர் திருச்செங்கோட்டில்'நீலகண்ட'மென்று முடியும் தேவாரம் பாடித் தன்னைச் சார்ந்தார் மலைசுரமொழியப் பாடவில்லையா? அவ்வட்டாரத்திலே இன்றும் மலைசுரமில்லாமலொழியவில்லையா? இச்சம்பவத்தை வெறும் கதையென்று நினைக்கும் மனப்பான்மை கொண்ட நேயர்களுக்கு இரங்க வேண்டியதைத் தவிரச் செய்யக்கூடியது யாதொன்றுமில்லை.



வியாதிக்காரனுக்கு வயித்தியன் பேரில் நம்பிக்கையும், அவன் மருந்து கட்டாயமாய் குணத்தைச் செய்யும் என்ற நிச்சயமும் வியாதி தீருவதற்கு எப்படி முக்கியமோ, அது போல மரணப் பிணியையும் பிறவிப் பிணியையும் ஒழிக்க ஈசன் துணைதான் மெய்த்துணை யென்று நம்பும் உறுதி வேண்டும்.

"சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் றனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே."

அருணகிரியார் பெருத்த பாருள்ளாருக்கு எச்சரிக்கை செய்யுங் கருத்தோடு பாடிய கந்தரலங்காரச் செய்யுளை எழுதிவிட்டு இக்கட்டுரையை முடிக்கப் பிரியப்படுகின்றேன். ஈசனைக் காலையிலும் மாலையிலும் நினைக்கும் எண்ணத்தை விட்டோம். பல அல்லல்களில் சிக்கி விழிக்கிறோம். அவன் நாமமே கைகண்ட மருந்து. அது மதியால் வித்தகனாகவும், மனதால் உத்தமனாகவும் செய்யும்.

"அழித்துப் பிறக்கவொட் டாஅயில் வேலன் கவியைஅன்பா
லெழுத்துப் பிழையறக் கற்கின் றிலீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே."

# தலைமைப் பேருரை*

"நல்லாற்றவ ஞானநன்குடையர் தம்மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப்பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லையில்புக ழெந்தைகேதீச்சர மிராப்பக னிலைத்தேத்தி
அல்லலாசறுத் தானடியிணை தொழு மன்பரா மடியாரே."—சம்பந்தர்.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்."—சேக்கிழார்

**சிவநேயச் செல்வர்களே, செல்விகளே !**

உங்கள் பொன்னார் திருவடிகட்கு அடியேனது வணக்கம் உரியதாகுக. உங்கள் தென்னிலங்கைத் திருநாடு, திருக்கேதீச்சரம், திருக்கோணமாமலை என்னும் இரு பாடல்பெற்ற சிவத்தலங்களையும், கதிர்காமம் என்னும் முருகப்பெருமான் ஆடல் புரியும் திருத்தலத்தையும் தனக்கு அணிகலனாகக் கொண்டு விளங்குகின்றது. "தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்—செல்வருந் தொக்கது நாடு" என்னும் திருக்குறளுக்கிலக்கியமாய்த் திகழ்வதும் உங்கள் நாடன்றோ! சைவத்துக்கும் தமிழுக்கும் புத்துயிரளிக்கத் திருஅவதாரம் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள், உயர்திருவாளர்கள் சபாபதி நாவலரவர்கள், அம்பலவாண நாவல சுவாமிகள், மகாவித்வான் பொன்னம்பலம்பிள்ளையவர்கள், சங்கர பண்டிதரவர்கள், சாமிநாத பண்டிதரவர்கள், சிவப்பிரகாச பண்டிதரவர்கள், காசிவாசி சி. செந்திநாதையரவர்கள், அ. குமாரசுவாமிப் புலவரவர்கள், சி. வை. தாமோதரம்பிள்ளை

[*கொழும்புமாநகர் விவேகானந்த சபையின் 35-ஆவது ஆண்டு நிறைவு விழாவில் (29-5-28) தலைமைவகித்த தூத்துக்குடி சித்தாந்த ஆசிரியர் உயர்திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் நிகழ்த்தியது.]



யவர்கள், சபாரத்தின முதலியாரவர்கள், சி. தாமோதரம் பிள்ளையவர்கள், திருவிளங்கமவர்கள் முதலிய பல வித்துவ சிரோமணிகள் தோன்றியதும் உங்கள் திருநாட்டிலன்றோ? சைவமும் தமிழும் தழைக்கப் பெருங்காவலராயமர்ந்து குன்றாச்செல்வமும், பொன்றாப் புகழும் பொலிந்துவிளங்கிய உயர்திரு குமாரசுவாமியார், இராமநாதர், அருணாசலத்தார் என்னும் மும்மணிகள் தோன்றியருளியதும் உங்கள் தென்னிலங்கைத் திருநாட்டிலன்றோ! இத்தகைய திருநாட்டின் தலைநகரமாய்க் கலந்தருபொருளும் நிலந்தருபொருளும் நிறைந்து நிலமகட்கொரு திலகம்போன்று விளங்கும் கொழும்புமாநகரமாகிய இத்திருநகரின்கண், அமெரிக்கா முதலிய மேலைநாடுகட்குச் சென்று இந்து சமயம் இணையற்ற ஒரு மெய்ப்பெரும் சமயம் என்பதனை நாட்டி வெற்றிமாலை சூடிய முனிபுங்கவராகிய ஸ்ரீவிவேகானந்த சுவாமிகள் திருப்பெயரால் நிறுவப்பெற்றுள்ள விவேகானந்த சபையாகிய இச்சீரியசபையின் முப்பத்தைந்தாம் ஆண்டுநிறைவு விழாவைக் கொண்டாடி மகிழுதற்பொருட்டு அறிவிற்சிறந்த நீங்களெல்லீரும் ஈண்டுக் குழுமியிருக்கின்றீர்கள். இப்பேரவை பொன்னம்பலம் போன்று விளங்குகின்றது. இதற்கு அம்பலவாணனே அன்றி அவன் மெய்யருள்பெற்ற அடியவர் ஒருவரோ தலைமை பூணுதலே தக்கதாகும். கல்லாதவரிற் கடைப்பட்ட நாயேன் தலைமை தாங்குதற்கு எவ்வாற்றானும் உரியேனல்லேன், அங்ஙனமாகவும் அடியேனைத் தலைமை வகிக்குமாறு ஆணையளித்திருக்கின்றீர்கள். இவ்வாறு தாங்கள் ஆணையளித்தமைக்குரிய காரணத்தை அடியேன் நன்குணர்வேன். அது, ஐம்பது ஆண்டுகட்கு மேலாகச் சித்தாந்த சைவச் செழும்பயிரைச் செம்மையாக வளர்த்துவரும் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையில் நாற்பது ஆண்டுகளாகத் தமியேன் ஒரு தொண்டனாக அமர்ந்து இயற்றிவரும் சிறிய தொண்டு

களைப் பெரிதாக மதித்துள்ளமையேயாகும். இனி, அன்பர்க ளாகிய உங்கள் ஆணையை மறுத்தல் தகாதென அஞ்சியே இட்டபணியைத் தாழ்மையுடன் ஏற்றுக் கொள்ளுகின்றேன்.

**அன்பர்களே !**

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே"

எனத் திருவாதவூரடிகள் கூறியருளியவாறு கோனாகியானென தென்றவரவரைக் கூத்தாட்டுபவன் எல்லாம் வல்ல சிவபரஞ் சுடரேயாதலின், அவன் திருவருள்வழியினின்று அடியேற்கு அளித்த தலைமைப்பணியைச் செய்து முடிப்பேனாக.

**பெரியோர்களே !**

நாமெல்லாம் சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெற்றிருக் கின்றோம். ஆதலின் அதன் அருமை பெருமைகளை ஒருவாறு உணர்ந்துகொள்ளுதல் நலனெனக் கருதி ஒருசில ஈண்டுக் கூறுகின்றேன்.

## ௧. சைவ சமயத்தின் பழைமை

சைவசமயம் இன்னகாலத்துத் தோன்றியது என்பதை அறியக்கூடவில்லை. கடற்கோட்பட்ட லெமூரியா கண்டமே முதற்கண் மக்கள் வாழ்ந்த இடம் என்றும், அங்கு வாழ்ந்த மக்களாற் கைக்கொள்ளப்பட்ட சமயம் சைவசமயமே என் றும் சில சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றார். அன்றி யும் சிதம்பரம், திருவாரூர், மதுரை முதலிய தலங்களிலுள்ள திருக்கோயில்கள் மிகப் பழையகாலத்தன என்பதை அவை



தாமே காட்டிக்கொண்டிருக்கின்றன. சுமார் ஆயிரத்து முந் நூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தருளிய அப்பர்சுவாமிகள்,

"ஒருவனா யுலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணும் தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகந்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே"

எனக் கூறியவாற்றால் இவ்வுண்மை இனிது விளங்கும். இனி இச்சமயம் மிகப் பழைய காலத்ததேனும் என்றுமோ ரியல்பினனாகிய இறைவனைப்போன்று தன்னியல்பிற் சிறி தும் மாறுபடாதிருத்தல் வியப்பன்றோ !

## ௨. தத்துவ ஆராய்ச்சி

இனி, இக்காலத்து மேற்றிசை அறிவியல் வல்லார் தமது ஓர்த்துணரும் ஆராய்ச்சித் திறத்தாற் காணப்பெறும் தத்துவ உண்மைகட்கு மாறுபட்டு ஒழியும் சமயங்களோ பல. ஆனால் நமது சமயம் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றிய னாம் இறைவனைப்போல புதிய தத்துவ ஆராய்ச்சிக் கொள்கை கட்கும் ஒத்தனவாகவே காணப்படுகின்றது. "இல்லது வாராது உள்ளது போகாது" "ஓரியல்புடைய பொருள் மற் றோர் இயல்புடைய பொருளாக மாறாது" என்பன போன் றவை தற்கால ஆராய்ச்சிக்கும் நமது சமய தத்துவ ஆராய்ச் சிக்கும் ஒத்தனவே யாகும். காணப்படும் சடப்பொருள்களா கிய அறிவில்பொருள்களெல்லாம் 'மாயை' என்னும் முதற் காரணமாகிய ஒன்றினின்றே உண்டாவன என்பது நமது

சமயக் கொள்கை. உலகிற்குரிய மூலப் பொருள்கள் பலவுள எனக் கூறிக்கொண்டிருந்த தற்கால ஆராய்ச்சியாளர்கள் இப்பொழுது எல்லாம் ஒரு பொருளினின்றே தோன்றுகின்றன என்னும் நமது சமய முடிவுக்கு வந்திருப்பது சிந்திக்கத்தக்கது. இன்னும் நவீன ஆராய்ச்சியாளரால் கண்டறியப்படாத தத்துவங்கள் பலவுள. தத்துவங்களின் உண்மைகூற எழுந்த ஏனைச் சமயங்களும் ஆன்ம தத்துவமாகிய இருபத்துநான்கு தத்துவங்களுடன் நின்று விட்டன. நமது சைவ சமயமோ அவற்றின் மேலும் வித்தியா தத்துவ, சிவ தத்துவங்களாகிய பன்னிரண்டு தத்துவங்கள் உளவெனக் கூறி அவற்றின் இயல்புகளையும் விளங்க உரைக்கின்றது.

### ௩. ஏனைச் சமயங்களைத் தழுவல்

இனி, மாணவர்களின் அறிவு வேற்றுமைகட்கு ஏற்ப ஒரு கலாசாலையில் பல வகுப்புகள் அமைக்கப் பெற்றிருப்பது போல, மக்களின் புண்ணிய பரிபாகத்திற்கேற்பப் பல சமயங்கள் வேண்டப்படுவதும் நியாயமே யாகும். இவ்வுண்மையுணர மாட்டாத சமயங்களெல்லாம் ஒவ்வொன்றும் தானே மெய்ச்சமயம் என்றும், மற்றைச் சமயங்களெல்லாம் பொய்ச் சமயங்கள் என்றும் அவற்றின் வழி ஒழுகுவோர் நிரயமே புகுவர் என்றும் கூறக் காண்கின்றோம். ஆனால் நமது சமயமோ அவ்வாறு கூறுவதில்லை. பெருங் கருணைத் தடங்கடலாகிய இறைவன் எல்லா உயிர்களையும் தனது திருவடிக்கு ஆளாக்கிப் பேரானந்தப் பெருஞ்செல்வத்தை அவற்றிற்கு அளித்தல் வேண்டும்என்னும் திருவுள்ளமுடையனாகலானும், இக்கருத்துப்பற்றியே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் ஓவாது செய்துகொண்டிருக்கின்றானாகலானும் எச்சமயநெறி நிற்பினும் அன்னோரை ஆட்கொண்டருளுவானெனவே கூறுகிற்கும்.



"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்"

என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. அன்றியும் நமது சைவசமயம் ஏனைச்சமயப்பொருள்களை ஆராய்ந்து அவற்றின் வன்மை மென்மைகட் கேற்பப் புறப்புறச்சமயம், புறச் சமயம், அகப் புறச்சமயம், அகச்சமயம் என நான்கு பிரிவு களாக வகுத்து அவற்றைத் தனக்குப் படிமுறையாகக் கொண்டிருக்கின்றது.

### ௪. சமயப் பொருள்பற்றிய ஆராய்ச்சி

இனி, ஏனைச் சமயங்களெல்லாம் தத்தம் உண்மைகளை வாளாகூறி யொழிந்தனவேயன்றி அவற்றை அளவைகளான் ஆராய்ந்து நிலைநிறுத்தவில்லை. ஆனால் நமது சமயமோ அவ் வாறின்றிப் பொருளுண்மைகளையும் அவற்றின் இலக்கணங் களையும் அளவை முகத்தான் ஆராய்ந்தே முடிவுகட்டியிருக் கின்றது. ஆசிரியர் மெய்கண்ட தேவரால் அருளிச்செய்யப் பெற்றுள்ள சிவஞான போதம் என்னும் ஒப்பரும் நூலை நோக்குவோமாக. அது, பொது உண்மை யென இரு அதி காரங்களையும், பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என நான்கு இயல்களையும், ஒவ்வோர் இயலினும் பல அதி கரணங்களையும் வகுத்துக்கொண்டு பதி-பசு-பாசம் என்னும் முப்பொருள்களைப்பற்றிச் செய்யும் ஆராய்ச்சித்திறன், மிக வும் நுட்பமும் செப்பமும் செறிந்ததாகக் காணக்கிடக்கின் றது. இவ்வாராய்ச்சியில் வேதாந்த சூத்திர மாபாடியக்காரர் களான ஸ்ரீ சங்கர, இராமாநுஜ, மத்துவ ஆச்சாரியர்களால் உண்மை காணப்பெறாத "அத்துவிதம்" என்னும் சொல் லின் ஆராய்ச்சி செய்யப்பெற்றிருக்கின்றது. அத்துவிதம் என்னும் சொல் உபநிடதங்களிற் கூறப்பட்டுள்ள ஒருசிறந்த சொல்லாகும். அச்சொல்லுக்கு விளக்கம் கூறவந்த ஸ்ரீசங்

காரச்சாரியார், அகரம்-அன்மை-இன்மை, மறுதலைப்பொருள்களை உணர்த்தும் எனக்கூறும் இலக்கண விதியுள் "அத்துவிதம்" என்னும் சொல்லின்கண் வந்த அகரத்திற்கு இன்மைப்பொருள் கொண்டு "பிரமம்-உலகம் என இருபொருள்களில்லை; பிரமம் என்னும் ஓரே பொருள்தான் உள்ளது" என முடிவு செய்துள்ளார். ஸ்ரீ இராமாநுஜாச்சாரியார் "உலகம் என்னும் பொருள் ஒன்று உண்டென்பது காட்சியளவையானும் உரையளவையானும் அறியக்கிடத்தலின், அதனை இல்பொருள் என்றல் பொருந்தாது. ஆதலின் உலகத்துக்கு விசிட்டமாயிருக்கின்ற பிரமப் பொருள் இரண்டில்லை ஒன்றேயுள்ளது என்பதே பொருத்தமுடைத்து" என அவரும் அகரத்திற்கு இன்மைப் பொருள்கொண்டே உரைசெய்தார். ஸ்ரீ மத்துவாச்சாரியார் அகரத்திற்கு மறுதலைப் பொருள் கொண்டு இரண்டன் மறுதலை ஒன்றென்னவே ஒன்றன் மறுதலை இரண்டெனவே கொள்ளப்படும் எனக்கொண்டு "பிரமம் உலகம் என்னும் இரு பொருள்கள் வேறுவேறாக உள்ளன" என உரை செய்தார். இங்ஙனம் அவரவர் கொண்ட உரைக்கேற்பப் பாடியங்களையும் வேறு வேறாகச் செய்வாராயினர். இம்மூவர் கூற்றுக்களும் பொருத்தமில்லன என்பது ஆசிரியர் மெய்கண்ட தேவரின் திருவுள்ளமாகும்.

அகரம்-அன்மை, இன்மை, மறுதலைப் பொருள்களைப் பயக்குமேனும் "அத்துவிதம்" என்னும் எண்ணுப்பெயர் மேல்வந்த அகரம், அன்மைப் பொருள் மாத்திரையேயுணர்த்துமன்றி இன்மை மறுதலைப்பொருள்களை உணர்த்தமாட்டாது என்பது உலகவழக்கில் அறியக்கிடப்பதோர் வாய்மையாகும். "அநேகம்" என்னும் சொல் ஒன்றல்ல பலவென்பதனை யுணர்த்துமன்றி ஒன்றில்லை சூனியம் என்பதனை யுணர்த்துமாறில்லை யென்பது எல்லாக்கும் ஒப்பமுடிந்ததொன்றாகும். ஆகவே, ஆசிரியர் மெய்கண்ட தேவர் "அத்து



விதம்" என்னும் சொல்லுக்கு இரண்டல்லவெனவேபொருள் கொண்டு என் அருமறைகள் உலகமும் இறைவனும் இரண்டல்லவெனக்கூறியன என்பதின் தாற்பரியத்தை,

"பண்ணையு மோசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும்போல் எங்குமாம்—அண்ணல்தாள்
அத்துவிதமாத லருமறைக ளொன்றென்னாது
அத்துவித மென்றறையு மாங்கு"

என்னும் திருவெண்பாவினால் விளக்கியருளினார்.

(இதன் கருத்து) இறைவன் திருவருள், பண்ணும் அதன் ஓசையும் போலவும், பழமும் அதன் சுவையும் போலவும் ஔபச் சிலேடிக வியாபகமாய் உயிர்களுடன் வேற்றுமையின்றி அதுவதுவாய் நிற்றலின், இறைவனும் உயிர்களும் வேறென்றுவது, இறைவனும் உயிர்களும் வெவ்வேறு பொருள்களாதலின் ஒன்றென்றுவது கூறாமல் இரண்டல்லவென (அத்துவிதமென) மறைகள் பொதுப்படக் கூறிற்றென்பதாம். இங்ஙனம் அத்துவிதத்தின் உண்மைப் பொருள்களைக் கண்டமையானன்றோ மெய்கண்ட தேவரை,

"பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ"

எனத் தாயுமான சுவாமிகள் துதிப்பாராயினர்.

அன்றியும், உபநிடதங்களில் தன்னைச் சிவமாக அல்லது பிரமமாகப் பாவிக்கவேண்டி "சிவோகம்", "பிரமாகம்" என்னும் சொற்கள் கூறப்பட்டிருக்கின்றன. விடநிவர்த்தியின் பொருட்டுக் கருடோகம்பாவனை செய்யப்படுவதுபோல, மலநீக்கத்தின்பொருட்டு சிவோகம்பாவனை செய்யுமாறு விதிக்கப்பட்டது என்னும் உண்மை சிவஞானபோதம், சித்தியார் என்னும் இருநூல்களினும் செவ்வையாக விளக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வுண்மையறியாதார் சிவன் பிரமசொரூப

மாதலின் தன்னைப் பிரமமாகப்பாவிக்குமாறு உபநிடதங்களில் விதிக்கப்பெற்றிருக்கின்றது என உரைக்கின்றனர். சிவன் பிரமமாயிருந்தால் தானே தன்னைப் பிரமம் என்று பாவிக்க வேண்டியதென்னை என்பதனை அன்னோர் உணர்கின்றிலர்.

## ௫. பொருட் பெருக்கம்

இன்றும் நமது சைவசித்தாந்த மெய்யருணூல்களில் கூறப்படும் பொருள்கள்பல. அவையாவன: பதி-பசு-பாசம் என்னும் முப்பொருளுண்மை, அவற்றின் சொரூப, தடத்த (சிறப்பு-பொது) இலக்கணங்கள், பதிப்பொருள் சிவமே என்பது சிவத்தின் இலயபோக, அதிகார இயல்புகள், சிவபெருமான் செய்யும் ஐந்தொழில்கள், அவற்றின்பயன், சிவத்தின் நவந்தருபேதம், சிவம் சக்தி என்னும் இரண்டின் சம்பந்தம், சத்திபேதங்களும், தொழில்களும், ஆன்மாக்களின் பேதம், ஆன்மாவுக்கும் ஆணவ மலத்துக்கும் உள்ள சம்பந்தம், ஆன்மாவுக்கும்-மாயை கன்மங்களுக்கும் உள்ள சம்பந்தம், ஆன்மா கன்மத்தால் பிறந்திறந்துழலும் தன்மைகள், பிறவியின் பேதங்கள், உடலின் பேதங்கள், மாயையின் வகைகள், அவற்றினின்றும் பிறக்கும் தத்துவங்கள், தத்துவங்களின் செயல்கள், தத்துவ கர்த்தாக்கள், பிரமன் விண்டு முதலிய மூர்த்தி பேதங்கள், அவர்களின் செயல்கள், சிவபிரான் தலைமைத் தன்மை, கேவல சகல சுத்தமாகிய காரண அவத்தைகளின் இயல்புகள், சாக்கிர முதலிய காரிய ஐந்தவத்தைகள், அவற்றிற்குரிய கருவிபேதங்கள், புண்ணியபாவங்களின் வகைகள், பெத்த முத்திகளின் இயல்புகள் முதலிய பலவிடயங்கள் கூறப்பெற்றிருக்கின்றன. சுருங்கக்கூறின் நமது சைவசித்தாந்த சாத்திரங்களிற் கூறப்படாத உண்மைகளும் ஆராய்ச்சிகளும் பிறிதில்லை யென்பதாம்.



**அன்பர்களே !**

மேலே கூறியவாற்றால் நமது சைவசமயம், மிகப் பழைமையுடையதும், புதிய ஆராய்ச்சிகட்கு மாறுபடாததும், தனது பொருளுண்மைகளை அளவைப் பிரமாணங்கொண்டு விளக்குவதும், ஏனைச் சமயங்களைத் தழுவும் விரிந்த நோக்கமுடையதும், வேதாந்தமாகிய உபநிடதங்களிற்றெளிவுபடாத உண்மைகளை இனிது விளக்குவதும், பொருட்பெருக்கமுடையதும் ஆகும் என்பது ஒருசிறிது விளக்கப்பட்டது.

## ௯. வேண்டுதல்

**பெரியோர்களே !**

நமது ஒப்பரும் பெருமை வாய்ந்த சைவசமயம் முற்காலத்து முடியுடை வேந்தர்களாலும், சைவ மக்களாலும் நன்கு போற்றப்பெற்று வந்தது. அளவிலாப் பொருட்செலவில் எண்ணிறந்த பெரிய பெரிய சிவாலயங்கள் நிறுவப்பெற்றுப் பரிபாலிக்கப்பெற்று வந்தன. நமது சமயம் பிற சமயிகளாற் கேடுறாவண்ணம் சமயாச்சாரியர்களாலும், சைவ நன்மக்களாலும் போற்றப்பெற்றது. சமயாச்சாரியர் முதலினோர் நாமெல்லாம் ஓதி உய்யும்வண்ணம் பன்னிருதிருமுறைகளை இயற்றியருளினார்கள். ஸ்ரீ மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர்கள் மெய்யருள் ஞான நூல்களை அளித்தருளினார்கள். ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் மாபாடியங்களுட் சிறந்த சித்தாந்த மாபாடியம் உரைத்தருளினார்கள். சைவாதீன கர்த்தர்கள் சாத்திர உண்மைகளைச் சைவ மக்கட்குப் போதித்தும், சமய விசேட நிருவாண தீக்கைப் பேறுகளை அளித்தும் வந்தார்கள். சைவ மக்களெல்லாம் சமய சாத்திரங்களை நன்குணர்ந்தும், சைவானுட்டானம் சிவபூசை முதலிய சமயநெறிகளில் ஒழுகியும் வந்தார்கள். இவ்வாறெல்லாம் விழுப்பமுற்றிருந்த நமது சமயத்தை இன்று எவ்வாறு

இருக்கின்றதென்பதை நீங்களெல்லீரும் நன்குணர்வீர்கள். நமது சமயத்தைக் கண்ணும் கருத்துமாய்ப் போற்றுவாரில்லை. சமய ஞானமும், சமய ஒழுக்கமும் நம்மவர்களிடத்தில் அறவே ஒழிந்துவிட்டன. புறச்சமயத்தாரால் நமது சமய மக்கள் கோடிக்கணக்காய்க் கொள்ளை கொள்ளப்படுகின்றனர். சமய போதனை செய்யவேண்டிய சைவாதீனங்கள் அறவே அதனைக் கைவிட்டுவிட்டன. சிவாலயங்கள் பல இடிந்தும் தகர்ந்தும் போயின. இவ்வாறெல்லாம் சீர்கெட்டுக் கிடக்கும் சைவத்துறைகளை மீண்டும் சிறப்புறச்செய்யவேண்டியது சைவமக்களாகிய நமது கடமையென்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். சைவம் ஆண்-பெண்-பாலர் முதலிய எல்லாருக்கும் பொது உடைமையாதலால் ஆடவர்களேயன்றிச் சைவ மங்கையர்களும், சைவ இளைஞர்களும் சைவபரிபாலன முயற்சியில்ஈடுபட்டு உழைக்க முன்வரவேண்டும். சைவ பரிபாலனத்துக்குஎன நிறுவப்பெற்றுள்ள நமது விவேகானந்தசபையையும், ஏனைய சபைகளையும் நாம் ஆதரிக்கவேண்டும். இனி நமது விவேகானந்தசபையார் நன்மாணவர்கட்குச் சைவசித்தாந்த நூல்களும்,தமிழ் இலக்கண இலக்கியங்களும் கற்பிப்பதுடன் பரீக்ஷைகளும் ஏற்படுத்தியிருப்பதாக அறிகின்றேன். இதற்கெல்லாம் பொருட்டுணை வேண்டுவது இன்றியமையாதது. செல்வர்களும், சீமாட்டிகளும் சபைக்கு வேண்டும் பொருள்களை வரையாது வழங்கி நிகரற்ற சிவதரும சிவஞானத்தை வளர்த்து என்றும் பொன்றாப் புகழும் இன்பமும் பெற்று இனிது வாழ்வார்களாக.

### எ. வாழ்த்து

நமது விவேகானந்த சபை நீடூழி நிலைபெற்று என்றும் சைவ வான்பயிரை வளர்த்துக்கொண்டிருக்கும் வண்ணம் திருவருள்பாலிக்க என்னையாளுடைத் திருஞானசம்பந்தப்



பெருமான் பொன்னடிகளைப் போற்றுகின்றேன். சபையை நன்கு பரிபாலித்துவரும் சீரியர்களும், சபையின் தொண்டுகளைக் கைம்மாறு கருதாது ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் ஆற்றிவரும் மெய்யன்பர்களும் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ்வார்களாக.

இதுகாறும் எனது புன்மொழிகளைப் பொறுமையுடன் செவிமடுத்த உங்கள் திருவடிகட்கு மீண்டும் ஒருமுறை வணக்கம் செய்கின்றேன்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

## தத்துவானுபோகக் கட்டளை

(மலர் ௧௧ - இதழ் - ௫ - உ௫௬-ம் பக்கத் தொடர்ச்சி)

### சிவதத்துவம்

இனிச் சிவதத்துவங்களாவன:—சுத்தவித்தை-ஈசுரம்-சாதாக்கியம் - சத்தி - சிவம் ஆக ௫.

### ௧. சுத்த வித்தை

இதில் சுத்தவித்தை யென்கிறதேது? அசுத்த மாயையிற்றோற்றப்பட்ட வித்தையைப் பிரேரிக்கிறது.

வித்தையைப் பிரேரிக்கிறது சுத்த வித்தையாகில், தத்துவங்கள் கர்த்தாவாலல்லது சீவியாதென்கிற தென்ன? அப்படியல்லகாண்; கர்த்தாவினுடைய சத்திகூடிநின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே நின்று வித்தையைப் பிரேரிக்கிறது சுத்த வித்தையென்று ஒன்றுண்டுகாண். இது சுத்த வித்தைக்கு ரூபம்.

தெரிசனமாவது ஆத்துமாவுக்கு ஞானத்தை மிகுப்பித்துக் கிரியையைக் குறையப்பண்ணும். ஞான மிகுந்து கிரியை குறையவென்றதெப்படி? ஆத்துமா ஒரு விஷயத்தை இந்திரியங்களினாலே கண்டு, மனாதிகளாலே பற்றி நிச்சயித்து எழுந்திருந்து சிந்தித்து, வித்தையாலே அறியுமோ? அறியும். அந்த அறிவை மிகுப்பித்துத் தொழிலைக் குறைவிக்கும். சுத்தவித்தை ஞானத்தை மிகுப்பிக்கிற தொழிந்து கிரியையைக் குறைப்பிக்கவற்றோ? ஞானம் மிகவே மெத்தென்னும். ஆகையால் ஞானம் மிகுந்தால் கிரியை குறையுமாகையாலே சுத்தவித்தையைக் குறைவித்ததென்று சொல்லப்பட்டது.

சுத்தவித்தையென்று சொல்ல வேண்டுவானேன்? அசுத்தவித்தையுமுண்டு ஆகையாலே. இதைச் சுத்தவித்தையென்றும் அதை அசுத்த வித்தையென்றும் சொல்ல வேண்டுவானேன்? இதைச் சிவசக்தி சேர்ந்து நிற்கையாலே, அது அசுத்தமாயையில் தோற்றமாகையாலே யென்றறிக.

இந்தச் சுத்தவித்தையைக் கர்த்தாவினுடைய சக்தி கூடி நின்று செலுத்தும்படி எப்படி? சுத்தவித்தையைச் சுத்தவித்தை நின்று செலுத்துகிற முறைமை போலச் சுத்தவித்தையைத் தம்பிரானாருடைய பஞ்ச சத்திகளில் ஞான சத்தி நின்று செலுத்தும். அந்த ஞானசக்தி சுத்தவித்தைக்குப் பிராணனாய் நின்று செலுத்துமாப் போல இந்த ஞானசக்திக்கும் தம்பிரானார் பிராணனென்றறிக.

## உ. ஈசுவரம்

ஈசுவர தத்துவமென்கிறதேது? அசுத்தமாயையில் தோற்றப்பட்டு அராக தத்துவத்தைப் பிரேரிப்பிக்கிறது.

அராக தத்துவத்தைப் பிரேரிப்பிக்கிறது ஈசுவரதத்துவமாகில் அத் தத்துவங்கள் கர்த்தாவாலல்லது சீவியாதென்



கிறதென்ன? அப்படியல்லகாண்; கர்த்தாவினுடைய சத்தி கூடி நின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே கூடி நின்று அராக தத்துவத்தைச் செலுத்துகிறது ஈசுவர தத்துவமென்று ஒன்றுண்டு காண். இது ஈசுவரதத்துவத்துக்கு ரூபம்.

இனித் தெரிசனமாவது ஆத்துமாவுக்குக் கிரியையை மிகுப்பித்து ஞானத்தைக் குறைவிக்கிறது. கிரியை மிகுந்து ஞானம் குறையவென்கிறதெப்படி? ஆத்துமா ஒரு விஷயங்களை இந்திரியங்களினால் கண்டு, மனாதிகளாலே பற்றி நிச்சயித்து எழுந்திருந்து சிந்தித்து, வித்தையாலே யறிந்து அராகத்தாலே யாசைப்படும். ஆசைப்பட்ட விஷயத்திலே செல்லத் தொழிலை யுண்டாக்கி அறிவை மெத்தென்பிக்கும். அதெப்படி? ஈசுவர தத்துவம் தொழிலை யுண்டாக்குகிற தொழிந்து அறிவை மெத்தென்பிக்கவற்றோ? தொழிலை மிகவே அறிவை மெத்தென்னுமாகையால் ஈசுவர தத்துவம் ஞானத்தைக் குறைவித்து கிரியையை யுண்டாக்குமென்று சொல்லப்பட்டது.

இந்த ஈசுவரதத்துவத்தைக் கர்த்தாவினுடைய சத்தி கூடிநின்று செலுத்தும்படி எப்படி? அராக தத்துவத்தை ஈசுவர தத்துவம் செலுத்துகிற முறைமைபோல ஈசுவர தத்துவத்தைத் தம்பிரானாருடைய பஞ்ச சத்திகளில் இச்சா சத்தி செலுத்தும். அந்தச் சத்தி ஈசுவர தத்துவத்திற்குப் பிராணனாய் நின்றாற்போல இந்த இச்சாசத்திக்குத் தம்பிரானார் பிராணனென்றறிக. உ

## ௩. சாதாக்கியம்

சாதாக்கியமென்கிறதேது? அசுத்த மாயையில் தோற்றப்பட்ட அவ்வியத்தத்தைப் பிரேரிப்பிக்கிறது.

அவ்வியத்தத்தைப் பிரேரிப்பிக்கிறது சாதாக்கியமாகில் தத்துவங்கள் கர்த்தாவாலல்லது சீவியாதென்கிறதென்ன?

அப்படியல்லகாண்; கர்த்தாவினுடைய சத்திகூடி நின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே நின்று அவ்வியத்தத்தைச் செலுத்துகிறது சாதாக்கிய மென்று ஒன்றுண்டு காண். இது சாதாக்கிய தத்துவத்துக்கு ரூபம்.

இனித் தெரிசனமாவது, ஆத்துமாவுக்கு ஞானமும் கிரியையு மொக்கப்பண்ணி நிற்கும். ஞானமும் கிரியையு மொக்கப்பண்ண வென்றதெதது? ஆத்துமா ஒரு விஷயத்தை இந்திரியங்களினாலே கண்டு மனுதிகளினாலே பற்றி நிச்சயித்து எழுந்திருந்து சிந்தித்து வித்தையாலே யறிந்து அராகத்தாலே யாசையெழுந்திருந்து புருடதத்துவத்தாலே அழுந்துமோ? அழுந்தும். அதிலே அறிவுஞ் செயலும் ஒக்க நிற்கிறது சாதாக்கியம்.

இந்தச் சாதாக்கியத்தைக் கர்த்தாவினுடைய சத்தி கூடிநின்று செலுத்துகிறபடி எப்படி? அவ்வியத்தத்தைச் சாதாக்கியம் நின்று செலுத்துகிறப் போல சாதாக்கியத்தைத் தம்பிரானுருடைய பஞ்சசத்திகளில் கிரியாசத்தி செலுத்தும். இந்தக் கிரியாசத்திக்கும் சம்பிரானுர் [பிராணன்] என்றறிக.

## ௪. சத்தி

சத்தி தத்துவமென்கிறதெதது? அசுத்தமாயையில் தோற்றப்பட்ட காலத்தையும் நியதியையும் கலையையும் செலுத்துகிறது.

காலத்தையும் நியதியையும் கலையையும் செலுத்துகிறது சத்தி தத்துவமாகில், அந்த தத்துவங்கள் கர்த்தாவாலல்லது சீவியாதென்கிற தென்ன? ஆங்காண்; கர்த்தாவினுடைய சத்தி கூடிநின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே நின்று கலை நியதி காலங்களைச் செலுத்துகிறது சத்திதத்துவமென்று ஒன்றுண்டு காண். இது சத்தியென்கிற தத்துவத்துக்கு ரூபம்.

இனித் தெரிசனமாவது ஆத்துமாவுக்குக் கிரியையை யுண்டாக்குகிறது. ஆத்துமாவுக்குக் கிரியையை யுண்டாக்குகிறதெப்படி? ஆத்துமா ஒரு விஷயத்தை இந்திரியங்களி



னாலே கண்டு, மனுதிகளாலேபற்றி நிச்சயித்து எழுந்திருந்து சிந்தித்து, வித்தையாலே யறிந்து, அராகத்தாலே யாசைப்பட்டு, அதிலே கிரியை செல்லுமோ? செல்லும். அந்தக் கிரியையை நிகழ்காலமாய் நின்று நியதியாலே நிச்சயிக்கப்பட்டு கலையாலே ஆணவ மலத்தை நீக்கிக் கிரியை எழுப்பப்பட்டு அளவாக நிற்பிக்கிறது சத்தி தத்துவம்.

இதைச் சத்தி தத்துவமென்று சொல்லுவானேன்? கர்த்தாவினுடைய சத்தி ஆதரித்து நிற்கையாலே.

இதைக் கர்த்தாவினுடைய சத்தி கூடிநின்று செலுத்துகிறதெப்படி? கால நியதி கலைகளைச் சத்திதத்துவம் செலுத்துகிறப்போலே சத்தி தத்துவத்தைக் கிரியா சத்தி செலுத்தும். இந்தச்சத்திக்கும் தம்பிரானுர் [பிராணன்] என்றறிக.௪

## ௫. சிவம்

சிவதத்துவ மென்கிறதெதது? அசுத்த மாயையில் தோற்றப்பட்ட மாயை யென்கிற தத்துவத்தைச் செலுத்துகிறது.

மாயா தத்துவத்தைச் சிவதத்துவம் செலுத்துமாகில், அந்த தத்துவங்கள் கர்த்தாவாலல்லது சீவியாதென்கிறதென்ன? ஆங்காண்; கர்த்தாவினுடைய சத்தி கூடிநின்று செலுத்த அந்தச் சத்தியின் வழியிலே நின்று மாயா தத்துவத்தைச் செலுத்துகிறது சிவதத்துவமென்று ஒன்றுண்டு காண். இது சிவதத்துவத்துக்கு ரூபம்.

இனித் தெரிசனமாவது ஆத்மாவை ஞானமேயா யிருக்கும்படிச் செய்விக்கிறது. ஞானமாயிருக்கும்படிச் செய்விக்க வென்றது ஆத்மா ஒரு விஷயத்தை இந்திரியங்களாலே கண்டு மனுதிகளாலே பற்றி நிச்சயித்து எழுந்திருந்து சிந்தித்து வித்தையாலே யறிந்து அராகத்தாலே யாசைப்பட்டு மாயையாலே மயங்கும். அதிலே அறிவாக நின்று அறிகிறது [சிவ தத்துவம்].

அதைச் சிவதத்துவ மென்று சொல்ல வேண்டுவானேன்? இதைச் சிவசத்தி ஆதரித்து நிற்கையாலே.

இந்தச் சிவதத்துவத்தைக் கர்த்தாவினுடைய சத்தி கூடி நின்று செலுத்துகிறதெப்படி? இந்த மாயா தத்துவத்

யைச் சிவதத்துவம் நின்று செலுத்துகிறது போல இந்தச் சிவதத்துவத்தை தம்பிரானாருடைய பஞ்ச சத்திகளில் ஞானசத்தி செலுத்தும். இந்தச் சிவ தத்துவத்திற்கு ஞானசத்தி பிராணனாய் நின்றாற்போல இந்தச் சத்திக்குத் தம்பிரானார் [பிராணன்] என்றறிக.

[ஆகச் சிவதத்துவம் ஐந்து. ஆகத் தத்துவங்கள் முப்பத்தாறு]

---

## தத்துவங்களின் தோற்றமும் ஒடுக்கமும்

இந்தத் தத்துவங்கள் முப்பத்தாறினுடைய தோற்றம் ஒடுக்கம் எப்படி யென்னில், திருஷ்டாந்தம்:

கோற்றொடிக்கை மாதர் கொடுங்கலி வேலைமனப்
பாத்தொடுக்க வோடிமனம் பாயாதே—தோற்றொடுக்கம்
தன்னை யுணர்ந்து த்மையுணர்ந்து மெய்ஞ்ஞானம்
பின்னை யுணராத பேர்.

### தோற்றம்

இனிப் பிரபஞ்சத் தோற்றமொடுக்கம் உணர்த்துகின்றது.

### சுத்த தத்துவங்களின் தோற்றம்

பரமசிவனுடைய பராசத்தியி னருளாலே குடிலையிலே நாதந்தோன்றி நாதத்திலே விந்து தோன்றி விந்துவிலே சதாசிவந் தோன்றி சதாசிவத்தில் ஈசுவரந் தோன்றி ஈசுவர தத்துவத்திலே சுத்த வித்தை தோன்றினது.

ஆக இவை யைந்துக்குள் முன்சொன்ன விந்துவிலே சூக்குமை - பைசந்தி - மத்திமை - வைகரி என்கிற நாலு வாக்குகளும் ஐம்பத்தோ ரக்கரங்களும் எண்பத்தொரு பதமும் சத்தகோடி மகா மந்திரங்களும் சகல சாத்திரங்களும் சகலாகமங்களும் தோன்றின.

இனி அதோ மாயையிலே அனந்ததேவர் அருளினாலே காலமும் நியதியும் கலையும் தோன்றிக் கலையிலே வித்தை தோன்றி வித்தையிலே அராகம் தோன்றிற்று. இந்த ஐந்துங் கூடின சமூகத்தில் புருடன் தோன்றிற்று.



உருத்திர தேவர் அருளினாலே முன் சொன்ன கலையிலே மூலப்பிரகிருதியும் முக்குணங்களும் தோன்றின. அவ்வியத்தத்திலே சித்தமும் புத்தியும் தோன்றின. புத்தியிலே ஆங்காரம் தோன்றிற்று.

அந்த ஆங்காரந்தான் தைசத வாங்காரமென்றும் வைகரியாங்கார மென்றும் பூதாதியாங்கார மென்றும் மூன்றாயிற்று.

அந்தத் தைசத ஆங்காரத்திலே சாத்துவித குணத்தை யுடைத்தான மனதும் புத்தியிந்திரியங்களாகிய சுரோத்திராதி ஐந்தும் தோன்றின.

வைகரியாங்காரத்திலே இராசத குணத்தையுடைத்தாகிய கன்மேந்திரியங்களாகிய வாக்காதியைந்தும் தோன்றின.

பூதாதியாங்காரத்திலே தாமத குணத்தை யுடைத்தாகிய தன்மாத்திரையாகிய சப்தாதிகளைந்தும் தோன்றின.

சப்தத்திலே ஆகாசம் தோன்றிற்று. ஸ்பரிசத்திலே வாயுதோன்றிற்று. ரூபத்திலே தேயு தோன்றிற்று. இரசத்திலே அப்புதோன்றிற்று. கந்தத்திலே பிருதிவி தோன்றிற்று.

### ஒடுக்கம்

இப்படித் தோன்றின முறைமையிலே பிருதிவி கந்தத்திலும், அப்பு இரசத்திலும், தேயு ரூபத்திலும், வாயு ஸ்பரிசத்திலும் ஆகாசம் சப்தத்திலும் இப்படித் தோன்றின முறைமையிலே யொடுங்கும்.

இந்த சப்த - ஸ்பரிச - ரூப - ரச - கந்தமென்கிற தாமத குணத்தையுடைத்தாகிய தன் மாத்திரைகளைந்தும் பூதாதியாங்காரத்திலே யொடுங்கும்.

இராசத குணத்தை யுடைத்தாகிய கன்மேந்திரியங்களாகிய வாக்காதிகளைந்தும் வைகரியாங்காரத்திலே யொடுங்கும்.

ஞானேந்திரியங்களாகிய சுரோத்திராதிகளைந்தும் சாத்துவித குணத்தை யுடைத்தாகிய மனதும் தைசத வாங்காரத்திலே யொடுங்கும்.

இந்தப் பூதாதி யாங்காரத் திரயங்களாகிய மூன்று வகைப்பட்ட வகுப்பும் குலைந்து ஆங்காரமேயாம். ஆங்காரம் புத்தியிலே யொடுங்கும். புத்தி சித்தத்திலே ஒடுங்கும். சித்தம் அவ்வியத்தத்திலே ஒடுங்கும்.

இப்படி இருபத்தைந்து தத்துவமா யொன்றான அவ்வியத்தமான பிரகிருதியும் அராகமும் வித்தையும் ஆக மூன்றும் கலையிலே யொடுங்கும். இந்தக் கலையும் நியதியும் காலமும் அதோ மாயையிலே ஒடுங்கும். இந்தச் சாத்திர சகலங்களும் சத்தகோடி மகா மந்திரங்களும் ஐம்பத்தோரக்கரங்களும் எண்பத்தொரு பதமும் நாலு வாக்குகளும் விந்துவிலே யொடுங்கும்.

சுத்தவித்தை ஈசுவரத்திலொடுங்கும். ஈசுவரம் சதாசிவத்திலே ஒடுங்கும். சாதாக்கியம் விந்துவிலே ஒடுங்கும். விந்து நாதத்திலே ஒடுங்கும். இந்த நாதம் குடிலையென்று சொல்லப்பட்ட மகா மாயையிலே ஒடுங்கும்.

ஆக முப்பத்தொரு தத்துவமான மாயையும் பஞ்ச தத்துவமான மகா மாயையும் ஆக முப்பத்தாறும் காரியமாய் விரிந்தொடுங்கின.

மாயைகளிரண்டும் கிரியாசத்தியிலே ஒடுங்கா நிற்கும். இனிப் பராசத்தி யீன்ற அருளான இச்சாசத்தியும் ஞான சத்தியும் கிரியா சத்தியும் ஆக இவை மூன்றும் பராசத்தியிலே ஒடுங்கா நிற்கும். பராசத்தி பரமசிவனிடத்திலே ஒடுங்கா நிற்கும்.

பிரபஞ்சத் தோற்ற மொடுக்கம் இப்படி யென்றறிக.

(தொடரும்)

பாம்பன் - குமரகுருதாச சுவாமிகள் அருளிய

## எ - வது

## சமயங்களைக் குறித்த வியாசம்*

(க) சீடன்:—ஈசுவரனைக் கணித்து அல்லது விரோதித்துள்ள சமயங்களையும் அவற்றினிச்சயங்களையும் விளக்க வேண்டும்.

குரு.—கேள். சமயம், மதம், மார்க்கம் என்பன ஒரு பொருட் கிளவி. தாற்பரியம்; கடவுளைப் பேதித்து விடுத்து அல்லது கணித்து நாடுகின்ற வழியென்றும். அவ்வழியே வேதாகமாதிகட்குப் புறம்பான புறச்சமய மென்றும் வேதாகமாதிகட்குச் சம்பந்தமான உட்சமய மென்றுந் துவந்துவ வகையுள. அவற்றுள் புறச்சமயமானது உலகாயதம், புத்தம், சமணம், பாட்டம், மீமாஞ்சகம், பாஞ்சராத்திரம் என ஆறுவகையாகும். இவ்வாறு வகையில் உலகாயதமானது: உலகாயதம், சாருவாகம் என இரண்டு பேதமும்; புத்தமானது: சவுத்திராந்திகம், (மகாயானிகம்)யோகசாரம், மாத்தியமிகம், வைபாடிகம் என நான்கு பேதமும், சமணமானது: நிகண்டவாதம், ஆசீவகம் என இரண்டு பேதமும்; பாட்டமானது: பாட்டாசாரியம், பிரபாகரம், நையாயிகம், சப்தப்பிரம்மவாதமென நான்கு பேதமும், மீமாஞ்சகமானது: மீமாஞ்சகம், பாற்கரியம், நிரீசுரசாங்கியம், வைசேஷிகம் என நான்கு பேதமும், பாஞ்சராத்திரமானது: பாஞ்சராத்திரம்,

[*இது, பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் இல்லத்திலிருந்தபோது இயற்றிய வியாசங்களுள் ஒன்று. அவர்கள் இதனைப் பின்னர்ப் பார்வையிடவில்லை. அவர்கள் சீடர் திரு. N. சுப்பிரமணியப் பிள்ளை இதனை எழுதி 1896-ம் ஆண்டு ஜனவரிமாதம் முதல் தேதி கையொப்பம் வைத்திருக்கிறார்]

வைணவம், வைகாநசம், ஜோதிடம், மாயாவாதம், வேதாந்தம் துவிதவாதம், அத்துவிதவாதம் என எட்டு பேதமுமாகும்.

இங்ஙனம் புறச்சமயம் அறுவகையும் அவற்றின் பேதமுமான உச பகுதிகளின் தீர்மானத்தையும் ஈண்டு விவரிக்கக் கடவேம்.

## (க) உலகாயதம்

இந்த உலகாயதபேதம் இரண்டுள் :

க. உலகாயதமென்பது:—காம சாஸ்திரமாகிய இன்ப சாகரமடல் முதலிய நூல்களிற் சொல்லப்படுகிறபடி இக சுகங்கள் பலவுள் சிரேஷ்டமான ஸ்திரீகளின்பத்திற் கேதுவாகிய காமமும் ஸ்தூலதேகமுமே தெய்வம். அதுவே பிரத்தியக்ஷம். மற்றப்படி சில தவத்தோர் செய்துமாய்கின்ற தரும நெறிகளும் ஒன்று கோடியாகப் புசிப்பிக்கு மென்னுந் துறவற நெறியும் அந்நெறியாற் பின்பு பேறுமென்று பேசு மொழுங்கும் அப்பிரத்தியக்ஷம். அதனால் அவைகள் பொய் மார்க்கமேயாகும். அப்பொய்மார்க்க மொழித்து மெய்மார்க்கமாகிய காமநூலிற் கூறப்படும் நல்ல பெண்ணின்பமே ஆண் பெண் கூடிய ஐக்கிய முக்தி. இதை அனுசரிக்கிறவரே (ஞானி) அறிஞரென்றும்,

இம்மார்க்கத்தை அனுசரிக்கிறவர்களையே பாமரர்களென்று நல்லோர் பகர்வர்.

உ. சாருவாக மென்பது :—காட்சி யொன்றே பிரமாணம். காட்சிக்கக்கூடிய பிருதிவி, அப்பு, தேயு, வாயுவென்ற நான்குமே உண்மைப்பொருள். ஆகாச மென்பது பொருளன்று. நான்கு பூதச் சேர்க்கையான தூலவுடம்பே ஆன்மா. உடம்பு வளர அறிவு வளரும். உடம்பு தேய அறிவு தேயும். அது சகஜம். அதனால் ஈசுவர னென்றொருவனில்லை. இருக்கிறதெல்லாம் நான்கு பூதங்களே. அப்பூதங்களே தெய்வமும் அவைகட்கு நாயகனாகிய இந்திரனே தலைவனுமாகும்.



தூலவுடம்பினால் இகத்திலனுபவிக்குஞ் சுகதுக்கங்களே சுவர்க்க நரகங்கள். இகசுகங்கள் பலவுள் பெண்ணின்பமே சிரேஷ்டம். அது நிமித்தம் முயற்சித்துப் பொருள் தேடி உண்டுடுத்துப் பூசி முடித்து அதைப் பொருந்தி வாழ்வதே ஆனந்த முத்தியென்றும். சில சாருவாகர் இந்திரியத்தையும் சில சாருவாகர் பிராணனையும் ஆன்மா வென்பர்.

இம்மதமே சகஜமத மென்றும் சூனியான்மவாதமென்றுந் தேகான்மவாத மென்றுஞ் சொல்லப்படும். இங்ஙனம் உலகாயதம் சாருவாகமென இருவகையாய்க் கூறப்பட்டுள்ள இந்நூற் செய்தவர் பிருகஸ்பதி பகவானாவார். காரணம், தன் மகளை மனுளன் துறவறத்தால் நீத்தது காரணமாய் உண்டாக்கப்பட்டதென் றுரைக்கப்படும். அன்றித் தேவேந்திர போகத்தில் வெறுப்புற்றுத் துறவு மார்க்கத்தை யடைந்து அதீத மோக்ஷத்தைப் பெற வாரம்பித்த இந்திரனுடைய கருத்தைத் திருப்புமாறு சுரகுருவாகிய பிருகஸ்பதி அவ்விந்திரனுக்குப் போதிக்க வந்ததென்று ஸ்ரீ கந்தபுராணம் தேவ காண்டம் இந்திரபுரிப்படலத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

## (உ) புத்தம்

பௌத்த மென்றும். இப்பௌத்த பேதம் நாலுள் :

க. சவுத்திராந்திகமென்பது:-ஆதிபுத்தன் முதலாக உக வகைப் புத்தருளர். அவரில் ஆதிபுத்தன் எல்லா யோனியும் புகுந்து நரக சுவர்க்கங்களுங் கண்டுவந் துலும்பனி வனத்துள்ளே பத்தாவைத் துறந்து தவஞ்செய்யுங் கௌந்தியுகரத்துள்ளே நுழைந்து விலாவைப் பீறிக்கொண்டு வெளிவந்து எழுநாளளவும் அத்தாய் மரியாமற் பாதுகாத்தெழுந்து முழுதுமுணர்ந்து கொலை முதலிய கடிந்து பரதுக்க துக்கனைப் நற்காட்சி, நல்வாய்மை, நன்முயற்சி, நல்லூற்றம், நற்கடைப்பிடி, நன்னெறி, நற்செய்கை, நல்லுளத்தோர் தலைப்பா

டுடைமை என்ற எண்குணமும் பொருந்தி அவ்வகையான தீக்குணம் எவையும் பொருந்தாது யிருப்பான். அவன் காட்சியளவையுங் கருத்தளவையுமன்றித் தன்மராஜபுரத்திலே மாயா புத்திரனாய் வீற்றிருப்பான்; வடதிசையிலுள்ள அரசமரத்திலும் வீற்றிருப்பான். அவனாற் சொல்லப்பட்ட நூல் பிடகாகமம். அவ்வாகமம் வினைப்பிடகம், சிக்ஷாபிடகம், கந்திரபிடகம், ஆதிபிடகம் என நால்வகையாகு மென்றும். அந்நூற் கருத்து: உரு, அரு வீடு வழக்கு என நால்வகையில் உரு: பூதவுரு, உபாதாயவுரு என இருவகையாகவும், அவற்றுள் பூதவுரு பிருதிவி அப்பு தேயு வாயு வென நாலாகவும்; உபாதாயவுரு: வலி, கந்தம், இரதம், வன்னமென நாலாகவும் அரு: சித்த அரு, கன்ம அரு என இருவகையாகவும், வழக்கு உள்வழக்கு, இல்வழக்கு என இருவகையாகவும், பிறவும் உள்ளது சார்ந்த இல்வழக்கு, இல்லது சார்ந்த உள்வழக்கு இல்லது சார்ந்த இல்வழக்கு, உள்ளது சார்ந்த உள் வழக்கு என நால்வகையாகவுஞ் சொல்லப்படும். அன்றி, உருவம், வேதனை, குறிப்பு, பாவனை விஞ்ஞானம் என்ற ௫-ம் பஞ்சகந்தமென்றும்; அவற்றுள், உருவம், முன்சொன்ன பூதவுருவும்; உபாதாய வுருவுமென்றும்; வேதனை: குசலா வேதனை, அகுசலா வேதனை, குசலாகுசல வேதனையென மூவகையென்றும்; குறிப்பு: சுரோத்திராதி ௫-ம் சித்தம் ௧-மாகிய ஆறு கருவிகளென்றும்; பாவனை: மனம் வாக்குக் காயங்களால் வரும் நல்வினை ௧௦, தீவினை ௧௦, என்பனவற்றுள் நல்வினையாவது மனத்திற் சந்தத் திருப்பணியே வணங்கல், மந்திரஞ் சொல்லல், துதித்தல், வாழ்த்தல், வாய்மை சீர் கொளல், தொழல், சூழ்தல், பரச்சேவை, பூவைத்தல் என்றும்; தீவினையாவது: தீயனசிந்தித்தல், ஆசை, கோபம், கடுஞ்சொல், பொய், பயனில்சொல், கோட்சொல்லல், களவு, கொலை, வீண் செய்கை யென்றும்; விஞ்ஞானம் மேல்விளக்



கிய கருவிகளாறாலும் அறிகின்ற ஆறறிவென்றும்; இக்கந்தமைந்துமே கருவியும் ஆன்மாவுமாக வுள்ளது, இந்தக் கந்த நீங்குவதே முக்தியென்றும்; சாருவாகத்தில் சொல்லுகிறபடி பூதம் நான்கென்பதும் திசை நான்கென்பதில்லை, அது இல்வழக்கென்றும்; பொறிகளின் திரிபல்லது காலமென்பதில்லையென்றும்; மேற்சொன்ன கந்தங் கூடாமனிற்கிற பதியென்பதும், ஆன்மாவென்பதும், பிரத்தியேகமா யில்லையென்றும்; புசிப்புக்காக மரஞ்செடிகளை வகுத்தான், அவைகள் ஜீவனுள்ளவைகளல்ல, அதனாலவைகளைத் தின்னலாம், ஜீவனுள்ளவைகளைத் தின்னக்கூடாது, ஆனால், தானேசெத்த மாமிசத்தையும் பிறர் கொன்றுகொடுத்த மாமிசத்தையுந் தின்னலாமென்றும்; சிவந்த நீலவண்ணப் புடவையை உடுத்தி வாசனைகளை அணிந்து கொள்ளலாமென்றுஞ் சொல்லப்படும்.

இம்மதத்தில் அனேக விபரீதங் காணப்படுவதோடு அசுத்த மாயையின் தோற்றமாகிய குணதத்துவத்தின் கீழுள்ள புத்திதத்துவத்தைத் தானே பொருளெனவுங் கொண்டதாயிற்று.

௪. யோகாசாரமென்பது:—சவுத்திராந்திகத்திற் கூறியபடியே யாவுமாயினும் பிருதிவிமுதற் புத்திதத்துவம்வரை ௨௫. அவற்றுள் புத்திதத்துவமே பிரதானம். அத்தத்துவம் பூதபௌதிகமான சரீரத்திலேயே உள. அத்தத்துவமுதல் யாவத் பொருள்களும் க்ஷணபங்கம். க்ஷணபங்கமான அறிவு தானே உடம்பு முதலியவாக வாதனையாலே அருவமும் உருவமுமாதலாலே அறிவு பரிணமித்தபடி பிரபஞ்சங் கனவிற்றோன்றும். அங்ஙனம் விழித்தால் பொய்யாம். அதுபோல எங்கும் ஞானசந்ததியே உள்ளதென்றும்.

இதில் அருவமாயுள்ளிருக்கிற அறிவைத்தானே உருவமா யுரம்பொருந்திப் புறம்பாயிருக்கிற உலகமாக விகற்பித்துச் சொல்லலாயிற்று.

ரு. மாத்துமிகமென்பது:—செவி, மெய், கண், வாய், மூக்கு முதலான அவயவங்களிலே ஞானசந்ததியாகிய போதமெழக் கண்டபடி அவ் அவயவங்கள் தானே போதமும், அவ்வவ் அவயவங்களில்லாக் கல் மரமிவைகட் கறிவில்லையாகவே அவைகளெல்லாங் கெடும். அதனால் இதுவே நிலையென்றும்.

இதில் அன்னியமாயுள்ள ஆன்மாவின் அறிவுக்கிடமாயிருக்கிற அவயவங்களைத்தானே அறிவென்று அறியாமையாய்த் தீர்மானித்துக் கொள்ளலாயிற்று.

சு. வைபாடிகமென்பது :—மஞ்சளுஞ் சுண்ணும்புங் கூட்ட அங்ஙனஞ் சிவப்பென்பதொன்று பேதித்தாற்போலப் பிரபஞ்சமாகிய உருக்களின் அவயவமும் உட்போதமாகிய ஞானமுங்கூடுமவதாம் அறிவு பொருந்தித் தோன்றும், அப்படிக் காண்பதே பொருளென்றும்.

இதில் அருவமாகிய ஆன்மபோதமும் உருவமாகியஉலகமுங் கலந்து பொருளாயிருப்பதாகப் பிறழ்ந்து சொல்லலாயிற்று.

இங்ஙனம் நால் வகையாகக் கூறப்பட்டுள்ள புத்தமதமானது துவக்கத்தில் முன்னொருகாலந் தமிழ்நாடுகளிலும் ஈழநாட்டிலும் விருத்திப்பட்டிருந்து பின்னர் சைவசமயகுரவராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளாற் கண்டிக்கப்பட்டதின்மேல் இப்பிராந்தியத்தில் இல்லாதொழிந்து அன்னியபூமிகளி லிருந்துகொண்டிருக்கிறது.

## (ங) சமணம்

ஆருகதமென்றும். இவ்வாருகதபேதம் இரண்டுள்:

எ. நிகண்டவாதமென்பது :—அருகபரமேட்டி யென்றொரு கடவுள் அநாதியே யுள்ளவன். அவனிருக்குமிடம் பொன்னெயில் வட்டம். அவன் வடிவு பொன்மலையிற் பொன்னுலெழுதினாற் போல ஆயிரத்தெட்டு மனுவுடைத்தாய், அனந்தஞானம், அனந்ததரிசனம், அனந்தானந்தம், அனந்தவீரியம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்னும் எண்குணமும் மதிக்கலைச்சீதம் போல விளங்க;

ஞானவர்ணீயம், சுருதி ஞானவர்ணீயம், அவதி ஞானவர்ணீயம், கேவல ஞானவர்ணீயம், கட்டரிசனவர்ணீயம், சொற்றரிசனவர்ணீயம், அவதிதரிசனவர்ணீயம், கேவல தரிசனவர்ணீயம் என்னுந் தீக்குணம் எட்டுங் கடிந்து; பசி, தாகம், சோம்பு, பயம், செற்றம், மோகம், சிந்தனை, பழித்தல், நோய், சாதல், வேர்வு, கேதம், மதம், அதிசயித்தல், புசிப்பு, நித்திரை, சனித்தல், உவகை என்ற மாயை யாக்கையாகிய பதினெண்குற்றமுந் தீர்ந்து வீற்றிருப்பன். அவனருகில் சித்த பரமேட்டி தன்மபரமேட்டி முதலானோரிருப்பர். அவர்களிற் சித்தபரமேட்டி:-'தன்மம்பகவ' என்று கடவுளை வினவ, அவன் 'பஞ்சாஸ்தமயம்' என்றுத்தரஞ் சொன்னான். அப்படிச் சொன்ன எழுக்கைகந்தையும் சித்தபரமேட்டி பத்தாக்கினான். விவரம்: காலம், ஆன்மா, தன்மாத்தியகாயம், அதன்மாத்தியகாயம், புண்ணியம், பாவம், நிலைபெற்றவெளி, புற்கலம், பற்று, வீடு என்பன. இவற்றுட் காலமாவது மூவினை. ஆன்மாவாவது : உடம்பில் நிறைந்து நிற்பது. தன்மாத்தியகாயமாவது : புண்ணியம் புரிந்தால் யாதனை சரீரமானது மாயாகாரியத்தினின்றுந் தோன்றி ஆன்மாவைத் தன்னிடத்தேயாக்கித் திவ்ய தேகமாய் மேலே கொண்டுபோய் புண்ணியங்களைப் புசிப்பிப்பது. அதன்மாத்தியகாயமாவது: பாவவுடலாகிய யாதனை சரீரமாய்த்தோன்றி ஆன்மாவைத் தன்னிடத்தேயாக்கிக் கீழ்க்கொண்டுபோய்ப் பாவங்களைப்புசிப்பித்து நரகங்களில் அழுத்துவது. புண்ணியமாவது அருகக் கடவுளுக்கும், ஆருகதருக்கும் கொடுக்குந்தானமும், ஒருவரை ஒன்றை யிச்சியாததும், கொலை, களவு, கள்,

காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம் இவை நீங்கியிருப்பதுமான சீலமும்; அரைஞாணும் உடைய....பாயுடுத்துத் தலைபறித்து நின்று அஸ்தமனத்திற்கு முன் தந்தது வாங்கி நின்றுண்டு, நீரை வடிகட்டியருந்தி, மெய் கழுவாது, விளக்கிடாது, உறங்காது கையிற் கமண்டலமும் மயிற்பீலியுமுடைத்தா யிருப்பதும்; சுடுபாறையிற்கிடத்தல், கொல்லாவிரதம் முதலியவுமான தவமும், அருகக்கடவுளைப் பூசிக்கும் பூஜையும் என்ற நான்கு விதமாகும். பாவமாவது: மேற்படி புண்ணியத்தை விடுவது. நிலைபெற்ற வெளியாவது ஆகாயமுண்டெனல். புற்கலமாவது கடினமான இரும்பு கல் மரம் முதலியனவும், உயிர்நிலைபெற்ற பொருள்களுமாம். பற்றுவது இல்வாழ்க்கை விடாமை, உழவுத்தொழில், வரைவு, வாணிபம், வித்தை, சிற்பம் என்ற அறுவகையாகும். வீடாவது மேல்விளம்பியவெல்லாம் விட்டுப் பாவம் புசித்துத் தொலைந்தாற் புண்ணியங் கதிகொடுக்குமென்றும். இந்நூற்பெயர் சீவகசிந்தாமணி யென்றும், அதில் இந்நூலும் இப்பதார்த்தமும் உண்டோ இல்லையோவென்று வினவினால் உண்டாம் இல்லையாம் உண்டு இல்லையுமாம் என்று முவ்வகையாற் சொல்லப்படுமென்றும், ஜீவனென்றொரு பதார்த்தம் அநாதியே குற்றமுடைத்தா யிருக்கும் - அஃது தூலந் தேயத் தேயும் வளர வளரும் - ஏனை இந்திரியங்களுமுள குணமே ஆன்மாவென்றும், அருகனுக்கிருப்பிடம் அசோகின் கீழென்றும் கூறப்படும். பெரும்பாலும் கருஞ்சரீரிகளாயுள்ள இவ்வமண தவச் சன்னியாசிகள் அரைஞாணும் உடையுந்துறந்து பாயுடுத்தன் முதலிய வினை செய்தனரென்னில் வஸ்திரமுடுத்தாற் சீலைப்பேன்பற்றி நசிக்குமென்று சிலர் அமணராயினர். சிலர் பாயுடுத்தனர்; சிலர் கடுக்காய் தோய்த்த வஸ்திரமுடுத்தினர். தலைமயிரை வளர்த்தாலும் சிரைத்தாலும் பேன்களுண்டாய்ச் சாமென்று மயிர் சிறிதா யிருக்கும்போதே சில



கருவிகளைக்கொண்டு பறித்துப் புண்பட்ட சித்தலையராயினர். தீபமேற்றிப் புசித்தால் அத்தீபத்தில் விட்டின்முதலிய பூச்சிகள் விழுந்து சாகுமென்று அஸ்தமனத்திற்குமுன் புசிப்பதாயினர். நீரிலிருக்கும் பிராணிகள் இறவாதிருக்கவேண்டிப் பலதரம் வடிகட்டி யருந்துவாராயினர். கீழேபடுத்தாற் சிறுஜெந்துக்களிறந்து போமென்று உறங்காதிருப்பதாயினர். வழி நடக்கும்போது எறும்பு முதலியன மாளாதிருக்கவென்று மெத்தென விளக்கிக்கொள்வதற்காகக் கையில் மயிற்பீலியை யுடைத்தாயினர்.

இம்மதத்தில் அசுத்தமாயையின் தோற்றமாகிய குணதத்துவத்தைத் தானே ஆன்மாவாகவும், கடல் வற்றியபின் மீனுண்ணக் காத்திருக்கும் பூனையின் மார்க்கம்போலப் பாவம் புசித்துத் தொலைந்தபின் அசேதனமான கன்ம புண்ணியங் கதி கொடுக்குமெனக் காத்திருப்பதாகவும் எண்ணற்பாலது.

அ. ஆசீவகமென்பது:—ஐந்துபொருளென்ற அணுவை ஐந்தான்மாவாக்கினன். அதிற் பிருதிவி அப்பு தேயு வாயுவென்னும் நாலும் பூதவணுக்கள். இவற்றொடு கூடி அருவாய் நிற்பது உயிரணு. இவ்வுயிரணுவே அறிவுள்ளது. ஏனைநான்கும் அறிவற்றவை. அறிவுள்ள அவ்வுயிரணு நாற்பூதங்களோடுங் கூடி நுண்ணிதாய் ஒட்டியுந் தீண்டியுங் கலந்து மறிந்து செல்லாநிற்கும். அணுவுக்குப் புண்ணிய பாவங்கள்கூட அதற்குத் தகுதியான அறிவு உடற்கூட்டத்தாலுண்டாம். அம்முறைமையிற் புண்ணியத்தால் முத்திநெறியோர்ந்து அம்முக்தியைச் சேருமென்று அந்தத் தன்மபரமேட்டி யறிந்து மண்ணிடை வந்து உரைத்த மார்க்கமே முத்தி நெறி யென்றும்.

இதில் உயிரணுவானது: ஒட்டியுந் தீண்டியுங் கலந்து பறிவதில் துயிலுங்கால், கரணங்கள் நீங்குகையால் அறியா

தென்றும் அப்படி நீங்குகையில் உயிரின் சிரேட்டங் கெடப் பூதங்களும் பிரிய உயிர்தொட்டுத் தீண்டியவுடம்பு பிரிவானேனென்னில், அதை நிலைபெற்ற வாயு கூட்டுமென்றும், அங்ஙனங் கூட்டற்கு அவ்வாயுக்கறிவில்லையே யென்னில் கன்மங் கூட்டுமென்றுங் கூறப்படும். அதனால் கன்மமாகிய மலம் அதை யறியமாட்டாதென்றும், அதை யறிவிக்குந் தலைவனொருவனுண்டென்றும் இங்ஙனந் தெரியற்பாற்று.

இச்சமண மதம் முற்காலத்தில் தமிழ் நாடுகளில் பரவியிருந்து பின்னர் சைவசமய குரவராகிய ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளாற் கண்டிக்கப்பட்டொழிந்தது.

## (சு) பாட்டம்

ஆறு சாஸ்திரத்திலொன்றாகும். இந்தப் பாட்டபேதம் நாலுள் :

கூ. பாட்டாசாரியமென்பது :—வேதமென்பது அனாதி, அஃது அரூபமாயும் கர்த்தாவாயும் நிற்றலால் அதுவே தெய்வம். அதிற் சொல்லப்படுகிற சோமயாக முதல் அசுவமேதம் ஈறாகச் செய்யப்படும் யாக கன்மங்களும் மனாதி காணங்களாகிய ஞானமும் இரண்டு காலாகிச் சுவர்க்கத்திற்கேறும். பிரபஞ்சம் நித்தியமாகும். பிரபஞ்சத்தில் எல்லாவுடற்கும் ஆன்மா ஒன்றாய் நிறைந்து நிற்கும். அவ்வான்மா சுழுத்தியிற் சடமாயும் ஜாக்கிரத்தில் அறிவாயுங் காண்பதால் ஜடமாயுஞ் சித்தாயும் இருவகையா யிருக்குமென்றும்.

இதில் பிரபஞ்சத்தாருக்குச் செய்காரியந் தவிர்காரியமுணர்த்துமாறாய் ஈஸ்வரனலருளிய வேதத்தைத் தானே தெய்வமென்றும் அறிவில்லாத கிருத்தியங்களும் பசுஞானமாகிய சிற்றறிவும் முத்தியைத் தருமென்றும் மொழியலாயிற்று.



க0. பிரபாகரமென்பது:—ஆறு சாஸ்திரத்திலொன்றாகும். அதில் மேற்பணித்த சோமயாக முதலிய கிருத்திய முடிவில் அதன் பயனாகிய பூருவம் வந்து தோன்றும். அந்தப் பூருவமே சுவர்க்கத்தைக் கொடுக்கும். அதற்குக் கர்த்தாவென்றொருவர் வேண்டுமென்பதில்லை. பரிபூரணமான ஜடமே ஆன்மா. கூறிய பூருவத்தாற் கிடைக்குஞ் சுவர்க்கமும் ஜனனமரணத்தால் மாறுந்தரமுடைத்து. அதனால் யாக கிருத்தியங்களையும் பூருவத்தையும் விடுவதோடு அறிவிசைந்து தொழிற்படுகின்ற அந்தக் காணங்களையும் நினைவறச் செய்து கல் மண் இவைகளைப்போல ஒன்றுமறியாமற் கிடக்கிறதே முக்தியென்றும்

இதில் கடவுள் வேண்டாமலே எங்கும் விரிந்த காமிய கன்மம் பிறவிக் கேதுவாகிய நினைப்புக் கெடுகிற அறிவழிந்த நித்திரையே முக்தியென்பதாயிற்று. இந்நித்திரையில் அந்தக் காணங்கள் கெடுவதாலும் அக்காணங்கள் மாயா தத்துவமாதலாலும் இதைத் தண்ணிய மாயா நிஷ்டையென்றே ஆன்றோ ரதிர்ப்பர்.

கக. நையாயிகமென்பது :—நியாயமென்கிற வைதிக நூலொன்றிற்குரியதாகும். அதில் பிரத்தியக்ஷம் அனுமானமென்பவைகளை உலகத்திலறிவதே அறிவு. அதனாற் புத்தியே ஆன்மா. வாதம், செற்பம், விதண்டை ஏதுவெனும் நால்வகைத் தருக்கத்தால் எதிரியை ஜயிக்கும் நிலையாகிய நிக்கிரகத்தானம் பதினொன்றையும் இந்நூலுடைத்து. கிரியாஞானச் சமவாயம் முக்திநிலை யென்று கண்டுவிடுவதே பெரிய தவமென்றும், நிகழ்த்திய நிக்கிரகத்தானம் பதினொன்றிற்கும் கடவுள் உண்டெனத் தான் சொல்லும்போது அது காணப்படாததால் இல்லையென எதிரி மறுத்தற் குடன்படல், உடன்பட்டும் உத்தரஞ் சொல்லாதிருத்தல், தாழ்ந்த சொற்சொல்லல், சொன்னசொற் றவறுபட்டு முடி

சொன்னசொற் சாதியாதது கொண்டு நான் சொன்னது அப்படியன்றெனல், கல்வி மிகுதியால் அழிதல், ஒரு சொல்லை நான்கு சொல்லாக எதிரி பிரித்தபோது அதற்குச் சோர்வு படல், சொல்லுதவாதழிதல், சொன்ன சொல் உவமைக் கொவ்வாதழிதல், சொன்ன பதின்மொழி இழிசொல்லால் அழிதல், தருக்கத்தை மாற்றி மானத்தால் அழிதல் என்ற தோல்வித்தானமும் பதினொன்றும். ஆக இருவகைக்குந் தானம் உஉ-என்றும்.

இம்மதத்தில் நூலுக்குக் காரணனாகிய கடவுளைக் கருதிக்கொள்ளாமல் நூலையும் கருதுவானையும் நூற்பொருளையும் கருதி நிற்பதோடு அசுத்தமாயையின் தோற்றமாகிய புத்திதத்துவத்தைத் தானே ஆத்மாவென்றுங் கொள்வதால் அறியாமையே காரணமாய் முடியும்.

கஉ. சப்தப் பிரம்மவாதமென்பது:— வேதாந்த நூலிலொன்றாகும். அதில் பிரபஞ்சமாகச் சொல்லப்படும்பொருள் சப்தத்தாலொழிய வேறில்லை. அச்சப்தப் பொருள் வேறாண்டென்னில் அப்பொருளுஞ் சப்தமாகச் சொல்லவேண்டுதலால் அஃது பொய். பூ என்ற சப்தமானது : பூமி புஷ்பம் பொலிவு அழகு பிறப்பு என்பனவாகவும், மா என்ற சப்தமானது : சொல்பெருமை மிருகம் மாமரம் கிருமி என்பனவாகவும் ஆவதால் அவ்விதம் பேதித்த பொருட் பேரெல்லாம் சப்தமே. அச்சப்தமன்றி வேறுபட்டபொருள் உளவென்னில் நெல்லில் வேறுபட்ட பொருள் பொரியென்னுஞ் சொற்பெற்றாற்போலச் சப்தந் தானே பொருளும் அப்படி வளர்ந்தசொல்லுமாம். அதனால் ஜடசித்துக்களாய்த்தோன்றியழியும் எல்லாப் பொருள்களும் சப்தத்தினுடைய விகாரம். அச்சப்தமே பிரம்மம் ; அஃது பிரளய காலத்திலுஞ் சப்த வடிவாகவே யிருக்கும். அதுதானே நாதமாகவும் எல்லா வாக்குமயமான வேதமாகவு மிருக்கும். அதையே யாவுமென்றறிவது முக்தியென்றும்.



இதில் சொல்லழிந்து பொருளாமென்றும் பொருளழிந்து சொல்லாமென்றுங் காண்பதில், பாலழிந்து தயிர் மோராகிப் பின்னர் அவை யழிந்து பாலாகாதென்று முணர்வதோடு பொருளைக் கண்டு அப்பொருளுக்கமைத்த பேராகிய சப்தத்தைத் தானே பொருளாய்க் கீழ்மேலாய்க் கொள்ளலாயிற்றென உணரவேண்டும்.

## (ரு) மீமாஞ்சகம்

வைதிக நூலொன்றிற்குரியதாகும். இம்மீமாஞ்சக பேதம் நாலுள் :

கந. மீமாஞ்சகமென்பது:—வேதமும் உபாங்க நூல்களும் சொல்கின்ற மார்க்கங்களை விசாரிக்கின் அவை அனேக பேதமாகத் தோன்றும். அப்பொருள்களை நோக்கில் ஒன்றுக்கொன்று ஒப்புநில்லா. அதனாலவை நானாவிதமாமென்று திடஞானங் கொண்டு திரிமூர்த்திகளும் ஜீவர்களேயாவார்கள். தானுமவரில் ஒருவனாதல்தான் முக்தி. அப்படியாதற்குக் கன்மமே எல்லாமியற்றவல்லது. வேதத்தினுடைய கிரியா காண்டத்தை மேற்கொண்டு யாக முதலிய கன்மங்களைச் செய்யவேண்டும். தேகேந்திரியாதிகட்குப் புறம்பாய் ஆன்மாவுண்டு. அவ்வித ஆன்மாக்கள் பலர். ஈஸ்வரனென்பதில்லை. வேதமும் பிரபஞ்சமும் ஒருவராற் செய்யப்பட்டனவன்று. அவை நித்தியமாயுள்ளன வென்றும். இச்சமயத்தைத் தானே சஞ்சய வாதமென்றுஞ் சொல்லத்தகும்.

இதில் முக்திநெறி அவ்வகைத்தோ இவ்வகைத்தோ அதீதவென்கிற சந்தேகந் தோன்றக் காண்பதோடு அதீத மோக்ஷத்திற்குப் பக்குவமற்ற ஆன்மாக்கட்கு ஊர்த்தலோக போகம் பிரயோஜனமாம்படி கருணைகொண்டு பூர்வ பக்ஷமாய் விதித்த யாகாதி கர்ம புண்ணியங்களைத்தானே பெரிதாகவுங் கொண்டதாய்க் காணலாம்.

இம்மதம்: சிவன் பிக்ஷாடன வடிவும் விஷ்ணு மோஹினி வடிவுங் கொண்டெழுந்து தாருகா வனத்திற் கேகிய காலை மக்கின மடைந்துவிட்டது.

௧௪. பாற்கரியமென்பது:—வேதாந்த நூலிலொன்றாகும். அதில், வேதமும் வேதப்பொருளும் உலகமும் ஆன்மாக்களும் சித்தாகிய ஞானமல்லது அஞ்ஞானமன்று. அஞ்ஞான மென்றொரு வஸ்து இல்லவேயில்லை யென்றும். ஜட சித்துக் களெல்லாம் பிரமத்தினுடைய பரிணாம மென்றும் அந்தப் பிரம்மமாகிய ஆன்ம ரூபத்தோடு இலயித்தலே முக்தி யென்றும் மொழியப்படும்.

இதில் ஞானத்தோடு அஞ்ஞானத்தைக் கூட்டிக் கூறலாயிற்று.

௧௫. நிரீசுர சாங்கிய மென்பது:—அத்தியான்மிக நூலிலொன்றாகும். அதில் புத்தி தத்துவமுதற் பிரகிருதி தத்துவம் ஈறாக ௨௩-யும் காரியமாகவுள்ள பிரகிருதி மாயையானது, நித்தியமாய் வியாபகமாய் ஜடமாய் எல்லாப் பொருட்குங் காரணமாய் முக்குணங்களுஞ் சமமாய் நின்றவவதரம் ௨௪-ம் தத்துவமாயிருக்கும். இப்பிரகிருதி மாயைக்கு வேறாய் நித்தியமாய் வியாபகமாய் அருவாய் நானா பேதமாய் முற்றுணர்வுந் தொழிலுமில்லாததாய் அறிவு மாத்திரமாய் ஆன்மாக்களிருக்கும். அவைகட்கு முத்தியிலும் பெத்தத்திலும் வேற்றுமையின்று. சொரூபத்திலும் அஃதின்று. (?) அநாதியிலேயே புத்தியைச் சார்ந்த (அஞ்ஞானம்) அவித்தை வசத்தாற் சுக துக்க ஞானந் தோன்றும். அதனாற் பெத்தான்மாக்காளாயின, பிரகிருதி மாயையை (ஜீவான்மா) புருடனையும் பகுத்தறியும் விவேக ஞானத்தால் அவ்வவித்தை நீங்கப் புருடன் முக்தியடைவன். அதனால் ஆன்மாக்கட்கு வேறாய் ஈஸ்வரனொருவனில்லை யென்றும்.

இதில் வழுத்திய பிரகிருதி பேதத்தறிவில்லை யென்றும் அதனாலது பகுத்தறியுந் தன்மையைச் செய்யாதென்றும்,



அங்ஙனம் புருடன் கூடிச் செய்விக்குமே யென்னில் அது அசுத்த மாயையின் தோற்றமாகிய காலம் நியதி கலை வித்தை அராகமென்னும் ஐந்து தத்துவங்களோடு ஆன்மாவானது கூடி சப்தாதி விஷயங்களை நுகருமவதரத்துப் பஞ்சகஞ்சுகனாகிப் புரமென்னுஞ் சரீரத்திலிருத்தல் காரணமாய்ப் புருடனென்னும் பெயர் பெற்றிருத்தலினால் அவன் அறிவிப்பனென்பது குருடன் முதுகின் முடவனிருந்துகொண்டு இருவர் காலுங் கண்ணுமாக நடப்பதுபோலத் துற்பல மார்க்கமாகுமென்றும் வெளியாகும். அதனால் இவைகட்கு மேற்பொருளுண்டென்று உணரலா மன்றோ.

௧௬. வைசேஷிக மென்பது:—ஆறு சாஸ்திரத்திலொன்றாகிய வைதிக நூலாகும். அதில் நிரீசுர சாங்கியத்தில் நிகழ்த்துகிற புருடனையும் பிரகிருதி மாயையுஞ் சேர்க்குந் தன்மையுள்ள நியதியென்பதொன்று நடுவே நின்று நடாத்தும். அந்நியதிப்பிரிவே உலகமும் உயிருமாகும். இன்னணஞ் செய்யு நியதியே பிரமத்தினியல்பென் றறிதல் முக்தி யென்றும்.

இதில் பிரமமோ அதனியல்பென்கிற நியதியோ பொருளென்று ஐயமுற ஹேதுப்படுவது மன்றி அகங்காரமே ஆன்மாவென்ப தாயிற்று.

## (௬) பாஞ்சராத்திரம்

வேதாந்தமாகிய வர்க்கியபேத சமயம் எட்டுள் :

௧௭. பாஞ்சராத்திரமென்பது:—விஷ்ணுவினால் அவருடைய உந்திக்கமலத்திற் பிறந்த பிரமாவுக்கு ஐந்திராத்திரியளவும் போதித்ததினின் றேற்பட்ட ஒருநூலென்றும். அதில் ௨௪ தத்துவமாகிய குணதத்துவத்திற்குமேல் ௨௫-ம் தத்துவமாய் வாசுதேவனென்றொரு பரம்பொருள் ஆதியிலேயே அருவாய் மாயாசக்தி வடிவாய் அஞ்ஞானமில்லாத

ஞானப் பிரகாசத்தை யுடைத்தாயிருக்குமென்றும், அப் பொருளினின்றும் கிருஷ்ணனும் (மன்மதன்) மகரத்துவஜனும் அநிருத்தனும் ரௌக்கிணேயனும் என நான்கு வியூகங்கள் ஜகத்தைப் படைத்தற்பொருட்டு தோன்றுமென்றும், அந்நான்கு வகுப்பினால் ஜடமும் சித்துமாகிய எல்லாவுலகங்களும் படைக்கப்பட்டனவென்றும், வேதந் தெரிந்த வாசுதேவனாகிய விஷ்ணு தனதிச்சையாலே பிரபஞ்சம் இரக்ஷிப்பது காரணமாகத் திருவுருக்கொண்டு விளங்குகையில் பிரபஞ்சம் ஆதாரங்குலைந்து அதைச் சுமந்திருந்த அனந்தனாகிய பாம்புக்கும் ஆதாரமற்ற தருணம் அப்பாம்பைத் தானே நீர்மேலாசனமாக்கி அந்நீருக்குள் ஆன்மாக்கட்கு உறக்கம் வேண்டித் தான் விழித்துறங்கிக் கிடப்பனென்றும் அந்நாள் பிரசண்ட மாருதத்தால் அடிபட்டொதுங்குண்ட ஆன்மாவாகிய அணுக்கள் விஷ்ணுவி னுந்திச்சுழியை ஆதாரமாக வந்து பொருந்துமென்றும், பின்னர் கர்ப்பமாகி "ஆகாசாத் வாயு: வாயோராக்கினி: அக்கினே ஆப: ஆப: பிருத்வி பிருத்வி நாம் ஔஷதயா" என்னும் வேதப் பிரமாணப்படி தாமரை தோன்றி நீருள்ளமட்டும் வளர்ந்து மேலே மலருமென்றும், அதிற் பிரமா தோன்றி வாசுதேவனருளிய வேதவிதிப்படி உருத்திரனைப் படைப்பனென்றும் அதனால் வாசுதேவனுக்குக் கேசவனென்கிற நாமமொன்றுண்டாயிற்றென்றும், விவரம், கே என்கிற பிரமாவும், ச என்கிற சிவனும், வ என்கிற விஷ்ணுவில் ஐக்கியமும் தோற்றமுமா யிருக்குந் தன்மையை அந்நாமம் அறிவிக்கிறதென்றும் லோகானுக்கிரக பாலன நிமித்தம் வாசுதேவனே தசாவதாரங்களைச் செய்வனென்றும் மாயாகாரியமாகிய தேகேந்திரியாதிக ளெல்லாம் வாசுதேவன் வடிவென்றும் வேதங்களில் உறுதிப்பயனில்லை இந்தப் பாஞ்சராத்திரத்திற்றான் உறுதிப்பயனுண்டென்றும், ஆதலினால் இந்நூன்முறையே தீக்ஷைபெற்று வாசுதேவனை வழிபட்டு அவன்வடிவில் லயமாதலே முக்தி. (தொடரும்)

## கொழும்பு விவேகாநந்த சபையின்

# 35-ம் ஆண்டு விழா

இச்சபை விழா இனிதே நடைபெற்றது. 29-5-38 காலை 9 மணிக்கு, யாழ்ப்பாணம் "இன்னிசை வாணர்" திரு. செல்வத்துரைப் பிள்ளையவர்கள் இன்னிசைப் பாடலோடு விழாத் தொடங்கிற்று. உயர்திருவாளர் (தூத்துக்குடி) சித்தாந்த ஆசிரியர் - ந. சிவகுருநாத பிள்ளையவர்கள், தலைமைப் பேருரையை விளக்கமுறப் பேசினார்கள்; காலை 10-15 மணிக்குத் தொடங்கி மதியம் 12 மணிக்கு முடிக்கப்பெற்றது. தலைவரவர்களுக்கு அறுவகைச் சுவையோடு, பல அடியார் கூட்டத்தோடு விருந்து செய்யப்பட்டது. மாலை 2 மணியிலிருந்து 4 மணி வரை சபையாரின் காரியக்கூட்டம் நடைபெற்றது.

அதன்பின், இறைவழிபாடாற்றி, முற்கூறிய இசைவாணர் திரு. செல்வத்துரைப் பிள்ளையவர்களால் இன்னிசைப் பாடல் நடைபெற்றது. அதன் பின்னர், தலைவர் சித்தாந்த ஆசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள், பெருத்த மகிழ்ச்சி ஆரவாரத்திடையே எழுந்து, "அன்புநெறி" என்பதைப்பற்றி, சித்தாந்த நுணுக்கங்களைத் தெள்ளிதிற் பேசினார்கள். பின்னர், குலசேகரப் பட்டினம் திருவாளர் S. முத்துக்குமாரசாமிப் பிள்ளை அவர்கள் "தொண்டர் ஆண்மையும் தொல்புகழ்ச் சோழரும்" என்பதைப் பற்றித் தெளிவுற, அன்புநெறிக்கு ஓர் இலக்கியமாகப் பேசினார்கள்.

கொழும்பு ஆனந்தா கலாசாலைத் தலைமையாசிரியர் திரு. V. T. S. சிவகுருநாதர் அவர்கள் இருவரையும் பாராட்டிப் பேசியதோடு, பொருட்செறிவுகளையும் எடுத்துச் சொல்லி மகிழ்ந்து பேசினார்கள். இரவு 8 மணிக்கெல்லாம் சிறப்பாய் விழா முடிந்தது.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 11. No. 6

# பெரிய புராணம்

## இரண்டாம் பதிப்பு

சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த பெரிய புராணம் நமது சமாஜத்தின் இரண்டாம் பதிப்பாக இராய வேலூரில் நடைபெற்ற சமாஜ முப்பத்திரண்டாம் ஆண்டு நிறை விழாவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டது. ஏனைய பதினொரு திருமுறைகளின் டபில் கிரவுன் அளவிலேயே இவ்விரண்டாம் பதிப்பு அச்சிடப் பெற்றுள்ளது. மூலம் பைகா எழுத்திலும், முக்கிய சொற்றொடர்களும் பாடல்களும் தடித்த பைக்கா எழுத்திலுமுள்ளன. மொத்தப் பாடல் எண் ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும் குறிக்கப்பட்டுள்ளது. புராண எண், பாட்டெண் முதலியன குறியீட்டுக் குதவியாகத் தரப்பட்டுள்ளன. சேக்கிழார் சுவாமிகள் வரலாறு, அரும்பொருளகராதி (விஷயக் குறிப்புகள்), திருத்தொண்டர் புராண வரலாறு, திருமுறைகண்ட புராணம், பாட்டு முதற்குறிப்பகராதி, யாப்புக் குறிப்பட்ட வணை முதலியன இப்பதிப்பிலுள்ளன. இப்பதிப்பின் துணை கொண்டு பெரிய புராணத்தின் அருமை பெருமைகளையும் சேக்கிழார் திருவாக்கிலுள்ள இலக்கியச் சுவை பக்திச் சுவை முதலியவைகளையும், சேக்கிழார் உபயோகித்துள்ள சந்த வேறுபாடுகள் செய்யுள் வகைகள் முதலியவற்றையும் எளிதில் உணரலாம்.

**தனிப்பிரதி விலை ரூபா ஒன்று அணா ஆறு;**

*ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா பத்து*

**ஆறு பிரதிகள் விலை ரூபா ஏழரை;**

*ரயில்வே பார்சல் கூலி முதலியன வேறு.*

உடனே முன்பண மனுப்பிப் பிரதிகளைப் பெறுக.

"திருவருளகம்"
22-எ, கல்லுக்காரத் தெரு,
மயிலாப்பூர். 10-1-38

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி
சைவ சித்தாந்த மகா சமாஜம்

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Edited and Published by T. V. Volaganathan for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", [illegible] Kallukaran Street, Mylapore, Madras.